www.padippakam.com

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

# புரட்சிக்கனல்

தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சி இதழ்

இதழ் 1 | சுறவம் 2024 | சனவரி 1993

☐ புத்தாண்டு வாழ்த்து 2

☐ பத்திரிகைச் செய்தி 3

☐ அரசியல்-அமைப்பு அறிக்கை 6

☐ கட்சித் தீர்மானம் 41

☐ பொதுச்செயலர் உரை 57

ஆசிரியர் : கார்முகில்

படிப்பகம்

www.padippakam.com

# தி.பி. 2024

# புத்தாண்டு நல்வாழ்த்துக்களுடன் புரட்சிக் கனல்

நீண்ட இடைவெளிக்குப்பின் மீண்டும் உங்கள் கரங்களில் இருக்கும் புரட்சிக் கனல் முதலில் உங்கள் அனைவருக்கும் தனது புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

1980 களின் தொடக்கத்திலிருந்து த.நா.அ.க. வின் அரசியல்-சித்தாந்த ஆயுதமாய் வெளிவரத் தொடங்கியது புரட்சிக் கனல். சந்தர்ப்ப வாதத்துக்கும், வலது திரிபுகளுக்கும் எதிராக மார்க்சிய-லெனினியத்தை உயர்த்திப் பிடித்த போர் வீரனாக அது உங்களிடையே வலம் வந்தது.

த.நா.அ.க. தனது பனிரெண்டு ஆண்டுகால பயண அனுபவத்தில் அதன் முதுகில் ஏறியிருந்த ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம் என்ற வேண்டாத சுமைகளையும், அந்தச் சுமைகள் ஏற்படுத்தி வந்த தடைகளையும் புரிந்து கொண்டது.

இதன் விளைவு த.நா.அ.க.வின் ஆறாவது பிளீனம் இந்த வேண்டாத சுமைகளைத் தூக்கி தூர எறிந்துவிட்ட தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் முதல் மாநாடாகவும் நடைபெற்றது. இ.பொ.க. (மா-லெ) த.நா.அ க., அதன் வரலாற்றுத் தொடர்ச்சியாய்; தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியாய் உதயமாகியது

புரட்சிக்கனல் இவ்வரலாற்றுத் தொடர்ச்சியைத் தனதாக்கிக் கொண்டு இந்த இதழிலிருந்து தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் அரசியல் சித்தாந்த ஆயுதமாய் வெளிவருகிறது.

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி சனநாயகப் புரட்சியுடன் இணைந்த தேசிய விடுதலையைத் தனது குறைந்தபட்ச திட்டமாகவும், சோசலிசம், கம்யூனிசத்தை தனது அதிகபட்ச திட்டமாகவும பிரகடனப்படுத்தியிருக்கிறது.

ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மற்றும் இந்திய தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கு எதிராக அது தனது போர்ப் பிரகடனத்தை முழங்கியிருக்கிறது.

அரசுரிமை மறுக்கப்பட்டுள்ள அடிமைத் தமிழகத்தில் பலம் வாய்ந்த தேசிய விடுதலை இயக்கத்தைக் கட்டமைக்கும் மகத்தான பணியை அது தன் தலைமேல் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தேசியக் கடமையை நிறைவேற்றாத யாரும், சர்வதேசியவாதிகளாக இருக்க முடியாது; தேசிய சூனியவாதிகளும். ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகளும், தரகு பார்ப்பனிய ஏகாதிபத்தியவாதிகளும் நிச்சயமாக பாட்டாளிவர்க்க சர்வதேசிய வாதிகளாக இருக்கமுடியாது என்று பிரகடனப்படுத்தியிருக்கும் இக்கட்சி, மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனை ஒளியில் தேசிய, சர்வதேசியக் கடமைகளை நிறைவேற்ற உறுதி கொண்டிருக்கிறது.

புரட்சிக் கனல் இத்தகைய கட்சியின் வீரமிக்க போர்வாளாக, அரசியல்-சித்தாந்த ஆயுதமாக இந்த இதழிலிருந்து வெளிவருகிறது.

தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி இப்போதுதான் உதயமாயிருக்கிறது. தமிழகப் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாய் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டிருக்கும் இக்கட்சியை தமிழகத்தின் பலம் வாய்ந்த கட்சியாக, தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமையளிக்கும் கட்சியாக மாற்றும் மகத்தான கடமை நம் முன் இருக்கிறது. இக்கடமையை நிறைவேற்றுவதில் முன்னணிப் போராளியாகத் திகழும் புரட்சிக் கனல்.

அதற்குத் தடையாய் இருக்கும் அனைத்து அரசியல்-சித்தாந்த போக்குகளுக்கும் எதிராய் புரடசிக் கனலின் போராட்டம் புயலாய்-கனலாய் தொடரும்.

பலம் வாய்ந்த மார்க்சிய-லெனினியக் கட்சி, அதன் தலைமையிலான பலம் வாய்ந்த தமிழ் தேசிய விடுதலை இயக்கம், அரசுரிமை பெற்ற வளங்கொழிக்கும் தமிழ்நாடு, எதிர் கால சோசலிச, கம்யூனிச சமுதாயம், சமாதானம், சமத்துவம், சகோதரத்துவம் நிலவும் உலகம்-இதுதான் தமிழகப் பாட்டாளி வர்க்கத்தின் இலட்சியம்; இதுதான் தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் இலட்சியம; இதுதான் புரட்சிக் கனலின் இலட்சியமும் கூட.

தோழர்களே, புரட்சிக் கனலுடன் கைகோர்த்து நில்லுங்கள்; இலட்சியப் பயணத்தை வெற்றிப் பயணமாக்குவோம்!

படிப்பகம்

www.padippakam.com



# வெற்றிகரமான

## இ. பொ. க. (மா-லெ), த. நா. அ. க.வின்

# ஆறாவது பிளீனமும்

## தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின்

# முதல் மாநாடும்

(தி.பி. 2023, நளி, 27-30)

இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) தமிழ்நாடு அமைப்புக் கமிட்டியின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆறாவது பிளீனமும், தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் முதல் மாநாடும் திருவள்ளுவர் ஆண்டு 2023, நளித் திங்கள் 27-30ல் (1992, டிசம்பர் 12-15) வெற்றிகரமாக நடந்து முடிந்தது.

கட்சிப் பெயர் தாங்கிய செம்பதாகைகளும், செங்கொடித் தோரணங்களும், மார்க்சிய ஆசான்களின் படங்களும் அணி செய்த அரங்கில், நீண்ட உட்கட்சி விவாதத்திற்குப்பின் தமிழகம் முழுவதிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருந்த பிரதிநிதிகள் நளி, 27 (டிசம்பர் 12) காலை பத்துமணிக்கு ஒருசேர தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்திய பின் த. நா. அ.க. செயலர் தோழர் கார்முகில் அவர்களின் துவக்க உரையுடன் பிளீனம் எழுச்சிகரமாக துவங்கியது. பிளீனத்தில் அரசியல் - அமைப்பு அறிக்கை, கட்சித் தீர்மானம், கட்சி அமைப்பு விதிகள் ஆகிய ஆவணங்கள் சனநாயகப் பூர்வமான விவாதங்களுக்குப் பின் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. அரசியல்-அமைப்பு அறிக்கை நிறைவேற்றத்துடன் இ.பொ.க. (மா-லெ) த. நா. அ. க. வின் வரலாற்றுப் பூர்வமான தொடர்ச்சியாக தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் உதயத்தையும் அதன் மாநாட்டையும் பிரதி நிதிகள் அனைவரும் ஒருமனதாக அங்கீகரித்தனர்.

இந்த மாநாடு இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதார வாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு வேலைமுறை ஆகியவற்றுக்கு முடிவு கட்டியிருக்கிறது. இந்தியாவை தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்று சரியாக வரையறுத்திருப்பதுடன் தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியைக் கட்டி தமிழக விடுதலைப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் தீர்மானங்களை மேற்கொண்டிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com



மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அரசியல்-அமைப்பு அறிக்கையும், கட்சித் தீர்மானமும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுப் பண்பாக இருப்பதையும் அது இந்திய புரட்சிப் இயக்கத்தின் தேக்கத்திற்கு அடிப்படைக் காரணமாக இருப்பதையும் தெளிவு படுத்தியுள்ளன. ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தின் துணை விளைவான தேசிய சூனியவாதமும், தன்னியல்பு வேலைமுறையும் மார்க்சிய-லெனினிய புரட்சியாளர்கள் தமது சொந்த மக்களிடமிருந்து தனிமைப்பட அடிப்படைக் காரணமாக இருப்பதையும் இந்த ஆவணங்கள் தெளிவுபடுத்தியுள்ளன. இந்தியா ஒரு அரைகாலனி அரைநிலபிரபுத்துவ நாடு என்ற இ.பொ.க. (மா-லெ)யின் வரையறுப்பை தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என திருத்தி இந்த ஆவணங்கள் சரியாக வரையறுத்திருப்பதுடன் இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கங்கள் தமது சொந்த தேசிய விடுதலையுடன் இணைந்த வடிவத்தில் மட்டுமே சனநாயகப் புரட்சியை நிறைவு செய்ய முடியும் — இந்த வழியிலேயே இந்தியாவில் புதிய சனநாயகப் புரட்சி நிறைவுற முடியும் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளன. இதன் மூலம் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு வேலைமுறை ஆகியவற்றுக்கு முடிவுகட்டியுள்ளன.

மேலும் அரசியல்-அமைப்பு அறிக்கை, த.நா.அ.க.வின் கடந்த பனிரெண்டு ஆண்டுகால வரலாற்றைத் தொகுத்து அதன் வேலைமுறையிலும், ஊழியர் கொள்கையிலும் தன்னியல்பு நிலவியதையும் அதற்கு அடிப்படைக் காரணமாக இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் நிலவுவதையும் சுட்டிக்காட்டியிருக்கிறது; கூடவே த. நா. அ. க. வின் கோட்பாட்டு முடிவுகளில் சரி, தவறுகளைப் பகுத்து சுய விமர்சன ரீதியில் வந்திருப்பதுடன் சரியான அம்சங்களை உயர்த்திப் பிடித்துள்ளது; த.நா.அ.க. கடந்த பனிரெண்டு ஆண்டுகளில் இ. பொ. க. (மா - லெ) யின் மூன்றாவது போக்கை மிகச் சரியாக முன்னெடுத்துச் சென்றதன் மூலம் அடைந்த முன்னேற்றங்களையும் இவ்வறிக்கை தொகுத்துரைத்துள்ளது.

கட்சித் தீர்மானம், இன்றைய மாறியுள்ள சர்வதேச நிலைமைகளில் மூன்றுலகக் கோட்பாடு முடிவுக்கு வந்துவிட்டதையும், அமெரிக்க ஏகாதிபத்தியமே உலகின் ஒரே மேலாதிக்க வல்லரசாக இருப்பதையும் எடுத்துரைத்திருப்பதுடன் அய்ரோப்பிய பொருளாதார சமூக நாடுகள் குறிப்பாக செர்மனியும், சப்பானும் மேலாதிக்கத்திற்குப் போட்டியிடும் நிலையில் உள்ளதையும், இந்தியா போன்ற துணை ஏகாதிபத்திய நாடுகள் பிற பிராந்திய நாடுகளையும், தேசிய இனங்களையும் மேலாதிக்க நோக்குடன் அடக்கி ஒடுக்கி அல்லது அச்சுறுத்தி வருவதையும் வகைபிரித்து தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் சோசலிச சமுதாயத்தில் வர்க்கப்போராட்டத்தை பிரதானக் கண்ணியாக கொள்வதன் மூலமே கம்யூனிசத்தை நோக்கி முன்னேற முடியும் என்ற கோட்பாட்டை உறுதியாக பற்றிக் கொண்டுள்ள கட்சித் தீர்மானம், சோசலிச நாடுகள் சோசலிச கட்டுமானத்தில் பெற்ற அனுபவங்கள் பருண்மையாக தொகுக்கப்படவேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கிறது.

தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் உதயமும், இக்கட்சியின் தீர்மானமும், முதலாவதாக, ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பதன் மூலம் ஊழியர் கொள்கையிலும், வேலைமுறையிலும் நிலவிய தன்னியல்புக்கு முடிவு கட்டி கட்சியின் குணாம்ச ரீதியான வளர்ச்சிக்கு வழிவகுத்திருக்கிறது. இரண்டாவதாக, இ.பொ.க. (மா - லெ) புரட்சி இயக்கத்தின் தேசிய சூனியவாதத்திற்கு முடிவு கட்டியிருப்பதன் மூலம் இனியும் இ.பொ.க. (மா - லெ) அதே நிலையில் தொடர முடியாது என்பதையும் புரட்சி இயக்கத்தின் வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கிவிட்டது என்பதை

படிப்பகம்

www.padippakam.com



யும் முன்னறிவித்திருக்கிறது. மூன்றாவதாக, அரசியல் அரங்கில் அனைத்துவகை அரசியல் சக்திகளும் ஒன்று தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்திய முகாம் அல்லது சனநாயகப் புரட்சி யுடன் இணைந்த தேசிய விடுதலை முகாம் என்ற இருமுகாம்களில் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ள வேண்டிய புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்துள்ளது. தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் உதயமும் மாநாட்டின் வெற்றியும் இவ்வாறு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாக அமைந்துள்ளன.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடு பலம் பொருந்திய தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியைக் கட்டும் கடமையை முன்வைத்துள்ளது. அதற்கு ஒரு சித்தாந்தத் தளத்தை நிறுவுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது.

மாநாடு முன்வைத்துள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கு கட்சியின் தலைமைக் கமிட்டி யாக மைய அமைப்புக் குழு ஒன்றை மாநாடு ஒருமனதாக தேர்வு செய்துள்ளது. த.நா.அ.க.வின் தொடக்கத்திலிருந்து கட்சியின் செயலராக தேர்வு செய்யப்பட்டு கட்சிக்கு அரசியல் - சித்தாந்த தலைமையளித்து வழிநடத்தி வந்த தோழர் கார்முகில் தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் பொதுச் செயலராக மாநாட்டில் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பொதுச் செயலரும், அவர் தலைமையிலான மைய அமைப்புக் குழுவும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்ட பின்னர் மாநாட்டுப் பிரதிநிதிகள் வாழ்த்துரை வழங்கினர். அவை கட்சி முழுவதும் நிலவும் அரசியல் உணர்வுப் பெருக்கை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன; ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்தும், தேசிய சூனியவாதத்திலிருந்தும் விடுபட்டு தமது சொந்த மண்ணுடனும், மக்களுடனும் அய்க்கியப்படுவதில் வெற்றி கண்டுவிட்ட மார்க்சிய-லெனினிய புரட்சியாளர்களின் எழுச்சிப் பேருரைகளாக அவை திகழ்ந்தன.

பிரதிநிதிகளின் வாழ்த்துரையைத் தொடர்ந்து நிகழ்ந்த மைய அமைப்புக் குழு உறுப்பினர்களின் ஏற்புரைக்குப்பின் மாநாட்டு நிறைவுரை ஆற்றிய பொதுச் செயலர், தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி தோன்றியிருப்பதன் வரலாற்று முக்கியத்துவத் தையும், கட்சியின் எதிர்கால திசைவழியையும் சுட்டிக் காட்டினார். இறுதியாக பன்னாட்டுப் பண் இசைக்கப்பட்டதுடன் முற்றிலும் இரகசியமாக நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இ. பொ. க. (மா-லெ), த. நா. அ. க. வின் ஆறாவது பிளீனமும், த. நா. மா-லெ கட்சியின் முதல் மாநாடும் வெற்றிகரமாக முடிவுக்கு வந்தது.

இவண்

கார்முகில்

பொதுச் செயலர்

தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சி

2, சிலை 2023

(17, டிசம்பர் 1992)

படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம் தன்னியல்பு ஆகியவற்றுக்கு முடிவுகட்டுவோம்!

# தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியைக் கட்டி தமிழக விடுதலைப் புரட்சியை முன்னெடுப்போம்!

**(ஆறாவது பிளீனத்தில் நிறைவேற்றப்பட்டது)**

**தோழர்களே !**

தமது அமைப்பின் அய்ந்தாவது பிளீனம் முடிவுற்று இரண்டாண்டுகள் முடிவுறும் தறுவாயில் மீண்டும் ஆறாவது பிளீனம் கூடி இருக்கிறது. இப்பிளீனம் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு ஆகியவற்றுக்கு முடிவுகட்டு கிறது. தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியைக்கட்டிதமிழக விடுதலைப் புரட்சியை முன்னெடுத்துச்செல்வதற்கான தீர்மானத்தை மேற்கொள்கிறது. இக்காரணத்தால் இப்பிளீனம் புதிததாக உதயமாகும் தமிழ் நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் முதல் மாநாடாகவும் அமைந்திருக்கிறது. இந்த நேரத்தில் ஏறக்குறைய எழுபதாண்டு கால வரலாறு கொண்ட இந்தியப்பொதுவுடைமை இயக்கத்திலும், ஏறத்தாழ பனிரெண்டு ஆண்டு கால வரலாறு கொண்ட நமது அமைப்பிலும் நிலவும் தேக்கத்திற்கான காரணங்களையும் நாம் இத்தீர்மானங் களுக்கு வந்த விதத்தையும் தொகுத்தறிவது பொருத்தமானதாகும்.

## 1

## இந்தியப் பொதுவுடைமை இயக்கம் : பொதுப் பண்பாக ஏகாதிபத்திய பொருளாதாரவாதம்

இந்தியப்பொதுவுடைமைஇயக்கத்திற்கு ஏறத்தாழ எழுபது ஆண்டுகால வரலாறு இருப்பினும் அதன் முதல் பேராயம் 1943 லேயே நடைபெற்றது. பம்பாயில் நடை பெற்ற முதல் பேராயத்திற்குப் பின் 1948ல் கல்கத்தாவிலும், 1954ல் மதுரையிலும், 1956ல் பாலக்காட்டிலும், 1958ல் அமிர்தர சிலும், 1961ல் விசயவாடாவிலும், 1964ல் கல்கத்தாவிலும் அதன் அடுத்தடுத்த பேரா யங்கள் நடைபெற்றன. 1964ல் கல்கத்தாவில் நடைபெற்ற பேராயம் கட்சி பிளவுபட்டபின் நடைபெற்ற இ. பொ. க. (மா) வின் பேராயமாகும். அதன்பின் கட்சி மேலும் பிளவுபட்டு இ.பொ.க (மா - லெ)யின் பேரா

www.padippakam.com



யமாக எட்டாவது பேராயம் மீண்டும் கல்கத்தாவிலேயே நடைபெற்றது. ஆனால் தொடக்கத்திலேயே இடது தீவிரவாதத்தில் சிக்கிய இ.பொ.க. (மா - லெ) வெகுவிரை விலேயே பல்வேறு குழுக்களாக சிதறுண்டது. அக்குழுக்கள் தத்தம் சொந்த மாநாடுகளை யும், பேராயங்கள் மற்றும் பிளீனங்களையும் நடத்தி வருகின்றன. அவ்வாறு பிளவுபட்ட குழுக்களில் ஒன்றாகவே கடந்த பனிரெண்டு ஆண்டுகளாக த. நா. அ. க. தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது. அது கடந்த பத்தாண்டுகளில் மூன்றுபிளீனங்களைநடத்தி தற்போது நான்காவது பிளீனத்தை நடத்தி கொண்டிருக்கிறது.

1920 களிலிருந்து ஏறத்தாழ எழுப தாண்டுகள் கொண்ட இந்தியப் பொது-வுடைமை இயக்க வரலாற்றை ஆறு கட்டங் களாகப் பிரித்து இந்தியப் பொதுவுடைமை இயக்கம் என்ற நூலில் (1984ல்) தொகுத் தளித்திருக்கிறோம். அதன் வரலாறு இடது, வலது தவறுகளின் வரலாறாகவே இருந்து வந்துள்ளதுஎன்பதையும், கட்சிக்குள் இருந்த வலது தவறுகளை எதிர்த்த போராட்டம் கட்சியை இடது திரிபுகளுக்கும், இடது திரிபுகளை எதிர்த்த போராட்டம் வலது திரிபுகளுக்கும் இட்டுச் சென்றுள்ளன என்ப தையும், 1920-30 வரை பொதுவுடைமை இயக்கம் பிரதானமாக வலது சந்தர்ப்ப வாதத்திலும் 1930-35 வரை இடது விலகலி லும் 1935-48 வரை மீண்டும் சந்தர்ப்பவாதத் திலும் 1948 - 51 வரை இடது தீவிரவாதத் திலும் 1951 -67 வரை மீண்டும் வலது சந்தர்ப்பவாதத்திலும், 1967க்குப் பின் பிரதானமாக இடது தீவிரவாதத்திலும் சிக்கிக் கொண்டது என்பதையும் அந்நூல் தொகுத்தளித்துள்ளது.

இத்தொகுப்பின்படி எழுபதாண்டு கால வரலாற்றில் மூன்று கட்டங்களில் வெளிப் படும் வலது திரிபு என்பது பிரதானமாக காங்கிரசுக் கட்சியுடனான உறவைப் பேணு வதில் வெளிப்பட்டது. மற்ற மூன்று கட்டங் களிலான இடது திரிபு என்பது முதல் கட்டத் தில் ஏகாதிபத்தியத்துக்கெதிரான குறிப்பான திட்டம் வைக்கத் தவறியதிலும், இரண்டா வது கட்டத்தில் சோசலிசப்புரட்சிக் கட்டத் திற்கும், சனநாயகப் புரட்சிக் கட்டத்திற் கும் இடையிலான வேறுபாட்டை சரியாகக் கையாளாததிலும் மூன்றாவது கட்டத்தில் ம. தி. அமைப்பு, இயக்கங்களை முற்றாக நிராகரித்து தனிநபர் அழித்தொழிப்பை ஒரே போராட்டமுறையாக முன் வைத்ததி லும் பிரதானமாக வெளிப்பட்டது; சுருங்கக் கூறின் வலது திரிபு என்பது எதிர்ப்புரட்சி வர்க்கங்களுடன் கொண்ட சமரச உறவை யும் இடது திரிபு என்பது புரட்சிகர அய்க்கிய முன்னணியில் அணிதிரட்டப்பட வேண்டிய சக்திகளிடமிருந்து தனிமைப்பட்டதையும் குறித்தது. இந்த இடது, வலது திரிபு களைக் களைந்து அடிப்படையில் சரியான அரசியல் கோட்பாட்டு நிலைப்பாடுகளை முன்வைத்தது த.நா. அ. க. வின் 1983ம் ஆண்டுப் பிளீனம். அது ஆளும் வர்க்கங் களுடனான சமரசமற்ற போராட்டத்தை முன்வைத்தது; பாராளுமன்ற வாதத்தை எதிர்த்தது; அதே நேரத்தில் ம.தி. வழியில் ஊன்றி நின்று குறிப்பான திட்டத்தை முன்வைத்து புரட்சிகர அய்க்கியமுன்ன ணிக்கு வழிகாட்டியது.

ஆனால் இந்த வரலாற்றுத் தொகுப்பில் அடிப்படையான விசயம் ஒன்று இடம் பெறவில்லை. இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தில் தேசம் பற்றிய கருத்தியலில் நிலவிய ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் கண்ணோட்டமும், அது விளைவித்த கேடு களுமே அந்த அடிப்படையான விசயமாகும். இதை அடிப்படையானது என்று நாம் கூறு வதற்குக் காரணம் கட்சி, அய்க்கியமுன்னணி பற்றிய நிலைப்பாடுகளில் இது மாற்றம் விளைவிக்கக் கூடியதாகும். கட்சி ஒரு புரட்சிகர கட்சியாக வெற்றி பெறுவதா அல்லது பொருளாதாரவாதத்துக்கும் பிற்போக்குக்கும் பலியாகி சீரழிவதா என் பதைத் தீர்மானிக்கக் கூடியதாகும். இருந்தும் தேசிய இனப்பிரச்சனை பற்றிய கட்சியின் நிலைப்பாடுகளை இந்நூலில் நாம் பரிசீலிக்கவில்லை.

இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருப்பதும் அவை சனநாயகப் புரட்சிக் கட்டத்தில் இருப்பதும், தேசம் பற்றிய விசயத்தை மேலும் முக்கியத்துவம் வாய்ந் ததாக்குகிறது. ஏனெனில் சனநாயகப்

படிப்பகம்

www.padippakam.com



புரட்சியின் வெற்றி தேசிய உருவாக்கத்துடன் பிரிக்க முடியாதவாறு இணைந்திருக்கிறது.

நிலப்பிரபுத்துவத்தின் மீதான வெற்றியே ஒரு தேசத்தை உருவாக்குகிறது. சனநாயகப் புரட்சியின் வெற்றி கூட அப்படித்தான். இந்தியா ஒரு காலனியாக இருந்தபோது இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்களும் தேசங்களாக மாறும் நிகழ்ச்சிப் போக்கில் இருந்தன. இந்நிகழ்ச்சிப் போக்கு இன்றும் தொடர்கிறது. இந் நிகழ்ச்சிப் போக்கின் நிறைவின் ஊடாகவே சனநாயகப் புரட்சியும் வெற்றியடையமுடியும். இது நிலப்பிரபுத்துவத்துக்கு மட்டுமின்றி ஏகாதிபத்தியத்துக்கும் எதிரானதாகும்.

ஆனால் இந்தியப் பொதுவுடமை இயக்கம் இறுதிவரை இதை உணரவோ அங்கீகரிக்கவோ இல்லை. அது ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசம் அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு தேசம் என்ற கருத்தோட்டத்தையே கொண்டிருந்தது.

தேசம் என்பது பற்றியும், தேசத்தின் உருவாக்கத்திற்கும் சனநாயகப் புரட்சிக்கும் உள்ள தொடர்பு பற்றியும் மார்க்சியம் தெளிவாக அறிவுறுத்தியிருந்த போதிலும் 1942—43 வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியா ஒரு பல்தேசிய இன காலனிநாடு என்பதையே உணரவில்லை. காங்கிரசுக் கட்சியைப் போலவே இந்தியா முழுவதும் ஒரே தேசம் என்ற கருதுகோளின் அடிப்படையிலேயே கம்யூனிஸ்ட் கட்சி இயங்கிவந்தது. இந்திய ஒற்றுமை என்பதை இந்து - முசுலீம் ஒற்றுமை என்பதாகவே கருதிவந்தது. 1938ல் கூட இந்தியா ஒரு தேசம் என்றும் அதில் சிறுபான்மையினரான முசுலீம்களின் மத, கலாச்சார உரிமைகளையும், கோரிக்கைகளையும் அனுமதிப்பதன் மூலம் இத்தேசத்தின் ஒற்றுமையைப் பாதுகாப்பது என்றும் காங்கிரசுக் கட்சி தீர்மானம் வெளியிட்டபோது கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடும் அதுவாகவே இருந்தது.

1940ல் முசுலீம் லீக், பாகிஸ்தான் கோரிக்கையை முன்வைத்ததும் அதே நேரத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் மொழி வழி மாநில அமைப்புகளுக்கான போராட்டம் தொடர்ந்து நடந்து வந்ததும் (கர்நாடகா, ஆந்திரா, ஒரிசா, மகாராசுடிரா போன்றவை தனிமாநிலக் கோரிக்கையை முன்வைத்திருந்தன. தமிழ்நாட்டில் தனிநாடு கோரிக்கை எழுந்திருந்தது. நாட்டின் பல பகுதிகளில் மக்கள் மொழி அடிப்படையில் பிரிந்த முரண்பாடுகள் வெளிப்பட்டுவந்தன) கட்சியை தேசிய இனப்பிரச்சினை பற்றி பரிசீலிக்கத் தூண்டியது. ''இந்தியா இன்று ஒரே முழுமை என்று கூறப்படுகிறது. ஆனால் இந்தியாவில் புரட்சி எழுச்சி நடக்கும்போது இதுவரை அறிந்திராத தேசிய இனங்கள் பல தமது சொந்த மொழி, கலாச்சாரம்ஆகியவற்றுடன் அரங்கில் தோன்றும்'' என்று 1925ல் ஸ்டாலின் கூறியிருந்ததும், தேசங்கள்பற்றிய அவருடைய வரையறுப்பும் கட்சியின் கவனத்தை ஈர்த்தன. இவற்றினடிப்படையில் தேசிய இனப் பிரச்சினை பற்றி கட்சி பரிசீலித்தது. இப் பரிசீலனையின் முடிவில் 1942 செப்டம்பரில் கூடிய மத்திய கமிட்டி இந்தியா ஒரு பல்தேசிய இன நாடு என்றும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே இந்திய அய்க்கியத்தைப் பாதுகாக்க முடியும் என்றும் முடிவுக்கு வந்தது. இதை 1943ல் நடைபெற்ற கட்சிப் பேராயம் உறுதி செய்தது. இன்றைய பாகிஸ்தான் பகுதி உட்பட்ட இந்தியாவில் வளர்ச்சியடைந்த தேசிய இனங்கள் மொத்தம் பதினேழு இருப்பதாகவும் பட்டியலிட்டது.

தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை அளிப்பது பற்றிய தீர்மானம் தொடர்ந்து 1948ல் நடைபெற்ற இரண்டாவது கட்சிப் பேராயத் தீர்மானத்திலும், 1953 - 54ல் நடைபெற்ற மூன்றாவது கட்சிப் பேராயத் தீர்மானத்திலும் இடம் பெற்றன.

மொழிவழி மாநில அமைப்பு குறித்த விவாதம் வந்தபோது அதை கட்சி உறுதியாக ஆதரித்து மொழிவழி மாநில அமைப்புகளுக்கான போராட்டத்தை வரவேற்றது; மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்படுவது நீண்ட போராட்டங்களின் விளைவாக சனநாயக சக்திகளுக்குக் கிடைத்த வெற்றி என வர்ணித்தது. மொழிவழி மாநில அமைப்புகளுக்குப் பதிலாக அவற்றை

படிப்பகம்

www.padippakam.com



இணைத்து கோட்பாடற்ற பிரதேச இணைப்புகளை மேற்கொள்வது என்ற தீர்மானத்தை (வங்கம்-பீகார் இணைப்பு, தட்சிணப் பிரதேசம், பட்சமா பிரதேசம் ஆகிய ஆலோசனைகளை) எதிர்த்தது.

ஆனால் 1964ல் கட்சி பிளவுபட்டபின் இ. பொ. க., இ. பொ. க. (மா) ஆகிய இரு கட்சிகளுமே கட்சித் திட்டத்திலிருந்து தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானத்தை நீக்கி விட்டன. இது குறுகிய இனவாதத்துக்கும், பிரிவினை வாதத்துக்கும் வழிவகுக்கும் என்று இரு கட்சிகளும் கூறின. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது இரசியாவின் நிலைமைகளில் லெனினால் தீர்மானிக்கப் பட்டது என்றும், அது எல்லா நாடுகளுக்கும் பொதுவிதியல்ல, இந்தியாவின் குறிப்பான சூழலில் அது பொருந்தாது என்றும் இ. பொ. க. (மா) கூடுதலாக புரட்டல்வாத விளக்கம் அளித்தது.

ஆனால் இ. பொ. க. (மா) விலிருந்து பிரிந்து தோன்றிய இ. பொ. க. (மா - லெ) தனது கட்சித் திட்டத்தில் மீண்டும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைத் தீர்மானத்தை இடம்பெறச் செய்தது. இத் தீர்மானத்தின் அடிப்படையில் நாகா, மிசோ மற்றும் அனைத்து தேசிய விடுதலைப் போராட்டங்களையும் உறுதியாக ஆதரித்தது. அதே நேரத்தில் இ. பொ. கா.வும், இ. பொ. க. (மா)வும் இவை இந்தியாவைப் பிளவுபடுத்திட குறுகிய இனவாதிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் செய்யும் சதி என்று கூறி எதிர்த்தன.

1942-43லிருந்து ஒன்றாயிருந்த கம்யூனிஸ்ட் கட்சியும் பின்னர் இ. பொ. க. (மா-லெ)யும் தமது கட்சித்திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைத் தீர்மானத்தை சேர்த்துக் கொண்டிருந்தது; ஒன்றாயிருந்த கம்யூனிஸ்ட் கட்சிக்கு மொழி வழி மாநில அமைப்புகளையும் அதற்கான போராட்டங்களையும் ஆதரிப்பதற்கும், இ. பொ. க. (மா - லெ)க்கு தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரிப்பதற்கும் உதவியது. எனினும் தேசிய இனப் பிரச்சினை குறித்த இந்தத் தீர்மானம் இந்தியாவில் சனநாயகப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லப் போதுமானதாக இல்லை. காரணம், இரசிய போல்சுவிக் கம்யூனிஸ்ட் கட்சி அந்நாட்டின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மேற்கொண்ட தீர்மானங்களைப் பின்பற்றி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தனது கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானத்தை சேர்த்ததே தவிர இரசியாவின் தேசிய இனப்பிரச்சினையிலிருந்து இந்தியாவில் தேசிய இனப் பிரச்சனை வேறுபட்டிருக்கும் விதம் பற்றிய ஆய்வு எதையும் மேற்கொண்டு அதற்கேற்ப தீர்மானங்களை மேற்கொண்டிருக்கவில்லை. இ. பொ. க. (மா - லெ) தனது கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற தீர்மானத்தை மீண்டும் இணைத்துக் கொண்டது கூட 1943 - 53 கால கட்சித் திட்டங்களின் தேசிய இனப் பிரச்சனை பற்றிய நிலைப்பாட்டை மீட்டமைத்துக் கொண்டதாக இருந்ததே அன்றி இந்திய நிலைமைகள் குறித்த பருண்மையான ஆய்வுகளிலிருந்து பெறப்பட்டதாக இல்லை.

இரசியாவில் ஜாராட்சியின் கீழ் பெரிய ருஷ்ய தேசிய இனம் ஒடுக்கும் பெரும் தேசிய இனமாகவும் மற்ற தேசிய இனங்கள் ஒடுக்கப்படும் தேசிய இனங்களாகவும் இருந்தன. லெனின் தலைமையிலான போல்சுவிக் கட்சி ஒடுக்கும் தேசிய இனமான மாருஷ்ய தேசிய இனத்தின் பலம் பொருந்திய சக்தியாகவும், புரட்சிக்குத் தலைமையளிக்கும் தீர்மானகரமான சக்தியாகவும் வளர்ந்திருந்தது. இந்நிலையிலேயே அது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை - தேசிய அரசுரிமையை அங்கீகரித்து அதன் மூலம் ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கக் கட்சிகளை தன்னுடன் அய்க்கியப்படுத்தி புரட்சியை வெற்றிகரமாக முடிவுக்குகொண்டு வந்தது. ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் ஒன்றிணைந்து போராடியதன் மூலம் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின்பாட்டாளிவர்க்கம் தமது சொந்த தேசிய இனங்களின் தேசிய அரசுரிமையையும், சனநாயகப் புரட்சியையும் வென்றன. ஆனால் இந்தியாவில் நிலை என்ன? இந்தியாவும், இரசியாவும் பின்தங்கிய

www.padippakam.com



பல்தேசிய இன நாடு என்பதில் ஒன்றுபட்டிருப்பினும் இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் என்ற ஒன்று இல்லை. எனவே ஒடுக்கும் தேசிய இனத்தின் பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்க இயக்கம், அது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது, அதை ஏற்று அவை அதனுடன் ஒன்றுபடுவது என்ற பிரச்சினைகளுக்கெல்லாம் இங்கு இடமே இல்லை. இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் என்ற ஒன்று இல்லை எனினும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு - அவற்றின் மொழி, இன சமத்துவம் மறுக்கப்பட்டு தேசிய இன ஒடுக்குமுறை - அடிமைத்தனம் நிலவுகிறது. இதனால் இந்தியாவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சனநாயகப் புரட்சி என்பது தேசிய இனங்களின் தேசிய விடுதலைப் புரட்சியுடன் இணைந்த வடிவில் மட்டுமே நிறைவேற முடியும், இங்கு ஒன்றுபட்ட கட்சி ஒட்டு மொத்த புரட்சி என்பது சாத்தியம் இல்லை.

இரசிய நிலைமையில் அந்நாட்டின் தேசிய இனங்களின் தேசிய அரசுரிமையையும் சனநாயகப் புரட்சியையும் முதன்மையான நோக்கமாகக் கொண்டு போல்சுவிக் கட்சி தனது கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானத்தை சேர்த்தது. தேசிய இனங்களின் ஒட்டுமொத்த அய்க்கியம் என்பது அதன் விளைபொருளாக இருந்தது.

ஆனால் இந்திய நிலைமையில் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானம், இந்தியா இன ரீதியாகவோ, மத ரீதியாகவோ பிளவுபட்டு விடாமல் அய்க்கியப்படுத்துவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டு கட்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்டது. எனவே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானங்கள் செயல்பாடுகள் அனைத்தும் இத்தீர்மானத்திற்குப் பின்னும் 'இந்திய தேசிய அய்க்கியம்' பாதுகாப்பது என்ற முறையிலேயே அமைந்திருந்தன. இதன் தர்க்க ரீதியான விளைவு கட்சி பிளவுபட்டபோது இருகட்சிகளுமே அத்தீர்மானத்தை கட்சித்திட்டத்திலிருந்து நீக்கி விட்டதாகும்.

இ. பொ. க. (மா - லெ) தனது கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானத்தை மீண்டும் சேர்த்துக் கொண்டதால் இந்திய தேசியம் என்ற கருத்தாக்கத்திலிருந்து விடுபட்டு விடவில்லை. காலனிய கால ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை அதன் கட்சித் திட்டம் தேசிய விடுதலைப் போராட்டம் என்றே வர்ணித்தது. இந்தியாவின் அரசியல் நிலைமைகள் குறித்த தீர்மானங்கள் அனைத்தும் தேசிய நிலைமைகள் என்றே வர்ணிக்கப்பட்டன. உண்மையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்பதே 'இந்திய தேசியம்' என்ற கருத்தாக்கத்திலிருந்து விடுபடாததன் வெளிப்பாடேயாகும்.

இவ்வாறு இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருப்பதையும் அவற்றின் சுயநிர்ணய உரிமையையும் இந்தியப் பொதுவுடைமை இயக்கம் அங்கீகரித்த பின்னரும் கூட அது 'இந்திய தேசியம்' என்ற கருத்தோட்டத்திலிருந்து இறுதிவரை விடுபடவே இல்லை. இந்திய தேசியம் என்ற கருத்தோட்டம் தேசம் பற்றிய மார்க்சிய வரையறைக்கு முற்றிலும் மாறானது என்றபோதிலும் இந்தியப் பொதுவுடைமை இயக்க வரலாறு முழுவதும் அதன் தொடக்கம் முதல் இறுதிவரை இக்கருத்தோட்டத்தை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருக்கிறது. மொழி முதலான இனக்கூறு எதுவும் இல்லாத ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்திய தேசியம் என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையிலேயே அது தனது சனநாயகப் புரட்சித் திட்டம் பற்றிய கருத்தை வளர்த்துக் கொண்டிருந்தது. இதனால் தேசங்களின் உருவாக்கத்திலிருந்து சனநாயகப் புரட்சியை அது தனியாகப் பிரித்துவிட்டது. இது இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்களையும், அவை நவீன தேசங்களாக உருவாகும் நிகழ்ச்சிப் போக்கையும் 'இந்திய தேசியத்திற்கு' பலியாக்கும் ஏகாதிபத்தியவாதம் ஆகும். இவ்வாறு மொழி முதலான பொதுப் பண்புகள் (இனக்கூறு) ஏதுமில்லா ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்திய தேசியம் என்ற பொருளாதார (சமூகக் காரணி) அம்சத்தை மட்டும்

www.padippakam.com



கருத்தில் கொண்டு இந்திய சனநாயகப் புரட்சித் திட்டத்தை கட்சி வகுத்துக் கொண்டது ஏகாதிபத்திய பொருளாதார வாதம் ஆகும். இதனால் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் தத்துவார்த்த அடிப்படை ஏகாதிபத்திய பொருளாதார வாதத்துக்கு மேல் ஒன்றும் இல்லை என்றாகியது. இ. பொ. இயக்கத்தில் எப்பிரிவாக இருந்தாலும் இதில் விதி விலக்கில்லை. உண்மையில் இந்த ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திற்கும் மார்க்சிய - லெனினியத்திற்கும் எவ்வித ஒட்டுறவும் இல்லை.

2

## இ. பொ. க., இ. பொ. க (மா) : ஏகாதிபத்திய பொருளாதார வாதத்திலிருந்து தரகு- பார்ப்பனியத்திற்கு

இந்திய தேசியம் என்ற போலியான தேசியம் பற்றிய கருத்தோட்டத்தை கட்சி தொடக்கத்திலிருந்து தொடர்ந்து கொண்டிருந்ததால் அதன் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் தவிர்க்க முடியாமல் பிற்போக்கில் முடிந்தது. இந்திய தேசியம் பற்றிய கருத்தோட்டத்தால் இந்தியப் பெருமுதலாளிகளை அவர்கள் தேசம் கடந்த தரகு முதலாளிகளாய் இருந்தும் தேசிய முதலாளிகள் என்றும் அவர்களுடைய அரசியல் கட்சிகளான காங்கிரசு-முசுலீம் லீக் கட்சிகளைத் தேசிய இயக்கம் என்றும் கட்சி அங்கீகரித்தது. (பாகிஸ்தான் பிளவுக்குப் பின் இந்த அங்கீகாரம் காங்கிரசுக் கட்சிக்கு மட்டும் வழங்கப்பட்டது) ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு இந்திய தேசிய ஒற்றுமை அவசியம் என்பதை இந்து-முசுலீம் ஒற்றுமை, காங்கிரசு-முசுலீம் லீக் ஒற்றுமை (உண்மையில் இது மதவாத ஒற்றுமையும், தரகு வர்க்கங்களின் ஒற்றுமையுமே) என்று காங்கிரசுக் கட்சி போல விளக்க படுத்தியதுடன் தொடர்ந்து இந்த ஒற்றுமையைப் பேணுவதை தனது முக்கியப் பணியாகவும் கொண்டிருந்தது. இவ்வாறு இந்தியாவில் புரட்சி நடத்தவென்று தோன்றிய இ. பொ. க. தொடர்ந்து எதிர்ப்புரட்சிகர முகாமுடன் சமரச உறவுகளையே கொண்டிருந்ததுடன் (இடது திரிபுகாலங்களில் தவிர-அதுவும் எதிர்ப்புரட்சி முகாமுடனான சமரச உறவின் எதிர்மறை விளைவே) தரகு முதலாளித்துவ வர்க்கக் கட்சியான காங்கிரசின் வாலாகவே தொடர்ந்து செயல்பட்டு வந்தது.

1942-43ல் இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன என்பதையும் அவற்றின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதையும் கட்சி ஒப்புக் கொண்டாலும் தேசங்களின் உருவாக்கத்துடன் சனநாயகப்புரட்சி இணைக்கப்பட வேண்டும் என்பதை இது உணரவில்லை; அங்கீகரிக்கவில்லை. சுய நிர்ணய உரிமை பற்றிய கட்சியின் தீர்மானம் இந்திய தேசிய ஒற்றுமை என்ற கண்ணோட்டத்தில் இருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததே தவிர சனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதற்கான தேவை என்பதிலிருந்து அல்ல.

பாகிஸ்தான் பிரிவினையை அடுத்து வலிமையான மத்திய அரசு என்ற வாதத்தை முன் வைத்து, அதற்கு முன் உறுதி கூறப்பட்டுவந்த மாநில அதிகாரங்களைக் கூட பறித்த மத்திய அரசை அரசியல் சட்டத்தில் உருவாக்கியது காங்கிரசுக் கட்சி. அதைத் தொடர்ந்து இந்திய தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பது என்ற கருத்திலிருந்து விடுபடாத இ. பொ. க. வும் படிப்படியாக தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பதற்கு அழுத்தத்தைக் குறைத்து 1964ல் கட்சி பிளவுபட்டபின் பிளவுபட்ட இரு கட்சிகளுமே கட்சித்திட்டத்தில் முற்றிலும் அதைக் கைவிட்டு விட்டன. அத்தீர்மானம் திட்டத்தில் இருந்தபோதே கட்சி மொழிவழி மாநில அமைப்புகளுக்கான போராட்டங்களை சனநாயக உரிமைகளுக்கான போராட்டங்கள் எனக் கூறி ஆதரித்திருக்கிறதே தவிர எப்போதும் அத்தகைய போராட்டங்களுக்கு தலைமை ஏற்றதில்லை. எனவே சுயநிர்ணய உரிமைக்கான தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு கட்சி தலைமையளிக்கவில்லை என்பதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com



கட்சி 1964ல் பிளவுபட்டபின் இரு அமைப்புகளுமே தேசிய விடுதலை இயக்கங்களை இந்திய தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பது என்ற பெயரில் உறுதியாக எதிர்த்துவருவதுடன் அவை நாட்டை பிளவுபடுத்த ஏகாதிபத்திய வாதிகளால் தூண்டிவிடப்பட்ட சதி என்றும் இனவாத நடவடிக்கைகள் என்றும் கண்டனம் தெரிவித்து அவற்றை ஒடுக்குவதில் ஆளும் வர்க்கங்களுடன், அரசு எந்திரத்துடன் முழுமையாக ஒத்துழைத்து வருகின்றன. மேற்கு வங்க இ.பொ.க(மா) வின் மாநில அரசு அம்மாநிலத்தில் உள்ள ஒடுக்கப்படும் தேசிய இனமான கூர்க்கா மக்களின் தனிமாநிலக் கோரிக்கையை கூட அங்கீகரிக்க மறுத்து ஒடுக்கி வருகிறது. இ.பொ.க., இ.பொ.க (மா) ஆகிய இரு கட்சிகளுமே சமக்கிருதமயமாக்கப் பட்ட இந்தியே இந்தியாவின் ஆட்சிமொழி என்று திணிக்கப்பட்டிருப்பதற்கும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டிருப்பதற்கும் எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை. இவ்வாறு இவ்விரு கட்சிகளுமே இந்திய தேசிய ஒருமைப்பாட்டின் முன்னணிக் காவலர்களாக தம்மை நிறுத்திக் கொண்டுள்ளன.

ஆனால் இந்திய தேசியம் என்ற கண்ணோட்டம் தரகு முதலாளித்துவ, பார்ப்பனிய ஆதிக்கக் கண்ணோட்டமே. இந்தியா முழுவதும் பல்வேறு தேசிய இனங்களிலும் தமது விரிந்த சந்தையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு தரகு வர்க்கங்களுக்கு இந்திய தேசியம் தேவை. இந்தியா முழுவதும் பரவியுள்ள இந்துமதத்தின் அதன் கலாச்சாரத்தின் பெயரால் சாதியாதிக்க சமூக அமைப்பையும் அதில் தனது மேலாதிக்கத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்கு பார்ப்பனிய சக்திகளுக்கும்இந்தியதேசியம்தேவை. இவ்வாறு தரகு முதலாளித்துவ சக்திகளுக்கும், பார்ப்பனியத்திற்கும் பிறந்த ஒரு ஒட்டுப் பிறவியே 'இந்திய தேசியம்'.

தரகு முதலாளித்துவமும் பார்ப்பனியமும் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்கு ஒன்றுக்கொன்று துணையாய் இருக்கின்றன. தரகு முதலாளித்துவம் மிக வளர்ச்சியடைந்த தொழில் வளர்ச்சி பற்றி எவ்வளவுதான் பீற்றிக் கொண்டாலும் மிகப்பெரும்பான்மையான மக்களை மிகப் பின்தங்கிய அரைநிலப் பிரபுத்துவ, நிலப்பிரபுத்துவ உறவுகளின் கீழாகவே வறுமைக் கோட்டிற்கும் கீழே எழுத்தறிவற்றவர்களாகவே வைத்திருக்கிறது. அதன் ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராக எழும் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு சக்திவாய்ந்த காலனிய கால அரசு எந்திரத்தை அது பாதுகாத்து வளர்த்து வருவதுடன், அவர்களை தொடர்ந்து அறியாமை இருளில் அமிழ்த்து வைக்கும் நோக்கத்துடன் சமய சார்பின்மை என்ற முகமூடியின் கீழ் மதவாதத்தை குறிப்பாக இந்துத்துவத்தின்-பார்ப்பனியத்தின் புனிதத்தை விடாது பரப்பி பாதுகாத்துவருகிறது. அதே நேரத்தில் பின்தங்கிய ஒடுக்கப்படும், சுரண்டப்படும் மக்கள் தேசிய இயக்கங்களிலும், சனநாயக இயக்கங்களிலும் ஒன்றுபட்டு விடாமல் தடுக்கும் சக்தியாக பார்ப்பனியம் மக்களிடம் சாதி, மத உணர்வுகளைப் பாதுகாத்து வருவதுடன் சாதி, மத ரீதியான இந்திய கலாச்சார ஒருமை கொண்டாடுகிறது.

இவ்வாறு இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் முழுமையான வளர்ச்சி பெற்ற-அரசுரிமை கொண்ட நவீன தேசங்களாக வளர்ந்து விடாமல் அடக்கி, ஒடுக்கி நசுக்கி வருகிறது தரகு-பார்ப்பனிய கூட்டு. ஆரிய வர்த்தத்தில் மேல்சாதி வர்க்க மொழியாகத் தோன்றிய சமக்கிருதமயமாக்கப்பட்ட இந்தியே, இந்தியாவின் ஆட்சிமொழி என அறிவித்திருப்பது தரகுமுதலாளித்துவ-பார்ப்பனிய ஆதிக்கக்கூட்டின் அப்பட்டமான வெளிப்பாடாகும்.

எனவே தரகு முதலாளித்துவ - பார்ப்பனிய கூட்டின் 'இந்திய தேசியம்' ஒரு சனநாயக விரோத ஏகாதிபத்தியவாதம் ஆகும். அது அந்நிய ஏகாதியத்தியத்திற்கும், நிலப்பிரபுத்துவத்திற்கும் பாதுகாப்பளித்து, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை - அரசுரிமையை மறுத்து ஒடுக்கும் தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியம் ஆகும்.

இந்நிலையில் இங்கு சனநாயகப்புரட்சி என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு மட்டுமல்ல, தரகு - பார்ப்பனிய

படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்தியத்திற்கும் (இந்திய தேசியத்திற்கும்) எதிரானதாகும். அதாவது ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலபிரபுத்துவ எதிர்ப்பு சனநாயகப் புரட்சித் திட்டம் தேசிய இன விடுதலை இயக்கங்களுடன் இணைத்து நடத்தப்படும்போதே வெற்றிபெறக் கூடியதாகும்.

ஆனால், இ. பொ. க., இ.பொ.க.(மா) ஆகிய கட்சிகள் இந்திய தேசிய ஒருமைப்பாடு என்ற நிபந்தனையுடனேயே ஏகாதிபத்தியஎதிர்ப்பு, நிலபிரபுத்துவ எதிர்ப்பு பற்றியும், சனநாயகம் பற்றியும் பேசுகின்றன. இந்திய தேசியம் என்கிற தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்தைப் பாதுகாப்பதற்காக அவை தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையே எதிர்க்கின்றன. தேசிய உரிமை இயக்கங்களை ஒடுக்கி ஆளும் வர்க்கங்களுடன் முழுமையாக ஒத்துழைக்கின்றன. எனவே இ. பொ. க., இ.பொ.க. (மா)வின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலபிரபுத்துவ எதிர்ப்பு என்பது ஏகாதிபத்திய பொருளாதாரவாதமாக மட்டுமல்ல பொய்மையானதாகவும், பிற்போக்கானதாகவும் அதற்கும் மேலாக அவை தரகு - பார்ப்பனியக் கட்சிகளாகி விட்டதை மறைப்பதற்கானத் தந்திரமாகவும் இருக்கிறது.

## 3

## இ. பொ. க. (மா-லெ) ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்து தேசிய சூனியவாதத்திற்கு

இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தில் இ.பொ.க., இ.பொ.க. (மா)ஆகியவற்றுக்கு பின் மூன்றாவது முக்கியப்பிரிவாகத்தோன்றியது இ.பொ.க. (மா-லெ). இ.பொ.க. (மா) விலிருந்து பிளவுபட்டுத் தோன்றிய இக்கட்சி அதிலிருந்து மாறுபட்ட பல முக்கிய முடிவுகளைக் கொண்டதாக விளங்கியது. இ.பொ. க. வும் இ.பொ.க. (மா) வும் இந்தியப் பெருமுதலாளிகளை தேசிய முதலாளிகள் என்று தீர்மானித்ததற்கு மாறாக இ.பொ.க. (மா - லெ) தரகு முதலாளிகள் என்று தீர்மானித்தது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஆயுதப் போராட்ட வழியை உயர்த்திப் பிடித்தது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைத் தீர்மானத்தை மீண்டும் கட்சித் திட்டத்தில் இணைத்துக் கொண்டதுடன் தேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு உறுதியான ஆதரவளித்தது. சர்வதேசிய திரிபுவாதமான குருச்சேவ் புரட்டல்வாதத்தை நிராகரித்து மார்க்சிய-லெனினிய-மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடித்தது. ம.தி. அமைப்பு, ம.தி. இயக்கம் ஆகியவற்றைப் புறக்கணித்தது, புறக்கணிப்புவாதம், தனிநபர் அழித்தொழிப்பு போன்ற பல்வேறு இடது தவறுகள் கொண்டதாக இருப்பினும் கட்சியின் இம்முடிவுகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனினும் இ.பொ.க. (மா-லெ)யும் தேசம் பற்றிய விசயத்தில் ஏகாதிபத்திய பொருளாதார வாதத்திலிருந்து விடுபடவில்லை. இ.பொ.க. என்ற அமைப்பே இதற்கு ஒரு தடை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

இ. பொ. க. (மா-லெ) இந்தியப் பெருமுதலாளிகளை தரகு முதலாளிகள் என்று வரையறுத்ததும், அதன் கட்சிகளை தரகு முதலாளித்துவ கட்சிகள் என்று வரையறுத்ததும் அது இந்திய ஆளும் வர்க்கங்களுடன் எவ்வித சமரசமும் செய்து கொள்ள முடியாத கட்சியாக மாற்றியது. இது அடிப்படையிலேயே இ.பொ.க., இ.பொ.க (மா) ஆகியவற்றின் நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்டதாகும். எனினும் இ. பொ. க. (மா-லெ) தேசிய முதலாளிகள் குறித்த தெளிவான வரையறை எதுவும் கொண்டிருக்க வில்லை. தேசம் பற்றிய விசயத்தில் இக்கட்சி தொடர்ந்து கொண்டிருந்த பொருளாதார வாதம் இக்கட்சியை தேசிய சூனியவாதக் கட்சியாக்கியது இதற்கு காரணமாகும். தேசிய முதலாளிகள் தேசிய இயக்கங்களிலிருந்து பிரிக்க முடியாதவர்கள். தேசிய இயக்கங்கள் தேசிய இனங்களின் சனநாயக இயக்கங்களிலிருந்து பிரிக்க முடியாதது. ஆனால் இ. பொ. க (மா -லெ) தொடர்ந்து இந்திய தேசியம் பற்றிய மாயையிலிருந்து விடுபடாத கட்சியாகவேஇருந்தது. இக்கட்சி

படிப்பகம்

www.padippakam.com



யின் திட்டம் காலனிய கால ஏகாதிபத்திய எதிர்ப்புப்போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டம் என்றே வர்ணித்தது. உண்மையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, இந்திய தேசியத்தையே அது அர்த்தப்படுத்தியது என்பதும் இது ஒரு ஏகாதிபத்திய பொருளாதாரவாத நிலைப்பாடு என்பதும் தெளிவு. எனினும் இதே பொருளாதாரவாத நிலைப்பாடுகளைக் கொண்டிருந்த இ. பொ. க., இ. பொ. க (மா) ஆகிய கட்சிகள் இந்திய தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பது என்ற பெயரில் தரகு முதலாளித்துவ, பார்ப்பனிய 'தேசிய' கண்ணோட்டத்தில் சரணடைந்து பிற்போக்கில் வீழ்ந்துவிட்டது போல் இக் கட்சி வீழ்ந்து விடவில்லை. காரணம் இக்கட்சி இந்தியப் பெருமுதலாளிகள் தரகு முதலாளிகளே என்று வரையறுத்திருப்பதேயாகும். இவ்வரையறுப்பு ஆளும் வர்க்கத்துடனான சமரசத்திற்கு எதிராக கட்சியை நிறுத்துகிறது. அது மட்டுமின்றி இக்கட்சி மீண்டும் கட்சித்திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானத்தை இணைத்திருப்பதும், தேசிய விடுதலை இயக்கங்களை உறுதியாக ஆதரிக்கும் நிலைப்பாட்டை மேற்கொண்டிருப்பதும் இந்திய தேசிய ஒற்றுமை என்ற மாயைக்கு எதிரானதாகும். இவை எல்லாம் இக் கட்சியை இந்திய தேசியம் என்ற கண்ணோட்டத்திலிருந்து முற்றிலும் விடுவிக்கவில்லை எனினும் இவை ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்திய தேசியம் என்ற ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தால், இ. பொ. க (மா - லெ)யை தரகு பார்ப்பனிய 'தேசிய' கண்ணோட்டத்தில் - பிற்போக்கில் வீழ்த்திட முடியாத தடுப்பு நிலைகளாக இருந்துள்ளன. ஆனால் அதே நேரத்தில் கட்சி தேசிய இயக்கங்களுக்குத் தலைமை தாங்கவும் தேசிய இன உழைக்கும் மக்களுடன் அய்க்கியப்படவும் இவை போதுமானதாயில்லை. மிகப் பெரும்பான்மையான தேசிய இன மக்களிடமிருந்து கட்சி தனது ஏகாதிபத்திய பொருளாதாரவாத நிலைப்பாட்டால் தனிமைப்பட்டது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானம் அதற்கு தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவளிக்க மட்டுமே பயன்பட்டதே தவிர அவற்றுக்குத் தலைமையளிக்க உதவவில்லை. இத்துடன் அது கொண்டிருந்த ம. தி. இயக்கம், ம. தி. அமைப்பு ஆகிய வற்றிலான எதிர்மறையான அணுகுமுறையும், தனி நபர் அழித்தொழிப்புப் போராட்ட முறையும் அதை மக்களிடமிருந்து முற்றிலும் தனிமைப்படுத்தின.

இ. பொ. க., இ. பொ. க. (மா) ஆகிய கட்சிகள் தரகு, பார்ப்பனிய 'தேசிய' கண்ணோட்டத்தை ஏற்றுக் கொண்டதால் அவை இயல்பாகவே பார்ப்பனிய அரசியல் பொருளாதார, தத்துவ வரலாற்றை ஏற்றுக் கொண்டன. அதன் மூலம் அடிப்படையில் தரகு - பார்ப்பனிய கட்சிகளுக்கும் இக்கட்சிகளுக்கும் வேறுபாடு எதுவும் இல்லாதொழிந்தது.

ஆனால் இ. பொ. க. (மா - லெ) தூய பொருளாதாரவாத அமைப்பாகவே நீடித்தது. அது தரகு - பார்ப்பனிய தேசிய கண்ணோட்டத்தை இறுதிவரை ஏற்றுக் கொள்ளவில்லை. அதே நேரத்தில் எந்த ஒரு தேசிய இனத்துடனும் தன்னை இணைத்துக் கொண்டதாகவும் இல்லை. கட்சிக் கிளைகள் அல்லது பிரிவுகள் எந்த தேசிய இன வட்டகையில் இருப்பினும் அவை அந்த தேசிய இனத்தின் இயக்கத்துடன் ஒட்டாததாகவும், அதன் வரலாறு, தத்துவம், பண்பாடு முதலானவற்றில் அக்கறையற்றதாகவும், அங்கீகரிக்காததாகவுமே இருந்தது. இதனால் தூய வர்க்கக் கோட்பாட்டை பின்பற்றிய இக்கட்சி உண்மையில் தேசிய சூனியவாதக் கட்சியாகவே இருந்தது. கட்சியின் ஏகாதிபத்திய பொருளாதாரவாத அடிப்படை உருவாக்கிய விளைவுகள் இவை மட்டுமல்ல; வரலாறு பற்றிய அறியாமை, தத்துவ வறட்சி, வறட்டு வாதம், சுயதிருப்தி மனப்பான்மை, அனுபவவாதம், இவற்றின் விளைவாக மேலும் மேலும் பிளவுபடுவது, கட்சியோடு தம்மை இனம் காட்டிக் கொள்ள விரும்பிய அறிவுஜீவிகள் ஏகாதிபத்தியவாத - தேசிய சூனியவாத தத்துவப் போக்குகளுக்கு பலியாகியது ஆகிய இவை எல்லாம் கூட ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தின் விளைவுகளே ஆகும்.

வரலாறு என்பது தேசங்களின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாதது. ஆனால்

படிப்பகம்

www.padippakam.com



ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் தேசிய சூனியவாதம் என்பதால் கட்சியில் இயல்பாகவே வரலாறு பற்றிய அறியாமை நிலவியது. தேசிய சூனியவாதத்திற்கு வரலாற்றை அறிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதால் அதற்கான முயற்சியின்மையும், அதன்பாலான அலட்சியப் போக்கும் தொடர்ந்தது. இதனால் சமுதாயத்தின் வெவ்வேறு தத்துவப் போக்குகள் குறித்து அறியாதிருத்தலும், அவை குறித்த விமர்சனப் பார்வையற்ற தத்துவ வறட்சியும் நீடித்தது. ஏற்கனவே தூய வர்க்கக் கோட்பாட்டிலிருந்து எடுக்கப்பட்ட முடிவுகளையே மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது அல்லது மார்க்சிய மேற்கோள் களில் தஞ்சம் அடைவது என்ற வறட்டு வாதப் போக்குகளுக்கும்; எல்லாம் தீர்க்கப் பட்டுவிட்டது என்ற சுயதிருப்தி மனப் பான்மைக்கும் இது காரணமானதுடன் புற நிலைத் தேவைகள் கோட்பாட்டரங்கில் எழுப்பும் கேள்விகளுக்கு கோட்பாட்டரங்கில் விடைகாணும் முயற்சிகளை மேற்கொள் வதற்கு பதில் நடைமுறை முழக்கங்களில் சில ஒட்டுக்கள், திருத்தங்கள் கொடுத்து சமாளிக்கும் அனுபவவாதமும் பற்றிக் கொண்டது. இக்குறைபாடுகள் இயல்பாகவே கட்சியை மக்களிடமிருந்து தனிமைப்படுத்தியதுடன் புதிய பிரச்சனைகளை கட்சி எதிர்கொண்ட போது தத்துவ ஒருமை காண முடியாமல் மேலும் மேலும் கட்சியை குழுக்களாகச் சிதறடித்தது. கட்சியில் நிலவிய இடது தீவிர வாதப் போக்குகள் - ம. தி. அமைப்பு, ம. தி. இயக்கம் புறக்கணிப்பு, தனி நபர் அழித் தொழிப்பு போன்றவை இக்கேடுகளுக்கு மேலும் துணை புரிந்தன. கட்சியின் சிதறுண்ட பல்வேறு அமைப்புகளும் கடந்த காலத்தில் பெருமளவில் தமது இடது தீவிர வாதத் தவறுகளைக் களைந்து கொண்ட போதிலும் அவை ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்து மீளவில்லை. இந்த அடிப்படையான குறைபாடு நீக்கப்பட வில்லை என்பதால் அவை புரட்சி இயக்கத்தை முனனெடுத்துச் செல்வதில் தொடர்ந்து தேக்க நிலையையே சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

## 4

## த. நா. அ. க. இ. பொ. க. (மா-லெ)யில் அதன் இடம்

புகழ்பெற்ற நக்சல்பாரி உழவர் பேரெழுச்சியை அடுத்து இ. பொ. க (மா) விலிருந்து பிளவுபட்டுத் தோன்றிய மார்க்சிய - லெனினிய புரட்சிகர இயக்கம் மூவகைப் போக்குகளைக் கொண்டிருந்தது. முதல் போக்கு தோழர் சாரு மஜூம்தார் தலைமை யிலானது இது அனைத்துவகை ம. தி. இயக்கம், அமைப்புகளையும் திரிபுவாத நடைமுறைகள் எனக்கூறி நிராகரித்தது. தனிநபர் அழித்தொழிப்பு எனும் கொரில்லாப் போராட்ட அமைப்புமுறையை மட்டுமே ஒரே போராட்ட, அமைப்பு முறையாக முன் வைத்தது. இரண்டாவது போக்கு ஆந்திரத் தோழர்கள் நாகி, சந்திரபுல்லா தலைமையிலானது. இது தனிநபர் அழித்தொழிப்பை எதிர்த்தது; ம.தி.அமைப்பு, இயக்கம் ஆகியவற்றின் தேவைகளை வலியுறுத்தியது. ஆனால் அரசியல் முழக்கம், இயக்கம் ஆகியவற்றைப் புறக்கணித்ததுடன் இடைக்கால புரட்சி அரசு, அதற்கான முன்னணி போன்ற கோட்பாடுகள் அனைத்தும் திரிபுவாதம் என்ற கோட்பாட்டைஉருவாக்கிக்கொண்டது மூன்றாவது போக்கு சாரு மஜூம்தாரின் தனிநபர் அழித்தொழிப்புக்கு எதிராகத் தோன்றி ம.தி.அமைப்பு இயக்கங்களின் தேவையினை வலியுறுத்தியதுடன் அரசியல் முழக்கம், இயக்கம், இடைக்கால புரட்சி அரசாங்கம் போன்ற கோட்பாடுகளுக்கும் அரசியலரங்கிலான பணிகளுக்கும் அழுத்தம் கொடுத்தது. எவ்வாறாயினும் இம் மூவகை போக்குகளும் இ.பொ.க (மா) விலிருந்து வேறுபட்ட முறையில் இந்தியப் பெரு முதலாளிகளைத் தரகு முதலாளிகள் என வரையறுப்பது, ஆயுதப் போராட்டத்தை உயர்த்திப்பிடிப்பது, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது,குருச்சேவ் புரட்டல்வாதத்தை நிராகரிப்பது ஆகியவற்றில் பொதுத்தன்மை கொண்டவை

படிப்பகம்

www.padippakam.com



யாகவே இருந்தன. மேலும் தேசம் பற்றிய விசயத்தில் தொடர்ந்து ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தைக் கொண்டிருப்பதிலும் இம் மூவகை போக்குகளும் பொதுத்தன்மை கொண்டவையாகவே இருந்தன. மூன்றாவது போக்கை முதலில் தொடங்கி வைத்தவர் தோழர் சத்திய நாராயணசிங். சாரு மஜூம்தாரின் தனிநபர் அழித்தொழிப்பு வழிமுறையை எதிர்த்து ம.தி அமைப்புகள், இயக்கங்களின் தேவையை வலியுறுத்திவந்த இவர் அவசரநிலைப் பிரகடனத்தை அடுத்து பாசிச எதிர்ப்பு முன்னணி மற்றும் இடைக் காலப் புரட்சிஅரசு போன்ற கோட்பாடுகளை முன்வைத்தார். இவரைத் தொடர்ந்து தமிழகத்தில் சாருவின் தனிநபர் அழித் தொழிப்புக்கு எதிராக ம.தி. வழிக்காகப் போராடி வந்த மா.அ.க. வும் பாசிச எதிர்ப்பு முன்னணி மற்றும் இடைகால புரட்சி அரசு என்ற கோட்பாட்டை (பாட்டாளி வர்க்கத் தலைமை என்ற நிபந்தனையுடன்) ஏற்றுக் கொண்டது. அவசரநிலைக் காலம் முடிவடைந்தபின் 'தேசியத்திட்டம்' ஒன்றையும், பாசிச அபாயத்திற்கெதிரான முழக்கங்களையும் முன்வைத்தது. ஆனால் மா. அ. க. வின் 'தேசியத் திட்டம்' புதிய சனநாயகத் திட்டத்தில் சில முழக்கங்களை இணைத்துக் கொண்டதாக இருந்ததேயன்றி-குறிப்பான அரசியல் சூழலை-பாசிச அபாய போக்கை-எதிர்கொள்வதற்குப் போதுமானதாக இல்லை. இந்நிலையில் மா.அ.க.விலிருந்து பிளவுபட்டுத் தோன்றிய த.நா.அ.க. பாசிச அபாயம் நிலவும் அரசியல் சூழலில் மூவகை அரசியல் போக்குகள் நிலவுவதைச் சுட்டிக் காட்டி பாட்டாளிவர்க்கத் தலைமையில் புரட்சி இயக்கத்தைக் கட்டியமைப்பதற்கு உகந்த வகையில் பா. எ. தே. ச. திட்டம் மற்றும் முன்னணி என்ற கொள்கையை முன்வைத்தது. இதே காலத்தில் வி. மி. குழு கடைசியாக ஆனால் மிக வேகமாக சாருவின் தனிநபர் அழித்தொழிப்புக் கொள்கையைக் கைவிட்டு ம.தி. இயக்கம்-அமைப்பு தேவைகளை அங்கீகரித்ததுடன் சுயேச்சதிகார எதிர்ப்பு முன்னணி என்ற அரசியல் முன்னணிக்கான முழக்கத்தையும் முன்வைத்தது. எனினும் மா-லெ இயக்கத்தில் முதலில் அரசியல் முன்னணியின் தேவையை உணர்ந்து முன்வைத்த சத்திய நாராயணசிங்கும் இறுதியில் வந்து சேர்ந்த வி. மி. குழுவும் பாராளுமன்ற வாதத்தில் சறுக்கின. அதே நேரத்தில் மா. அ. க. குறிப்பான அரசியல் சூழலுக்குப் பொருத்தமான குறிப்பான திட்டம் எதையும் வைக்கத் திறனின்றி, பு.ச. திட்டத்தை சில பூச்சுகளுடன் முன்வைத்து திருப்தி அடைந்து கொண்டது. இதில் த. நா. அ. க. மட்டுமே குறிப்பான அரசியல் போக்குகளை ஆய்வுசெய்து முன்வைத்தது மட்டுமின்றி மா-லெ வழிப்பட்ட குறிப்பான திட்டத்தை முன்வைப்பதிலும் வெற்றி கண்டது. சீனப்புரட்சியின் அனுபவத்திலிருந்து கற்று முன்வைத்த குறிப்பான திட்டமும், அதுபற்றிய கோட்பாடும் இந்திய மா-லெ இயக்கத்திற்குப் புதியதாகும். இ.பொ.க., இ.பொ.க. (மா)மற்றும் சத்திய நாராயணசிங், வி. மி. குழுவினரைக் காட்டி இடைக்கால புரட்சிஅரசு பற்றிய எத்தகைய திட்டமும், முன்னணியும், முழக்கமும் திரிபுவாதத்திற்கே இட்டுச் செல்லும் என்று மா-லெ இயக்கத்தில் ஒரு பிரிவினர் கூறிவருவதை இது பொய்ப்பித்துவிட்டது.

அரசியல் இயக்கங்கள், முழக்கங்கள் இன்றி புரட்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஒவ்வொரு குறிப்பான அரசியல் சூழலிலும் அரசியல் போக்குகளைத் தெளிந்து இவற்றை வகுத்து முன்வைக்க வேண்டும். இப்பிரச்சனையை த.நா.அ.க. வெற்றிகரமாகத் தீர்த்தது. எனினும் த.நா.அ.க. வும் தொடர்ந்து ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் கண்ணோட்டத்திலேயே இருந்தது. அதிலிருந்து விடுபடவில்லை. இது த. நா. அ. க. தொடர்ந்து புரட்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அடிப்படையான தடையாகவும் தொடர்ந்து தேக்கத்திற்கு காரணமாகவும் அமைந்தது. எனினும் அரசியல் அரங்கிலான பணிகுறித்த த. நா. அ. க. வின் கோட்பாட்டுப் பணியும் அதன் தொடர்ந்த நடைமுறையுமே இ. பொ. இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு ஆகியவற்றைக் கண்டறியவும் அதற்கெதிரான தத்துவார்த்

படிப்பகம்

www.padippakam.com



தப் போராட்டத்தைத் தொடுக்கவும் இந்திய சமுதாய அமைப்பு குறித்த சரியான வரையறுப்புக்கு வரவும்அதற்கு உதவியிருக்கிறது; இவ்வாறு புரட்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான தத்துவ பலத்தைஅதற்கு வழங்கியிருக்கிறது.

5

## த. நா. அ. க. வின் கோட்பாட்டு முடிவுகளில் சரியும் - தவறும்

தமிழ் நாட்டில் சாருவின் அழித்தொழிப்பு வழிமுறையை எதிர்த்து ம. தி. வழிக்காகப் போராடி உருவான மா. அ. க. விரைவில் அரசியல் கோட்பாட்டு நெருக்கடியில் சிக்கியது. கட்சி அமைப்பு அரசியல் சித்தாந்த ரீதியில் மையப்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது இ. பொ. க. (மா - லெ) அமைப்பின் அடிப்படைக் கோட்பாட்டு நிலைப்பாடுகளை விளக்குவதிலும், பாசிச அபாயத்தை எதிர்த்து தலைமைக் கமிட்டி அளித்த முழக்கங்கள், முன்னணிகள் பற்றி கோட்பாட்டு விளக்கம் அளிப்பதிலும் இந்த நெருக்கடி வெளிப்பட்டது. திட்டம், யுத்த தந்திரம், போர்த்தந்திரம், குறைந்தபட்சத் திட்டம்,அதிகபட்சத் திட்டம் என்றால் என்ன என்பது போன்ற மா - லெ கோட்பாட்டு வரையறுப்புகளிலேயே கட்சி விளக்கம் பெற வேண்டியிருந்தது. மேலும் மா. அ. க. தலைமை பாசிச அபாயத்திற்கு எதிராக முன் வைத்த பாசிச எதிர்ப்பு சனநாயக இயக்கம், 'தேசியதிட்டம்' மற்றும் 'கொலை வெறிபிடித்த எம்.ஜி.ஆரின் கொடுங் கோலாட்சி ஒழிக' என்பது போன்ற முழக்கங்கள் ஆகியவற்றுக்கும் கோட்பாட்டு விளக்கம் அளிக்க வேண்டியிருந்தது. பாசிச எதிர்ப்பு சனநாயக இயக்கத்திற்கும், பிரதான முரண்பாட்டிற்கும் உள்ள தொடர்பு அரசியல்-ஆயுதப் போராட்டங்களுக்கிடையிலான உறவு, படைகட்டும் முறை, பாராளுமன்றவாதம், புறக்கணிப்புவாதம் (அரசியல் தீர்மானத்தில், அரசியல் போராட்டத்திற்கு இணையாக ஆயுதப் போராட்டம் நடத்துவது பற்றியும் பாராளுமன்றவாத எதிர்ப்பு என்ற பெயரில் புறக்கணிப்புவாத விளக்க உரைகளும் இடம் பெற்றிருந்தன. 25 கிராமங்களைத் தேர்ந்தெடுத்து ஆறு மாதத்தில் ஆயுதக்குழுக்களை உருவாக்குவது பற்றியும் அப்போதைய மா. அ. க. தனது வேலைத் திட்டத்தில் கூறியிருந்தது) குறிப்பானதிட்டம் போன்ற பலவற்றிலும் கட்சிக்குள் முரண்பாடுகள் தோன்றின. இதனால் அமைப்பு அரசியல் கோட்பாட்டு நெருக்கடிக்குள்ளாகி அதை தீர்ப்பதே முதற்கடமை என இரண்டாவது பிளீனம் தீர்மானித்தது. பிளீனத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பு அறிக்கை நாற்பதுக்கும் மேற்பட்ட அ. கோ. கேள்விகளைத் தொகுத்து தீர்க்கப்பட வேண்டியவை என்று பட்டியலிட்டிருந்தது.

இரண்டாவது பிளீனத் தீர்மானப்படி அ. கோ. பிரச்சனையைத் தீர்க்கும் முயற்சியில் கட்சியமைப்பில் எழுந்த வேறுபட்ட நிலைப்பாடுகளின் காரணமாகவும், தலைமைக் கமிட்டியின் பிளவுவாத சதி நடவடிக்கைகளின் காரணமாகவும் அமைப்பு பிளவுபட்டு த. நா. அ. க. தோன்றியது.

மா. அ. க. விலிருந்து மாறுபட்ட அ. கோ. நிலைப்பாடுகளைக் கொண்டு தோன்றிய த. நா. அ. க., மா. அ. க. வின் பல தவறான கோட்பாட்டு நிலைப்பாடுகளைத் திருத்தி சரி செய்திருந்தது. இராணுவ - அரசியல் யுத்த தந்திரங்களுக்கிடையிலான உறவும், வேறுபாடும், அரசியல் ஆயுதப் போராட்டங்களுக்கிடையிலான உறவு, திட்டம், குறைந்தபட்ச, அதிகபட்ச, குறிப்பான திட்டங்களும் அவற்றுக்கிடையிலான உறவுகளும், யுத்ததந்திர, போர்த் தந்திரங்களும் அவற்றுக்கிடையிலான உறவுகளும் கோட்பாட்டரங்கில் சரி செய்யப்பட்டன. பாராளுமன்றவாதத்தைப் போலவே புறக்கணிப்புவாதக் கருத்தோட்டமும் மா-லெ வழியில் களையப்பட்டது. பிரதான-அடிப்படை முரண்பாடுகளுக்கான மா - லெ விளக்கம் வரையறுக்கப்பட்டது. அரசியல் சுதந்திரம் பற்றிய பொருளாதாரவாதக் கருத்

படிப்பகம்

www.padippakam.com



தோட்டம் கோட்பாட்டரங்கில் நீக்கப்பட்டது. உலக அரசியல் சக்திகளை வகைப்படுத்துவது பற்றிய திரிபுவாத விளக்கம் நிராகரிக்கப் பட்டது. மாசேதுங் சிந்தனைக்கான சரியான விளக்கம் வரையறுக்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் மேலாக பாசிச அபாயம் நிலவும் நேரத்தில் அரசியல் முழக்கம், அரசியல் இயக்கம், முன்னணி பற்றிய பிரச்சினை - இடைக்கால புரட்சி அரசு பற்றிய பிரச்சினை குறிப்பான திட்டம் என்ற கோட்பாட்டின் மூலம் மா-லெ வழியில் சரியாகத் தீர்க்கப்பட்டது. இவ்வாறு அரசியல் இயக்கங்கள் - இடைக்கால புரட்சி அரசு பற்றிய விசயத்தில் பாராளுமன்ற வாதத்தில் விழ்ந்த ச. நா., வி. மி. குழுக்களுக்கு மாறான வகையிலும் குறுங்குழு வாதத்தில் சிக்கிய மா. அ. க. போன்ற குழுக்களுக்கு மாறான வகையிலும் புரட்சிகர முறையில் இப்பிரச்சினையை த. நா. அ. க. தீர்த்தது.

இவ்வாறு த. நா. அ. க. கோட்பாட்டரங்கில் மா. அ. க.விடமிருந்து மாறுபட்டு பல சரியான முடிவுகளை (இவை எல்லாம் ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் குறைபாடுகளுக்கு உட்பட்டவையே எனினும்) எடுத்திருந்த அதே நேரத்தில் மா.அ.க. வின் தவறுகளைத் திருத்தும் போக்கில் கோட்பாட்டரங்கில் அது சில தவறுகளையும் இழைத்தது. குறிப்பாக தரகு முதலாளிகளை சார்பு முதலாளிகள் என்று வரையறுத்ததும், அரைக்காலனி என்பதை சார்புநாடு என்று வரையறுத்ததும், அரசியல் சுதந்திரம் பற்றிய தீர்மானமும் அப்படிப்பட்டவையாகும்.

தரகு முதலாளிகள் என்பவர்கள் ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளே. ஏகாதிபத்தியத்துடன் அவர்களுக்குள்ள முரண்பாடு இரண்டாம் பட்சமானது; சார்பே முதன்மையானது. ஆனால் மா-லெ இயக்கத்தில் ஏகாதிபத்தியத்துடன் தரகு முதலாளிகளுக்குள்ள முரண்பாட்டை முற்றாக மறுக்கும் விளக்கங்கள் தரப்பட்டு வந்தபோது அதை மறுக்கும் போக்கில் இந்தியப் பெருமுதலாளிகள் சார்பு முதலாளிகளே என த.நா.அ.க. முடிவெடுத்தது. சார்பு முதலாளிகள் என்பதற்கு ஏகாதிபத்தியத்துடனான அதன் உறவில் சார்பு முதன்மையானது, முரண்பாடு இரண்டாம் பட்சமானது என்று விளக்கமளித்தது. அதே நேரத்தில் இந்தியப் பெருமுதலாளிகள் தரகு முதலாளிகள் அல்லர் என்று மறுப்பதற்கு 1920ம் ஆண்டுகளில் மாவோவும், ஸ்டாலினும், தரகு முதலாளிகள் என்போர் ஏகாதிபத்தியத்துடன் தொடர்பு கொண்டுள்ள வணிக முதலாளிகளே என்று கூறியிருப்பதை எடுத்துக்காட்டி எனவே அன்னிய சார்புடன் தொழில் முதலாளிகளாயிருக்கும் இந்தியப் பெருமுதலாளிகள் தரகு முதலாளிகள் அல்ல மாறாக சார்பு முதலாளிகளே என வாதிட்டது. ஆனால் ஸ்டாலின், மாவோ மேற்கோள்கள் அன்றைய கால கட்டத்தில் இருந்த தரகு முதலாளிகள் பற்றி விளக்குபவையேயன்றி பொதுவரையறை தருவன அல்ல. பின்னர் 1940களில் அன்னிய சார்பு கொண்ட தொழில் முதலாளிகளையும் தரகு முதலாளிகள் என்றே மாவோ வரையறுத்துள்ளார். தரகு முதலாளிகள் என்ற நிலைப்பாட்டை சார்பு முதலாளிகள் என்று மாற்றும்போது த. நா. அ. க. இதைக் கவனிக்கத் தவறி விட்டது. இத்தவறு முதன் முதலாக ஆந்திரத் தோழர்களால் நமக்கு நேரடியாகச் சுட்டிக் காட்டப்பட்டது. அதன் பின் இந்தியப் பெருமுதலாளிகள் சார்பு முதலாளிகளே என்று நாம் கூறிவருவது ஏகாதிபத்தியத்துடனான இரண்டாம்பட்சமான முரண்பாட்டைச் சுட்டிக்காட்டவும் ஏகாதிபத்தியத்துடன் முரண்பாடே இல்லாத வர்க்கம் என்ற வாதத்தை மறுக்கவுமே என்பதைத் தொடர்ந்து மா. அ. க. வினருடனான விவாதத்தில் த. நா. அ. க விளக்கி வந்துள்ளது. ஆனால் த. நா. அ. க., சார்பு முதலாளிகள் என்று கூறியதன் மூலம் இ. பொ. க. (மா) வின் நிலைப்பாட்டையே மேற்கொண்டிருப்பதாகக் காட்டும் அற்பத்தனமான, வீணான முயற்சியிலேயே தொடர்ந்து மா. அ. க. ஈடுபட்டு வந்துள்ளது. இ. பொ. க. (மா) இந்தியப் பெருமுதலாளிகளை தேசிய முதலாளிகள் என்றும் ஏகாதிபத்தியத்துடனான உறவில் முரண்பாடே அதற்குப் பிரதானமானது என்றும் வரையறுத்துள்ளது. அதன் அடிப்படையிலேயே திட்டத்தை வகுத்துக் கொண்டுள்ளது. ஏகாதிபத்தியத்துக்கும் இந்தியப் பெருமுதலாளிகளுக்கும் இடையேயான உறவில் பிரதானமானது சார்பா,

படிப்பகம்

www.padippakam.com



முரண்பாடா என்பதில் த.நா.அ.க. வுக்கும், இ. பொ. க (மா)வுக்கும் அடிப்படையான வேறுபாடு உண்டு. இது இ. பொ. க. (மா-லெ)வுக்கும் இ. பொ. க. (மா)வுக்கும் உள்ள அடிப்படையான வேறுபாடாகும். ஆனால் இதைக் காண மறுக்கும் மா.அ. க. வினர் த.நா. அ. க. வின் நிலைப்பாடும், இ. பொ. க (மா) வின் நிலைப்பாடும்ஒன்றே எனக் காட்டும் முயற்சியில், உண்மையில் இந்தியப் பெரு முதலாளிகளுக்கும் ஏகாதிபத் தியத்திற்கும் இடையேயான இரண்டாம்பட்ச முரண்பாட்டையும் மறுத்து முரண்பாடே இல்லை என்ற நிலைக்குச் சென்றுவிடுகிறார் கள் என்பதை த. நா. அ. க. அவர்களுட னான விவாதத்தில் அம்பலப்படுத்தியிருக்கி கிறது. எனினும் இதில் அவர்கள் தொடர்ந்து சந்தர்ப்பவாதமாகவே இருக்கி றார்கள்.

எவ்வாறாயினும் தரகு முதலாளிகள் பற்றிய நிலைப்பாட்டில் ஏகாதிபத் தியத்துடன் அதற்குள்ள முரண்பாட்டை மறுக்கும்போக்கு நிலவியபோது இரண்டாம் பட்ச நிலையிலான முரண்பாடு உண்டு என்பதை நிறுவும் முயற்சியில் மட்டுமே த. நா. அ. க. ஈடுபட்டிருக்க வேண்டும். இதுவே தவறுகளைச் சரியாகத் திருத்து வதாக இருந்திருக்கும். அவ்வாறின்றி தரகு என்பதை சார்பு எனப் பொதுவாக மாற்றிய தும்அதற்கு ஸ்டாலின், மாவோ ஆகியோ ரின் ஒரு காலகட்டத்திற்குரிய மேற்கோள் களைப் பொதுமைப்படுத்தி தரகு முதலாளி கள் என்றாலே வணிக முதலாளிகள்தான், தொழில் முதலாளிகள் தரகு முதலாளி களாக இருக்க முடியாது என்று விளக்கம் பெற்றதும் தவறானதாகும். இத்தவறு வணிகத் தரகு முதலாளி களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் முரண் பாடே இருக்கமுடியாது என்ற மற்றொரு தவறையும் உள்ளடக்கியிருக்கிறது. எனினும் இத்தவறு இந்தியப் பெருமுதலாளிகள் புரட்சியின் தாக்குதல் இலக்கு, புரட்சியின் எதிரிகள் என்பதில் மாற்றத்தை ஏற் படுத்திவிடவில்லை. யுத்ததந்திர, போர்த் தந்திர முடிவுகளில் அடிப்படையான மாற்றம் எதையும் ஏற்படுத்திவிடவில்லை என்பதால் அது இ. பொ. க. (மா-லெ) யின் சரியான நிலைப்பாட்டிலிருந்து வழுவிய தவறல்ல என்பதையும் குறித்துக் கொள்ள வேண்டும்.

மற்றொரு தவறு அரைக்காலனி என் பதை சார்பு நாடு என மாற்றியதாகும். இதுவும்கூட அரைக்காலனி என்பதற்கு மா-லெ இயக்கத்தில் அளிக்கப்பட்டு வந்த பொருளாதாரவாத விளக்கங்களை மறுக்கும் போக்கில் ஏற்பட்ட தவறேயாகும். காலனி என்பது ஒரு ஏகாதிபத்தியத்தின் ஏகபோக சுரண்டல் என்றும் அரைக்காலனி என்பது பல ஏகாதிபத்தியங்களின் சுரண்டல் என்றும் அளிக்கப்பட்டு வந்த விளக்கத்தில் இருந்த பொருளாதாரவாதத்தை மறுக்கும் முகமாகவே த. நா. அ. க. அரைக் காலனி, என்பதை சார்புநாடு என மாற்றியது. காலனி, அரைக்காலனி என்பது பொருளாதார வகைப்பட்ட வரையறுப்பல்ல மாறாக அரசி யல் அதிகாரம் பற்றிய வரையறுப்பாகும். ஒரு ஏகாதிபத்தியத்தின் முழுமையான நேரடி அரசியல் அதிகாரத்தின் கீழ் இருக்கும் நாடு காலனி; பல ஏகாதிபத்தியங்கள் தமது முழு அரசியல் அதிகாரத்தை நிறுவும் நேரடிப் போட்டியில் இருக்கும் நாட்டில் உள்நாட்டு ஆளும் வர்க்கம் படிப்படியாக அதிகாரத்தை இழந்து வரும் நாடு அரைக்காலனி. அரைக் காலனி பற்றி லெனினும் மாவோவும் கூறி யிருப்பவற்றையும் சீனத்தில் நிலவிய அரைக் காலனி நிலையையும் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட த. நா. அ. க. அரைக்காலனி பற்றிய மேற்கண்ட வரையறுப்புக்கு வந்தது. இந்தியாவில் அத்தகையநிலை இல்லை என்பதால் இதை அரைக்காலனி என்று கூறமுடியாதென்றும் ஆனால் இந்திய பொருளாதாரம் ஏகாதிபத்திய சார்புகொண்ட தென்பதாலும் ஏகாதிபத்தியத்திற்கும் இந்திய ஆளும் வர்க்கங்களுக்கும் இடையிலான உறவில் சார்பே பிரதானமானதாய் இருப்ப தாலும் இதைச் சார்புநிலை நாடு என வரை யிறுப்பதே சரியானது என்றும் இந்தியாவைப் பற்றி முடிவுக்கு வந்தது. ஆனால் சீனாவின் அரைக்காலனிய நிலை என்பது இரண்டாம் உலகப் போருக்கு முந்திய காலனிய சகாப் தத்திற்குரிய வகையினம் என்பதையும், இந்தியா ஒரு அரைக்காலனி என்று 1970ம் ஆண்டு கட்சித்திட்டம் கூறுவது நவகாலனிய

படிப்பகம்

www.padippakam.com

சகாப்தத்தின் அரைக் காலனிய வகையினம் என்பதையும் த. நா. அ. க. பார்க்கத் தவறி விட்டது.

இத்தவறின் தொடர்ச்சியாக இந்தியாவின் அரசியல் சுதந்திரம் பற்றிய த. நா. அ. க. வின் தீர்மானம் அமைந்தது. பொருளாதார சார்புநாடுகள் அரசியல் சுதந்திரம் பெற்றவையாக இருக்க முடியும் என்று லெனின் பல்வேறு எடுத்துக்காட்டுகளுடன் வாதிடுவதை ஆதாரமாகக் கொண்டு சார்பு நாடான இந்தியா ஒரு அரசியல் சுதந்திரம் பெற்ற நாடே என த. நா. அ. க. தீர்மானித்தது. இதில் பொருளாதார சார்பைக் கொண்டு ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்தைத் தீர்மானிக்க முடியாது என்ற த. நா. அ. க. வின் வாதம் கோட்பாட்டரங்கில் பொருளாதாரவாதத்துக்கெதிரான சரியான வாதம் ஆகும். ஆனால் இந்தியா நவகாலனிய சகாப்தத்தைச் சேர்ந்த அரைக் காலனி என 1970ம் ஆண்டு கட்சித் திட்டம் வரையறுப்பதால் மேற்கண்ட கோட்பாட்டு விளக்கம் கோட்பாட்டரங்கில் அரசியல் சுதந்திரம் பற்றி மா-லெ புரட்சியாளர்களுக்கிடையே நிலவும் பொருளாதாரவாதக் கண்ணோட்டத்தைக் களைவதற்கு மட்டுமே பயன்படுமேயன்றி இந்திய சுதந்திரத்தின் தன்மையைப் புரிந்து கொள்வதற்குப் பயன்படாது உண்மையில் அரைக்காலனி என்றால் அரைசுதந்திர நாடு என மாவோவும் பெயரளவிலான சுதந்திரநாடு என லெனினும் விளக்குகிறார்கள். இது நவகாலனிய சகாப்தத்தின் அரைக்காலனிய நிலைக்கும் பொருந்துவதாகும். நவகாலனி என்பது ஏகாதிபத்தியம் ஒரு பொம்மை ஆட்சியின் மூலம் காலனியாதிக்கம் செலுத்துவதே; அவ்வாறாயின் நவகாலனிய சகாப்தத்தின் அரைக்காலனி என்பது உள்நாட்டு தரகு ஆளும் வர்க்க ஆட்சியாளர்கள் அரை பொம்மை நிலையில் அரை சுதந்திர அந்தஸ்துடன் (பெயரளவிலான சுதந்திரத்துடன்) ஏகாதிபத்திய நலன்பேணி ஆட்சி புரிவதன்றி வேறல்ல. எனவே இந்தியாவின் அரசியல் சுதந்திரம் பற்றி த. நா. அ. க. மேற்கொண்ட முடிவும் தவறானதாகும். இதன் பொருள் இந்தியா பெயரளவில் சுதந்திரம் பெற்ற அரைக்காலனி நாடு என்ற இ. பொ. க. (மா-லெ) யின் வரையறுப்பை நாம் அப்படியே ஏற்றுக்கொள்கிறோம் என்பதல்ல. இவ்வரையறை இந்தியாவின் பெயரளவிலான சுதந்திரம் மற்றும் ஏகாதிபத்திய சார்பை தெளிவுபடுத்துகிறது. எனினும் அது இந்திய தேசியம் என்ற போர்வையில் பல்வேறு தேசிய இனங்களின் அரசுரிமையையும் ஒடுக்கி ஒரு ஏகாதிபத்தியத்தன்மை பெற்றிருப்பதையும் அதன் இந்து பார்ப்பனியத் தன்மையையும் வெளிப்படுத்துவதில்லை. எனவே இந்தியா ஒரு தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்ற நிலைப்பாடே சரியான தாகும். மேலும் அரைக்காலனி அரை நிலப்பிரபுத்துவம் என்ற வரையறை, ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்திய தேசியம் என்ற நாட்டின் பல்தேசியப் பண்பை மறுக்கும் ஏகாதிபத்திய பொருளாதாரவாத நிலைப்பாடாகும்.

எவ்வாறாயினும் சார்பு முதலாளி, சார்பு நாடு, அரசியல் சுதந்திரம் ஆகிய நிலைப்பாடு மாற்றங்கள் இ. பொ. க. (மா-லெ) யின் யுத்ததந்திரம், போர்த்தந்திரம் ஆகியவற்றில் அடிப்படையான மாற்றத்தை ஏற்படுத்தாத நிலைப்பாடு மாற்றங்களேயாகும். இதனால் இத்தவறுகள் உணரப்பட்ட உடனே அவற்றை மாற்றுவதற்கு அவசரம் காட்டப்படவில்லை. அதன்மூலம் இந்நிலைப்பாடுகளுக்கு தேவையற்ற முக்கியத்துவம் அளிப்பது தவிர்க்கப்பட்டது. அதே நேரத்தில் இந்நிலைப்பாடுகள் புரட்சியாளர்களின்அய்க்கியத்திற்குத் தடையானவையோ அடிப்படையானவையோ அல்ல என்பதைத் தொடர்ந்து த. நா. அ. க. வலியுறுத்தி வந்ததுடன் அய்க்கியத்திற்கான சாத்தியப்பாட்டில் இந் நிலைப்பாடுகளை மாற்றிக்கொள்ளவும் தயாராய் இருந்தது.

இ. பொ. க. (மா-லெ)யில் பொதுவாகவும் மா. அ. க. வில் குறிப்பாகவும் நிலவிய பல்வேறு தவறுகளையும் களைந்து கொண்டு த. நா. அ. க., மா-லெ வழிப்பட்ட சரியான கோட்பாட்டு வரையறைகள் பலவற்றை வந்தடைந்திருந்த போதிலும் த. நா. அ. க. விலும் தேசம் பற்றி நிலவிய ஏகாதிபத்திய பொருளாதார வாதத்தினால் அந்த வரையறைகளை இந்தியாவின் பருண்மையான

படிப்பகம்

www.padippakam.com



நிலைமைகளில் பொருத்துவதில் வெற்றிபெற வில்லை. இ. பொ. க. (மா-லெ)க்குள் அதன் தவறுகளுக்கு எதிரான போராட்டத்தில் வந்தடைந்த சரியான நிலைப்பாடுகள் எவையும் தேசம் பற்றிய ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தால் இந்தியப் புரட்சி இயக்கத்தில் நிலவிய தேக்க நிலையை அகற்றுவதற்கோ, புரட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கோ பயன்படவில்லை.

இப்பொருளாதாரவாதக் கண்ணோட்டத்தால் ஈழப்பிரச்சினையிலும் கூட த.நா.அ.க. தவறான நிலைப்பாட்டையே மேற்கொண்டது. சிங்களப் பெருந் தேசிய இனத்தில் புரட்சிக்குத் தலைமையேற்கும் வலிமை வாய்ந்த பாட்டாளி வர்க்க இயக்கம் எதுவும் இல்லாத நிலையில் ஈழவிடுதலைப் புரட்சியை ஆதரிப்பதற்குப் பதிலாக இலங்கை புதிய சனநாயகப் புரட்சிக்குட்பட்ட ஈழ சுயநிர்ணய உரிமையையே த. நா. அ. க. ஆதரித்தது. மேலும் இந்தியாவில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் அதே வேளையில் அவை பிரிந்து செல்வதை ஆதரிப்பதில்லை என்ற நிலைப்பாடும் மேற்கொள்ளப்பட்டது. இவையெல்லாம் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தால் விளைந்த கடுமையான தவறுகளாகும்.

## 6

## த.நா.அ.க. வின் வேலைமுறையிலும் ஊழியர் கொள்கையிலும் தன்னியல்பு

''இன்னும் நாம் கட்சியமைப்பை பலப்படுத்தும் பணியை எதிர்கொண்டுள்ளோம். கட்சிக் கமிட்டிகள் நான்காவது பிளீன நிலைமைகளிலிருந்து பெருமளவுக்கு வளர்ச்சி அடைந்திருந்தபோதிலும் அரசியல்சித்தாந்த ரீதியில் புதிய ஊழியர்களை வென்றெடுத்து அமைப்பாக்குவதிலும், அமைப்பாக்கி அமைப்பு ரீதியில் இயக்குவதிலும் பயிற்சி பெற வேண்டிய நிலையிலேயே இருக்கின்றன. ஒரு ஒருங்கிணைந்த வேலைத்திட்ட அடிப்படையில் சுயேச்சைத் தன்மையுடன் செயல்படவும் பயிற்றுவிக்கப்பட வேண்டியவையாகவே இருக்கின்றன. கட்சியமைப்பை பலப்படுத்துவதில் அடுத்தபடியாகவும், உடனடியாகவும் ஆற்றப்படவேண்டிய பணியாக இருப்பது இதுவேயாகும்.''

நான்காவது பிளீனத்திற்குப் பின் கட்சியமைப்பு படிப்படியாக பலப்படுத்தப் பட்டு வந்திருப்பதை அய்ந்து கட்டங்களாக தொகுத்துரைத்த அய்ந்தாவது பிளீன அரசியல்-அமைப்பு அறிக்கை மேலும் கட்சியமைப்பு பலப்படுத்தப்பட வேண்டிய நிலையில் இருப்பதை மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியது.

அய்ந்தாவது பிளீனத்திற்குப் பின் கூடிய த.நா.அ. கமிட்டியின் முதல் கூட்டம் கட்சிக் கமிட்டிகளின் சுயமாகச் செயல்படும் திறனை வளர்ப்பதற்கு தோழர்களிடம் நிலவும் அதிகாரத்துவ, தாராளவாதப் போக்குகளைக் களைவதும், அரசியல் வழியிலும் அமைப்பு வழியிலும் வேலைமுறையிலும் தொலைநோக்கையும், தெளிவையும் தருவதும் அவசியம் எனக்கருதியது. இதற்கான இயக்கங்களை நடத்தவும் திட்டமிட்டது. அடுத்து வந்த கமிட்டிக்கூட்டங்களில் கட்சியின் கடந்த கால வேலைமுறைகளையும், ஊழியர் கொள்கைகளையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட த.நா.அ.க., ஊழியர்களிடையே நிலவும் அதிகாரத்துவ, தாராளவாதப் போக்குகளுக்கான காரணம் கடந்தகால வேலைமுறையிலும் ஊழியர் கொள்கையிலும் இருந்த தன்னியல்பே என முடிவுக்கு வந்தது. அதை ஏப்ரல் 1991ல் மூன்றாவது சுற்றறிக்கை மூலம் அணிகளுக்குத் தெரிவித்தது.

த.நா.அ.க.வின் மூன்றாவது பிளீனம் 1983 மே-யிலும் நான்காவது பிளீனம் 1986 செப்டம்பரிலும், அய்ந்தாவது பிளீனம் 1990 அக்டோபரிலும் நடைபெற்றன. மா.அ.க.விலிருந்து உட்கட்சிப் போராட்டத்தில் உருவான த.நா.அ.க. 1983ல் நடைபெற்ற மூன்றாவது பிளீனத்தில் தனது புதிய அரசியல் கோட்பாட்டு நிலைப்பாடுகளை உறுதிப்

படிப்பகம்

www.padippakam.com



படுத்திக் கொண்டது. திருத்தப்பட்ட கட்சித் திட்டம் (நகல்) ஒன்றையும், அரசியல் தீர்மானம் ஒன்றையும் இப்பிளீனம் நிறை வேற்றியது. இப்பிளீனத்தில் நிறைவேற்றப் பட்ட அரசியல்-அமைப்பு அறிக்கை 'சிதறுண்ட கட்சியை மையப்படுத்துவோம் தனிமைப்பட்ட கட்சியை மக்களுடன் இணைப் போம், இடது, வலது திரிபுகளுக்கு எதிராகப் போராடுவோம், என்ற முழக் கங்களை முன் வைத்தது. 1986 செப்டம்பரில் நடைபெற்ற நான்காவது பிளீனம் 'கட்சி அமைப்பை பலப்படுத்து வோம், அரசியல் சக்தியாய் எழுச்சியுறு வோம் அய்க்கியப்பட்ட கட்சியைக் கட்டு வதற்கானப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம்' என்ற முழக்கங்களை முன் வைத்தது.

1990 அக்டோபரில் நடைபெற்ற அய்ந் தாவது பிளீனம் 'ஒரு அரசியல் சக்தியாய் எழுச்சியுறுவது அதற்கான போராட்டத்தி னூடாக அய்க்கியப்பட்ட கட்சியைக் கட்டு வதற்கான குறைந்தபட்ச அமைப்புப் பலத் தைப் பெறுவது என்ற நமது நோக்கத்தை இனிமேல்தான் நாம் நிறைவு செய்ய வேண் டும்' என்று சுட்டிக்காட்டியதுடன் அதற்கு ஒரு ஒருங்கிணைந்த வேலைமுறை அவசியம் என்று வலியுறுத்தியது.

மூன்று, நான்கு, அய்ந்து ஆகிய மூன்று பிளீனங்களிலுமே ஒரு அய்க்கியப்பட்ட கட்சி யைக் கட்டுவதும், கட்சியை மக்களுடன் இணைத்து ஒரு அரசியல் சக்தியாய் எழுச்சி யுறுவதும் அமைப்பின் இலக்காகவும், அதற்கு குறைந்தபட்ச அமைப்புப் பலத்தைப் பெறுவது அமைப்பின் உடனடி நோக்க மாகவும் இருந்து வந்திருக்கிறது.

இரண்டாவது பிளீனம் தீர்மானித்தவாறு அரசியல் கோட்பாட்டுப் பிரச்சனைகளை உட்கட்சி விவாதத்தின் மூலம் தீர்க்காமல் மாறுபட்ட அ. கோ. நிலைப்பாடுகளை அறிக்கையாக வைத்த தோழர்களை சதிச் செயல்கள் மூலம் அமைப்பிலிருந்து வெளியேற்றி மா. அ. க. தலைமை அமைப் பைப் பிளவுபடுத்தியதால் உருவான த. நா. அ. க. தனது புதிய அ. கோ. நிலைப்பாடுகளின் அடிப்படையில் அணி களை வென்றெடுத்து அமைப்பாக்குவதை யும், புதிய நிலைப்பாடுகளை முறையாக ஒரு பிளீனத்தின் மூலம் அமைப்பின் நிலைப் பாடுகளாக உறுதிப்படுத்துவதையும் உடனடிப் பணியாக எதிர்கொண்டது. மூன்றாவது பிளீனத்தின் மூலம் இக் கடமைகள் நிறைவு செய்யப்பட்டபின் மூன்றா வது பிளீனம் முன்வைத்த முழக்கங்களை நிறைவேற்றும் பணி அமைப்பின் முன் நின்றது.

மூன்றாவது பிளீனம் முடிவுற்ற நிலையில் அமைப்பு மிகவும் பலவீனமாகவே இருந்தது. தலைமைக் கமிட்டியில் மட்டுமே முழு நேர ஊழியர்கள் இருந்தனர். அமைப்பின் அர சியல் நிலைப்பாடுகளை கிரகித்துக் கொள் வதில் அணிகளிடையே குறைபாடுகள் இருந் தன. இடது சந்தர்ப்பவாதத்தை எதிர்த்த போராட்டத்தில் வென்றெடுக்கப்பட்ட பழைய புதிய அணிகளிடையே அமைப்புக் கட்டுப் பாடு, அரசியல் வழிக்காக உறுதியாகப் போராடுவது, தோழர்கள், மக்களிடையே பாட்டாளி வர்க்க உறவுகளை மேற்கொள் வது புரட்சிக்கும், மக்களுக்கும் பொறுப்பாக இருப்பது, திட்டமிட்ட பணிகளுக்காக கடின மாக உழைப்பது ஆகிய சிறந்த கம்யூனிஸ்ட் குணங்களில் தாராளவாதப் போக்குகள் இருந்தன.

எனவே மூன்றாவது பிளீனம் முன்வைத்த முழக்கமான சிதறுண்ட கட்சியை மையப் படுத்துவது, தனிமைப்பட்ட கட்சியை மக்க ளுடன் இணைப்பது என்ற கடமையை நிறைவேற்றுவதற்கு முன்னதாகவும் உடனடி யாகவும் தனது சொந்த அமைப்பில் நிலவும் குறைபாடுகளைக் களைந்து அமைப்பை பலப்படுத்தும் பொறுப்பை த. நா. அ. க. எதிர்கொண்டது.

அதற்காக அணிகளிடையே தாராள வாதத்தை எதிர்த்தும், அரசியல் வழியை கிரகிக்கச் செய்வதற்கும் தனித்தனியே இயக் கங்கள் நடத்துவது என த. நா. அ. க. திட்டமிட்டது. அதன்படி அமைப்பில் நிலவிய தாராளவாதப் போக்குகள் அனைத்தையும்

படிப்பகம்

www.padippakam.com



தொகுத்து 'கட்சியின் அரசியல் வழியை உறுதியாகப் பற்றுங்கள் அனைத்து வழிகளிலும் தாராளவாதத்தை எதிர்த்துப் போராடுங்கள்' என்று அறைகூவல் விடும் அறிக்கை ஒன்றை அணிகளிடையே சுற்றுக்கு விட்டு விமர்சன - சுயவிமர்சன இயக்கம் நடத்தியது. 'கட்சியின் அரசியல் வழியில் உறுதியும், திடநம்பிக்கையும், கமிட்டி செயல்முறையில் கட்டுப்பாடு, திட்டமிட்ட பணிகளுக்கு கடின உழைப்பு, கட்சிக்குள் தோழமை உறவு, மக்களிடத்து பணிவு' என்ற முழக்கங்களை இந்த அறிக்கை முன்வைத்திருந்தது.

தாராளவாத எதிர்ப்பு இயக்கத்துடன் கூடவே அரசியல் கிரகிப்பு இயக்கத்தையும் தொடங்கி வைத்தது. அதற்காக கட்சித் திட்டம், அரசியல் தீர்மானம், கட்சி வரலாறு, அரசியல், அமைப்பு அறிக்கை ஆகியவற்றையும் மாவோ, ஸ்டாலின், டிமிட்ரோ ஆகியோரின் ஸ்தாபனம் மற்றும் ஊழியர் பற்றிய கட்டுரைத் தொகுப்பையும் பயன்படுத்திக் கொண்டது.

ஊழியர்களின் மக்கள் திரள் இயக்க நடவடிக்கைகளிலும் மாற்றத்தைக் கொண்டு வந்தது. இதுவரை பின்பற்றப்பட்டு வந்த சுவரொட்டிகள், துண்டறிக்கைகள், பொதுக் கூட்டங்கள் என்ற ம. தி. இயக்க வடிவங்களுடன் பெருமளவில் உரிமை, கலாச்சார, அமைப்புகள் மூலம் கலைக்குழுக்கள், தெருமுனைப் பிரச்சாரக்கூட்டங்கள், பேரணிகள் என, ம.தி. இயக்க நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது. கலைக்குழுக்கள் முழுநேர ஊழியர்களை வென்றெடுப்பதற்கான அரங்காகவும் விளங்கியது. 1984-ம் ஆண்டுஇறுதியில் ஏறக்குறைய முப்பது முழுநேர ஊழியர்கள் கட்சியில் பணியாற்றினர். தலைமைக் கமிட்டியின் கீழ் அடுத்த மட்ட முழுநேர ஊழியர்களின் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. ஆனால் இக்கமிட்டிகள் சுயமாக செயல்படும் கமிட்டிகளாக, அதாவது மேல் கமிட்டித் தோழர்களின் நேரடி பங்கேற்பின்றிச் செயல்படும் கமிட்டிகளாக இல்லை.

இந்நிலையில் (1984 நவ) த.நா.அ.க. மூன்று கட்டங்களைக் கொண்ட பொது வேலைத்திட்டம் ஒன்றை வகுத்துக் கொண்டது. முதல் கட்டம் கட்சியின் மாவட்ட அமைப்புகளைச் சுயமாக இயங்கச் செய்வது பிரதானமான பணி, இரண்டாவது கட்டம் அரசியல் பத்திரிகை தொடங்குவதும், புதிய ம. தி. அமைப்புகளைத் தொடங்குவதற்கான பணிகளைச் செய்வதும் பிரதானமானது. மூன்றாவது கட்டம் அ. இ. பொ. பு. ஒ. க. அமைப்பதற்கான போராட்டத்தை முதன்மைப் படுத்துவதும், அடிப்படை வர்க்கங்களிடையே ம. தி. அமைப்புகளைத் தொடங்குவதும் பிரதானப் பணி.

இவ்வாறு வகுத்துக் கொண்டபின் மாவட்ட கட்சி அமைப்புகளைச் சுயமாக இயங்கச் செய்வதற்காக இரண்டு பணிகளை மேற்கொண்டது. முதலாவதாக, கட்சி அரசியல் வகுப்பு பாடத்திட்டம் ஒன்றை தயாரித்து முழுநேர ஊழியர்களுக்கான அய்ந்துநாள் அரசியல் வகுப்பு ஒன்றை நடத்தியது. பின்னர் மாவட்ட அமைப்புக் கமிட்டிகள் மூலம் அணிகளுக்கு ஒவ்வொரு பகுதியிலும் அரசியல் வகுப்புகள் நடத்தப்பட்டன. இயக்கவியல் பொருள் முதல்வாதம், வரலாற்றியல் பொருள்முதல்வாதம், கட்சியும் - புரட்சியும், நமது பாதை என்ற நான்கு பெரும் தலைப்புகளில் இப்பாடத்திட்டம் அமைந்திருந்தது. பின்னர் கட்சி ஊழியர்களிடையே காணப்பட்ட பல்வேறு வகை தாராளவாதப் போக்குகளையும் முப்பத்தேழு தலைப்புகளில் தொகுத்து (1985 மார்ச்) தாராளவாத எதிர்ப்பு இயக்கம் ஒன்றையும் விமர்சன - சுயவிமர்சன இயக்கமாக த. நா. அ. க. திட்டமிட்டு நடத்தியது.

இதன்பின் பா. எ. தே. மாநாட்டுப் பணிகளில் முழுநேரமாக ஈடுபட்ட பெரும்பாலான தோழர்கள் மாநாட்டுக்குப் பின் கட்சியின் முழு நேர ஊழியர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர். இதனால் கட்சியில் முழு நேரமாக பணிபுரிகின்றவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய எழுபது ஆகியது. ஆனால் இவர்களில் மிகப் பெரும்பாலோர் கட்சியின் ஆதரவாளர் நிலையில் இருந்தவர்களே. முழு நேரமாக இணைத்துக் கொள்ளப் பட்டாலும் இவர்கள் அரசியல், சித்தாந்த தெளிவோ, அமைப்புப் பயிற்சியோ அற்ற

படிப்பகம்

www.padippakam.com



வர்கள்; எனவே இவர்களுக்கென்று பகுதிப் பிரச்சாரக்குழு, முழுநேர ஆதரவாளர்கள் அமைப்பு என்ற அமைப்புகள் ஏற்படுத்தப் பட்டு கலைக்குழு, தெருமுனைப் பிரச்சாரம், புதிதாக தொடங்கப்பட்ட அரசியல் பத்திரிகை மற்றும் ஏற்கனவே வெளியிடப் படும் கலாச்சாரப் பத்திரிகை விற்பனை ஆகிய பணிகள் அவர்களுக்குத் தரப்பட்டன.

இது கட்சிக்குள் வெகுவிரைவிலேயே அமைப்புச் சிக்கல்களைத் தோற்றுவித்தது. கட்சிக் கட்டுப்பாடு, கட்சி அமைப்பு ரகசியம் ஆகியவற்றில் தாராளவாதப் போக்குகளும், குட்டி முதலாளிய சுயநலவாதப் போக்கு களும் வெளிப்படையாகத் தலைதூக்கின.

இந்நிலையிலேயே கட்சி நான்காவது பிளீனத்தை எதிர்கொண்டது. நான்காவது பிளீனம் குட்டி முதலாளிய சுயநலப் போக்குகளால் எழும் தாராளவாதப் போக்கு களுக்கு முடிவுகட்டி கட்சியமைப்பைப் பலப் படுத்தும் கடமையை உடனடிக் கடமையாக வலியுறுத்தியது. அய்க்கியப்பட்ட கட்சியைக் கட்டுவதற்கான போராட்டத்தை முன்னெடுப் பதற்கே முதல் நிபந்தனையாக குறைந்த பட்ச அமைப்பு பலம் பெறவேண்டும் என் பதை வலியுறுத்தியது. குறைந்தபட்ச அமைப்பு பலம் என்பது பலமான தலைமைக் கமிட்டி, சுயமாக இயங்கக்கூடிய பலமான மாவட்ட அமைப்புக் கமிட்டிகள், ம.தி. அமைப்புக் கமிட்டிகள், பத்திரிகை கமிட்டி ஆகியன கொண்ட கட்சி அமைப்பு என்றும் அது விளக்கப்படுத்தியது.

நான்காவது பிளீனம் முடிவுற்றவுடன் கட்சிக்குள் நிலவிய தாராளவாதப் போக்கு கள் அனைத்தையும் இருநூறு வகைகளாக பதினேழு தலைப்புகளில் தொகுத்து விமர் சன - சுயவிமர்சன இயக்கமாக கட்சி முழு வதும் தாராளவாத எதிர்ப்பு இயக்கம் நடத்தப்பட்டது. இவ்வியக்கத்தின் மூலம் கட்சிக்குள் நிலவிய பல்வேறுவகை தவறான கருத்துக்கள், அணுகுமுறைகள், போக்குகள் கண்டறியப்பட்டன.

அடுத்து உடனடியாக (1987 ஜுன்) வேலைமுறை மற்றும் வேலைத் திட்டம் ஒன்றை வகுத்து த. நா. அ.க. முன்வைத் தது. இதில் பொது வேலைமுறையும், உடனடி வேலைத் திட்டமும் அடங்கி இருந் தது. பொதுவேலைமுறையில் ஆதரவாளர் கள், பகுதிநேர ஊழியர்கள், முழு நேர ஊழியர்கள் என்ற முறையில் படிப்படியாக ஊழியர்களாகக் கூடியவர்களைக் கண்ட றிந்து வளர்த்தெடுப்பதற்கான ஊழியர் கொள்கை முன் வைக்கப்பட்டிருந்தது. உடனடி வேலைத்திட்டம் மூன்றாவது பிளீனத்திலிருந்து தீர்க்கப்படாமலிருந்த சர்வ தேச கம்யூனிச இயக்கம் பற்றிய பிரச் சனையைத் தீர்ப்பது பற்றியும், பல்வேறு மட்ட கட்சி அமைப்புகளின் பணிகள் குறித்தும் வரையறுத்திருந்தது.

தாராளவாத எதிர்ப்பு இயக்கத்திற்குப் பின் சர்வதேச கம்யூனிச இயக்கம் பற்றிய பிரச்சனை ஒரு இயக்கமாக கட்சிக்குள் தீர்க்கப்பட்டது. தாராளவாத எதிர்ப்பு இயக்கமும், சர்வதேச கம்யூனிச இயக்கம் பற்றிய பிரச்சனை தீர்க்கப்பட்டதும் கட்சி ஸ்தாபனத்தை அரசியல் சித்தாந்த மட்டத் திலும், ஸ்தாபன உணர்விலும் ஒப்பீட்டள வில் பலப்படுத்தியிருந்தது. எனினும் கட்சிக் கமிட்டிகள் அப்போதும் சுயமாக இயங்கும் ஆற்றலைப் பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் 1988 சனவரியில் ஒரு அரசியல் சக்தியாய் எழுச்சியுறுவோம் என்ற முழக்கத்துடன் பல்வேறு ம.தி. அமைப்பு களையும் கட்டுவதற்கான வழிகாட்டும் சுற்ற றிக்கை ஒன்றை த.நா.அ.க. வெளியிட்டது. ம.தி. அமைப்புகளுக்கான அமைப்பு முறை மற்றும் முழக்கங்கள், இயக்க வடிவங்கள் அவற்றில் கொடுக்கப்பட்டிருந்தன. ஏற் கனவே உள்ள உரிமை, கலாச்சார அமைப்பு களுடன் அடிப்படை வர்க்கப் பிரிவுகளையும் அமைப்பு ரீதியாகத் திரட்டுவதை அது நோக்கமாகக் கொண்டிருந்தது

நான்காவது பிளீனத்தின் முழக்கமான அமைப்பை பலப்படுத்தும் முதல் கட்டம் முடிந்துவிட்டது என்றும், அரசியல் சக்தி யாய் எழுச்சியுறும் இரண்டாவது கட்டம் தொடங்கிவிட்டது என்றும் அந்தச் சுற்றறிக் கையில் த.நா.அ.க. அறிவித்தது.

படிப்பகம்

www.padippakam.com



மாணவர், தொழிலாளர், விவசாயிகள் அமைப்புகளுக்கான பிரச்சாரப் பிரசுரங்களைத் தயாரித்து 1985லிலேயே த.நா.அ.க. அணிகளுக்குச் சுற்றுக்கு விட்டிருந்தது. 1987 சனவரி வேலைத்திட்டம் வகுக்கப்பட்டபோது இப்பிரசுரங்களின் அடிப்படையில் அந்தந்த பிரிவுகளில் வேலை செய்யும் கட்சி அமைப்புகள் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வழி காட்டியிருந்தது. இதன் தொடர்ச்சியாக அரசியல் சக்தியாய் எழுச்சியுறுவோம் என்ற முழக்கத்தின்கீழ் பல்வேறு ம.தி. அமைப்புகளைக் கட்டுவதற்கான வழிகாட்டுதல்கள் அமைந்திருந்தன.

ஆண்டிறுதியில் இச்சுற்றறிக்கை அடிப்படையிலான பணிகள் கட்சிக் கமிட்டிகளில் பரிசீலிக்கப்பட்டு ஊழியர் கொள்கைக்கான பத்து வழிகாட்டும் நெறிகளும் அமைப்புக் கொள்கைகளுக்கான நான்கு வழிகாட்டும் நெறிகளும் தொகுக்கப்பட்டன. இவை பல்வேறுமட்ட ஊழியர்களையும், அமைப்பு முறைகளையும் வேறுபடுத்தி அணுகுவதற்கான வழிகாட்டுதல்களாக இருந்தன. கூடவே, அனைத்து ம.தி.அமைப்புகளுக்கும் சம முக்கியத்துவம் என்பது மாற்றப்பட்டு விவசாயிகள் அமைப்புக்கும் இளைஞர் அமைப்புக்கும் முதன்மையளிப்பது என தீர்மானிக்கப்பட்டது. மேலும் துணை அமைப்புகளுக்கென்று நான்கு முழக்கங்கள் வகுத்துக் கொடுக்கப்பட்டது. இவை அனைத்தும் 'அனுபவங்களைத் தொகுத்து வேலை முறையைச் செழுமைப்படுத்தி முன்னேறுவோம்' என்ற (நவ.1988) சுற்றறிக்கை மூலம் கட்சிக் கமிட்டிகளுக்குச்சுற்றுக்கு விடப்பட்டது. மேலும் ஏப். 1989ல் துணை அமைப்புகள் கட்டுவதில் அனுபவங்கள் தொகுக்கப்பட்டு 'துணை அமைப்புகளைக் கட்டுவதில் அனுபவங்களைத் தொகுத்து முன்னேறுக' என்ற தலைப்பில்ஒரு அறிக்கைஅணிகளுக்குச் சுற்றுக்கு விடப்பட்டது. இதில் ம.தி. அமைப்பைக் கட்டும் பணி முறையினூடாக ஊழியர்களைக் கண்டறிந்து படிப்படியாக வளர்த்தெடுப்பதற்கான வழிமுறைகள் தொகுத்துக் கொடுக்கப்பட்டிருந்தன.

இத்தகைய வழிகாட்டுதல்களால் கட்சி அணிகள் அடிப்படை வர்க்க மக்கள் பிரிவினரை குறிப்பாக விவசாயிகளை அமைப்பு ரீதியில் அணி திரட்டுவதில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றார்கள். எனினும் தொடர்ந்து முன்னேறுவதில் தேக்கம் ஏற்பட்டது. அனுபவங்களைத் தொகுத்துக் கொள்வதிலும் ஊழியர்களைப் படிப்படியாக அடுத்தடுத்த மட்டத்துக்கு வளர்த்து முன்னணி, கட்சி அமைப்புகளைக் கட்டுவதிலும் அணிகள் செயல்திறமற்றவர்களாக இருந்தனர். துணை அமைப்புப் பணிகளுடன் முன்னணி, கட்சி அமைப்புப் பணிகள், அரசியல் இயக்கங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைந்த முறையில் கையாள்வதிலும் தேக்கம் வெளிப்பட்டது. கட்சிக் கமிட்டிகள், பல்துறைப் பணிகளையும் ஒருங்கிணைத்து சுயமாகச் செயல்படும் ஆற்றல் பெறாமல் அடுத்த கட்ட வளர்ச்சி சாத்தியமில்லை என்ற நிலை தோன்றியது.

த.நா.அ.க. தனக்கு அடுத்த மட்ட கமிட்டிகளில் பணிப்பரிசீலனைக்கான தொடர்கூட்டங்களை நடத்தியும், பணித் தொகுப்பை மேற்கொண்டும், வேலைமுறை கிரகிப்பு இயக்கத்தை நடத்தியும் கமிட்டிகளின் பன்முகப்பணிகளை ஒருங்கிணைக்கும் ஆற்றலையும், கமிட்டிசெயல்திறனையும் வளர்க்கும் முயற்சிகளை மேற்கொண்டது.

இந்த நிலையில்தான் கட்சி அய்ந்தாவது பிளீனத்தை எதிர்கொண்டது. அய்ந்தாவது பிளீனத்தில் நிறைவேற்றப்பட்ட அரசியல் அமைப்பு அறிக்கை நான்காவது பிளீனத்திலிருந்து அய்ந்தாவது பிளீனம் வரையிலுமான காலத்தில் கட்சி அமைப்பு அய்ந்து கட்டங்களாகப் படிப்படியாக பலப்படுத்தப் பட்டு வந்திருக்கிறதுஎன்று தொகுத்துரைத்து விட்டு இறுதியாக இன்னும் கட்சிக் கமிட்டிகள் சுயமாக இயங்குவதற்கான செயலாற்றல் வளர்க்கப்பட வேண்டிய நிலையிலேயே இருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்டியது. அய்ந்தாவது பிளீனத்திற்குப்பின் கூடிய த.நா.அ. கமிட்டி, முதலில் கட்சி கமிட்டிகள் சுயமாகச் செயல்படத் தடையாக இருப்பது தோழர்களிடம் இருக்கும்

படிப்பகம்

www.padippakam.com

அதிகாரத்துவ, தாராளவாதப் போக்குகளே என்றும் அவற்றைக் களைவதற்கான தாராள வாத எதிர்ப்பு இயக்கம் ஒன்றையும் வேலைமுறையிலும் அரசியல் அமைப்பு வழியிலும் தொலைநோக்கையும் தெளிவையும் கொடுப்பதற்கான இயக்கம் ஒன்றையும் நடத்துவதன் மூலம் சரிசெய்ய முடியும் என்றும் தீர்மானித்து திட்டமிட்டாலும் அடுத்தடுத்த கமிட்டிக் கூட்டங்களில் தோழர் களின் அதிகாரத்துவ தாராளவாதப் போக்கு களுக்கும், கமிட்டிகளில் சுயமாகச் செயல்படும் திறனில் உள்ள குறைபாடுகளுக்கும் காரணம் கடந்த கால வேலைமுறையிலும் ஊழியர் கொள்கையிலும் இருந்த தன்னியல்பே என்றும் தீர்மானித்தது.

ஊழியர் கொள்கையைப் பொறுத்தவரை யில் மூன்றாவது பிளீனத்திலிருந்து நான் காவது பிளீனம் வரையில் த.நா.அ.க. ஊழியர் கொள்கை எதையும் வகுத்துக் கொள்ளவில்லை. 1984 நவம்பரில் வகுக்கப் பட்ட பொதுவேலைத்திட்டத்தில் கூட ஊழியர்கொள்கைஎதுவும் வகுக்கப்பட்டிருக்க வில்லை,நான்காவதுபிளீனத்திற்குப்பின்1987 சனவரியில் வகுக்கப்பட்ட வேலைத்திட்டத் திலும், நவம்பர் 1988 சுற்றறிக்கையிலும், ஏப் 1989 துணை அமைப்புப் பணிகள் அனுபவத் தொகுப்பிலும் ஊழியர் கொள் கைகள் வகுக்கப்பட்டு மேலும் மேலும் செழுமைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட் டன. எனினும் கட்சிக் கமிட்டிகள் எந்தக் கட்டத்திலும் சுயமாக செயலாற்றும் ஆற்றல் கொண்டவையாக இல்லாததால் இக்கொள் கைகள் முழு அளவில் நடைமுறைக்குக் கொண்டு செல்லப்படவில்லை. இவ்வாறு மூன்றாவது பிளீனத்திலிருந்து நான்காவது பிளீனம் வரையிலும் சரி, நான்காவது பிளீனத்திலிருந்து அய்ந்தாவது பிளீனம் வரையிலும் சரி அமைப்பைக் கட்டுவதற்கான ஊழியர் தேர்வும் தயாரிப்பும் தன்னியல் பாகவே நடந்து வந்தன. உண்மையில் இக்காலத்தில் நாம் பின்பற்றி வந்த ஊழியர் கொள்கை சரியான ஊழியர் கொள்கைக்கு தலைகீழான முறையிலேயே இருந்து வந்திருக்கிறது. அமைப்புக்குத் தேவையான முறையில் ஊழியர்களைத் தயாரித்து அமைப் பைக் கட்டுவதற்குப் பதில், தயாராய் இருப் பவர்களைக் கொண்டு அமைப்பைக் கட்டி அவர்களை அவ்வமைப்புக்குரிய ஊழியர் களாய் தயாரிக்கும் தலைகீழானமுறையே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இதுவே கமிட்டிகள் சுயமாக இயங்குவதே தொடர்ந்து ஒரு பிரச்சனையாக இருந்து வருவதற்கும், மாற்றுவர்க்க கருத்தோட்டங்களால் தாராள வாத, அதிகாரத்துவ போக்குகள்தொடர்ந்து கமிட்டிகளில் நீடிப்பதற்கும் காரணமாகியது.

1984-ல் கலைக்குழுவில் பணியாற்றிய தோழர்களிடமிருந்து முழுநேர ஊழியர் களைத் தேர்வு செய்து முழுநேர கட்சி அமைப்புகள் கட்டப்பட்டன. அவர்களுக்கு அரசியல் வகுப்புகள் நடத்தியதன் மூலமும், தாராளவாத எதிர்ப்பு இயக்கம் நடத்தப் பட்டதன் மூலமும் அக்கமிட்டிகள் செயல் திறன் உயர்த்தப்பட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. 1984-ல் வகுக்கப்பட்ட பொதுவேலைத் திட்டத்தில் இக்கமிட்டிகள் சுயமாக இயங்கச் செய்யப்பட வேண்டும் என்பதே முதல் கட்டமாகக் குறிக்கப்பட்டது. அரசியல் வகுப்புகள், தாராளவாத எதிர்ப்பு இயக்கங்கள் மூலம் இக்கமிட்டிகள்முழுஅளவு சுயமாக இயங்கும் ஆற்றல் பெறாதிருந்த நிலையிலேயே பா. எ. தே. மாநாட்டுப் பணியில் ஈடுபட்டிருந்த தோழர்களிடமிருந்து பெருமளவிற்கு முழு நேர ஊழியர்கள் - அவர்கள் கட்சியின் ஆதரவாளர் நிலையில் இருப்பவர்களாக இருந்தும் - அமைப்பில் இணைக்கப்பட்டார்கள். அவர்களுக்காகவே ப. பி. கு., மு. க. ஆ. அமைப்புகள் உரு வாக்கப்பட்டன. அக்கமிட்டிகளுக்கு அரசி யல் பத்திரிகை விற்பனை மற்றும் கலைக் குழு, தெருமுனைப் பிரச்சாரப் பணிகள் தரப் பட்டன. இது மேலும் கட்சிக்குள் குட்டி முதலாளித்துவ போக்குகளுக்கும் தாராள வாதப் போக்குகளுக்கும் காரணமாக அமைந் தன.

நான்காவது பிளீனத்திற்குப்பின் மீண்டும் தாராளவாத எதிர்ப்பு இயக்கம் நடத்தப்பட்டு பெருமளவுக்கு தவறான

படிப்பகம்

www.padippakam.com



போக்குகள் களையப்பட்டன. எனினும்கட்சிக் கமிட்டிகள் சுயமாகச் செயலாற்றும் தன்மை பெற்றுவிடவில்லை. சர்வதேச கம்யூனிச இயக்கம் பற்றிய பிரச்சனையை ஒரு இயக்கமாக தீர்த்தது கட்சியின் சித்தாந்த மட்டத்தை உயர்த்தியது எனினும் கமிட்டிகள் சுயமாகச் செயல்படும் ஆற்றல்பெறும் நிலையை அடையவில்லை. இந்நிலையில் 1988ல் அரசியல் சக்தியாய் எழுச்சியுறுவோம் என்ற முழக்கத்தின் கீழ் பல்வேறு ம.தி. அமைப்புகளைக் கட்டும் பணிகளைத் தொடர்ந்து பின், கமிட்டிகள் அடிப்படை வர்க்கங்களில் மக்களை அமைப்பாக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது அவர்களிடம் பாட்டாளி வர்க்க உணர்வை வளர்த்தது. எனினும் தொடர்ந்து பணிகளை முன்னெடுத்துச் செல்வதில் கமிட்டிகளிடம் சுயமாகச் செயலாற்றும் திறமையின்மையைக் களைவதற்காக மண்டல அமைப்புக் கமிட்டிகளில், தொடர்கூட்டங்களும் பணித்தொகுப்பும், வேலைமுறை கிரகிப்பு இயக்கமும் நடத்தப்பட்டது. ஊழியர்களுக்கு அரசியல் வகுப்புகளும் நடத்தப்பட்டன. இவை எல்லாம் மேலும் ஊழியர்கள், கமிட்டிகளின் அரசியல் அமைப்பு உணர்வை, செயல் திறனை ஒப்பீட்டளவில் வளர்க்க உதவின. எனினும் பன்முகப் பணிகளையும் சுயமாகத் திட்டமிட்டு கமிட்டி முறையில் செயல்படுத்தும் முழு ஆற்றலையும் பெற இனிமேல்தான் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்றே அய்ந்தாவது பிளீன அறிக்கை தொகுத்துரைத்தது.

மூன்றாவது பிளீனத்திலிருந்து நான்காவது பிளீனம் வரையிலும் தன்னியல்பான முறையில் ஊழியர் சேர்க்கையும் அமைப்பாக்கலும் நடைபெற்றது எனின், நான்காவது பிளீனத்திலிருந்து அய்ந்தாவது பிளீனம் வரை சேர்க்கப்பட்ட ஊழியர்களையும், கட்டப்பட்ட அமைப்புகளையும் சுயமாக இயங்கச் செய்வதற்கான செயலாற்றலை வளர்ப்பதே பிரதான நோக்கமும், பணியுமாக இருந்தது என்பதையே இவை காட்டுகின்றன. எனவே 1987ல் பொதுவேலைத் திட்டத்தில் வகுக்கப்பட்ட ஊழியர் கொள்கையும் சரி, 1988-89ல் செழுமைப்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்ட ஊழியர் கொள்கைகளும் சரி கட்சிக் கமிட்டிகள்-ஊழியர்களின் செயல்பாட்டுக்குரியனவாக இல்லை.

மூன்றாவது பிளீனத்திற்குப்பின் தொடர்ச்சியாக ஊழியர் கொள்கையில் நிலவிய தன்னியல்பு கட்சியில் தொடர்ந்து நெருக்கடிகளுக்குக் காரணமாக இருந்தது. ஒரு அய்க்கியப்பட்ட கட்சியைக் கட்டுவதற்கானப் போராட்டத்தைத் தொடங்குவதற்கே குறைந்தபட்ச அமைப்பு பலம் தேவை என்பதை மூன்றாவது பிளீனம் முடிவுற்ற தருவாயிலேயே த. நா. அ. க. உணர்ந்திருந்தது. நான்காவது பிளீன அறிக்கையில் அதைத் தெளிவாகவே குறிப்பிட்டது. எனவே குறைந்தபட்ச அமைப்பு பலத்தை பெறுவதை இலக்காகக் கொண்டே கட்சியின் வேலைமுறை பிரதானமாக அமைக்கப்பட்டிருக்க வேண்டும். இதற்கு சித்தாந்தப் பணிகளே பிரதானமானதாகும். ஆனால் ஊழியர் கொள்கையில் இருந்த தன்னியல்பு குறைந்தபட்ச அமைப்பு பலம் பெறுவது என்ற இலக்கை கட்சிக் கமிட்டிகளை சுயமாக இயங்கச் செய்வதே உடனடி இலக்கு என மாற்றிவிட்டது. வேலைமுறையிலும் இத் தன்னியல்பு வெளிப்பட்டது. சித்தாந்தப் பணிகளைப் பிரதானப்படுத்தி ஊழியர்களை வென்றெடுத்து அமைப்பாக்கும் வேலைமுறையை செயல்படுத்துவதானால் தலைமைக் கமிட்டி, கட்சி சித்தாந்த பத்திரிகை ஒன்றை தொடர்ந்து வெளியிடுவதையும் அதற்கான கட்சிக் கமிட்டிகள் கட்டுவதையும் தனதுமுதற்பணியாக மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் கட்சி சித்தாந்த பத்திரிகை தொடர்ந்து வெளியிடுவதற்கான எவ்வித அமைப்புரீதியான தயாரிப்பும் செய்யப்படும் முன்பே கலைக்குழுக்கள் மூலம் பிரச்சார நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. பின் கலைக்குழுக்கள் மூலம் தேர்வு செய்யப்பட்ட முழுநேர ஊழியர்களின் கட்சிக் கமிட்டிகள் கட்டப்பட்டு அவை சுயமாக இயங்குவது பற்றிய பிரச்சனை தீர்க்கப்படாமல் இருக்கும்போதே மாநாட்டுப் பணியில் ஈடுபட்ட ஆதரவாளர் நிலையிலிருந்த பெரும் எண்ணிக்கையிலான தோழர்கள் கட்சிக் கமிட்டிகளில் இணைக்கப்பட்டனர். சித்தாந்தப் பத்திரிக்கை முறையாக தொடர்ந்து வெளிவருவதற்கான அமைப்பு

படிப்பகம்

www.padippakam.com



தயாரிப்போ, ஏற்கனவே கட்டப்பட்ட கட்சிக் கமிட்டிகள் சுயமாக இயங்குவதோ இல்லாதிருக்கும் போதே அரசியல் பத்திரிக்கை ஒன்று தொடங்கப்பட்டது. 1984 நவம்பரில் வகுக்கப்பட்ட மூன்று கட்ட வேலைத்திட்டதில் மாவட்ட கட்சி அமைப்புகளைச் சுயமாக இயங்கச் செய்வது முதல் கட்டமாகவும், அரசியல் பத்திரிக்கை தொடங்குவது இரண்டாவது கட்டமாகவும், குறிக்கப்பட்டிருந்தும் நடைமுறையில் இவ்வேலைத்திட்டம் மீறப்பட்டது. முதல் கட்டம் நிறைவேறும் முன்பே இரண்டாவது கட்டப் பணியான அரசியல் பத்திரிகை தொடங்கப்பட்டது. மேலும், தொடர்ந்து இப்பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருக்கும்போதே அரசியல் சக்தியாய் எழுச்சியுறுவோம் என்ற முழக்கமும் முன்வைக்கப்பட்டு நடைமுறைபபடுத்தப்பட்டது. இப்பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருக்கும் நிலையிலேதான் தொடர்ந்து பெரும் அளவிலான மையப்படுத்தப்பட்ட அரசியல் இயக்கங்களும், மாநாடுகளும் அவ்வப்போது நடத்தப்பட்டன. பாசிச எதிர்ப்பு இயக்கம் என்ற அரசியல் முன்ணனி இயக்கமும், பல்வேறு ம. தி முன்னணி மற்றும் துணை அமைப்புகளும் கட்டுவதற்கான திட்டங்களும் முன் வைக்கப்பட்டு செயலரங்கிற்குச் சென்றன. சித்தாந்த அரங்கிலும் த. நா. அ. க. தொடர்ந்து செயல்பட்டு வந்திருக்கிறது. எனினும் அது தொடர்ச்சியுடையதாகவும், தலைமையிடம் கொண்டதாகவும் அமையவில்லை. அதற்கான அமைப்புப் பணிகளை நிறைவேற்றுவதில் தொடக்கத்திலேயே த. நா. அ. க. தவறிவிட்டது. சித்தாந்தப் பணிகளுக்கான தலைமைப்பாத்திரம் இவ்வாறு மறுக்கப்பட்டது ஊழியர் கொள்கையில் மட்டும் இன்றி வேலைமுறையிலும்—சித்தாந்தம், அமைப்பு, ம. தி. இயக்கம் முதலான பல்வேறு பணிகளை அவற்றுக்குரிய முதன்மை இரண்டாம் பட்சம் என்ற வரிசை பாதுகாக்கப்படாமல்—தன்னியல்பு நிலவுவதற்குக் காரணமாகி விட்டது.

## 7

## ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்தின் துணைவிளைவாக தன்னியல்பு

த. நா. அ. க.வின் வேலை முறையிலும் ஊழியர் கொள்கையிலும் நிலவிய தன்னியல்பு இ. பொ. இயக்கத்தின் பொதுப் பண்பாயிருந்த ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தின் துணை விளை பொருளே. ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் மட்டும் அல்ல அதன் உடன்விளைவாகத் தோன்றிய தன்னியல்பும்கூட இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுப்பண்பே. தேசம் பற்றிய கருத்தியலிலான ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் இ. பொ. இயக்கம் புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவும் திறனற்றதாக்கி விட்டதால் அதன் பணிகள் அனைத்தும் பொருளாதாரவாத, சட்டவாத கோரிக்கைகளால் அல்லது தீவிரவாத வீரசாகசத்தால் மக்களைத் திரட்டுவது அல்லது கவருவது என்பதை நோக்கமாகக் கொண்டதாகி விட்டது; புரட்சிக்கர அரசியலுக்கு மக்களை உணர்வுப்பூர்வமாக அணிதிரட்டுவதாக அமையவில்லை. அரசியலே புரட்சிகர மற்றதாய் இருக்கும்போது பணிமுறைகள் வேறுமாதிரியாக இருக்க முடியாது.

இ. பொ. க., இ. பொ. க. (மா) ஆகிய இரு அமைப்புகளும் பொருளாதாரவாத, சட்டவாத கோரிக்கைகள் அடிப்படையில் மக்களை பாராளுமன்ற அரசியலுக்குத் திரட்டுவதையே தமது வாழ்நாள் பணியாகக் கொண்டுள்ளன. இது பிற்போக்கு அரசியலுக்கு பாராளுமன்றவாத வழியில் திரட்டும் திரிபுவாத அரசியலே. இதற்கு மாறாக இ. பொ. க. (மா - லெ) தனது தேசிய சூனியவாத அரசியலுக்கு மக்களை தீவிரவாத நடவடிக்கைகள் அல்லது தீவிர பொருளாதாரவாத போராட்டங்கள் மூலம் கவருவதை தனது பணிமுறையாகக் கொண்டிருக்கிறது. அல்லது வழக்கமான பொருளாதாரக் கோரிக்கைகள் மூலம் மக்களைத்

படிப்பகம்

www.padippakam.com



தனது தேசிய சூனியவாத அரசியலுக்குத் திரட்டுவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது. இதிலும் மக்களை உணர்வுப் பூர்வமாக புரட்சிகர அரசியலுக்குத் திரட்டும் பணி இல்லை. தேசிய சூனியவாத அரசியல் என்பது தூயபொருளாதாரவாத அரசியலேயன்றி புரட்சிகர அரசியல் அல்ல என்பதால் இதுவும் தவிர்க்க முடியாததே.

இவ்வாறு இ. பொ. க., இ. பொ. க. (மா), இ. பொ. க. (மா - லெ) அமைப்புகள் தேசம் பற்றிய ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தால் சரியான புரட்சிகர அரசியல் அற்றவையாகவும் தமது பிற்போக்கு திரிபுவாத அரசியலுக்காகவோ, தூய பொருளாதாரவாதஅரசியலுக்காகவோமக்களைத் திரட்டும் வேலைமுறை கொண்டவையாகவுமே உள்ளன. புரட்சிகர அரசியலுடன் இணைக்கப்படாத, மக்களைத் திரட்டும் இவ்வேலை முறை முற்றிலும் தன்னியல்பு வேலை முறையன்றி வேறல்ல. இதில் புரட்சிகர தத்துவம் இல்லை; எனவே அதன் தலைமையிடம் என்று எதுவும் இல்லை. இருப்பதெல்லாம் பிற்போக்கு அல்லது வறட்டுவாத, பொருளாதாரவாத தத்துவமே என்பதால் இவ் வேலைமுறையில் ஊழியர் கொள்கையும் தன்னியல்புபாற்பட்டதேயாகும். இதற்கு இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் எந்தப் பிரிவும் விதிவிலக்கல்ல.

த. நா. அ. க.வின் ஊழியர் கொள்கை மற்றும் வேலை முறையிலான தன்னியல்பு என்பது இ. பொ. இயக்கத்தின் பொதுப் பண்பாயிருக்கும் இத்தகைய தன்னியல்பின் குறிப்பிட்ட வடிவ வெளிப்பாடேயாகும்.

இ. பொ. இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் கட்சியை தேசிய இன மக்களுடன் அவர்களுடைய இயக்கங்களுடன் ஒட்டாத மக்களிடமிருந்து தனிமைப்பட்ட கட்சியாக்கியது. இ. பொ. க. (மா - லெ) யின் இடது தீவிரவாதம் கட்சியை முற்றிலும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தியதுடன் பல்வேறு குழுக்களாகவும் சிதறடித்தது. இந் நிலையில் இ. பொ. க. (மா - லெ) யில் அதன் இடது தீவிரவாதத்துக்கு எதிராகத் தோன்றிய த. நா. அ. க.வும் மக்களிடமிருந்து முற்றிலும் தனிமைப்பட்ட அமைப்பாகவே தோன்றியது. இதன் காரணமாக ''இடது, வலது திரிபுகளுக்கு எதிரான போராட்டத்தில் சிதறுண்ட கட்சியை மையப்படுத்துவது தனிமைப்பட்ட கட்சியை மக்களுடன் இணைப்பது'' என்ற முழக்கங்களை த. நா. அ. க.வின் மூன்றாவது பிளீனம் முன் வைத்தது.

அய்க்கியப்பட்ட கட்சியைக் கட்டுவதற்கு சித்தாந்தப் போராட்டத்தின் அவசியத்தை வலியுறுத்திய மூன்றாவது பிளீனம் இடது, வலது திரிபுகளுக்கு எதிராக த. நா. அ. க. வந்தடைந்திருந்த அ. கோ. நிலைப்பாடுகளை அதற்கான ஆயுதமாக முன் வைத்திருந்தது. மேலும் அமைப்பு மிகச் சிறியதாகவும், மிகக் குறைவான மக்கள் தொடர்புடையதாகவும் இருந்ததால் அய்க்கியத்திற்கான சித்தாந்தப் போராட்டத்தை நடத்துவதற்கு அமைப்பை பலப்படுத்துவதும், விரிவுபடுத்துவதும் அவசியம் என்பதையும் அது வலியுறுத்தியது. அமைப்பை பலப்படுத்தவும் விரிவுபடுத்தவும் கட்சி அய்க்கியத்திற்கான போராட்டத்துடன் மக்கள் திரளிடையிலான பணியையும், சித்தாந்தப் போராட்டத்துடன் பெரும் அரசியல் சக்தியாய் மாறுவதற்கான பணியையும் இணைத்துச் செயல்பட வேண்டும் என்றும் அது வழி காட்டியது.

இவ்வாறு ஒருபுறம் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தால் இருந்துவந்த தத்துவ வறட்சியும் - இடது வலது திரிபுகளுக்கு எதிராக வந்தடைந்திருந்த அ. கோ. நிலைப்பாடுகள் சித்தாந்தப் போராட்டத்திற்குப் போதுமானவையாகக் கருதப்பட்டது. மற்றொருபுறம் மக்களிடமிருந்து தனிமைப்பட்டிருந்த பலவீனமும் கட்சி தத்துவப் பணிகளுக்கும், மக்கள் திரளிடையிலான நடைமுறைப் பணிகளுக்கும் சம முக்கியத்துவம் அளிப்பதற்குக் காரணமாகியது. மூன்றாவது பிளீனம் முன் வைத்த முழக்கங்களும் கொடுத்த வழிகாட்டுதல்களும் இதன் பிரதிபலிப்பாகவே இருந்தன. மூன்றாவது பிளீனத்தின் தொடர்ச்சியாகவே, "கட்சியமைப்பை பலப்படுத்துவோம், ஒரு அரசியல் சக்தியாய் எழுச்சியுறுவோம், அய்க்கியப்பட்ட கட்சியைக் கட்டுவதற்கான போராட்டத்தை முன்னெடுப்போம்" என்ற

படிப்பகம்

www.padippakam.com



நான்காவது பிளீனத்தின் முழக்கமும், அம் முழக்கத்திற்கு அய்ந்தாவது பிளீன அரசியல் அமைப்பு அறிக்கை கொடுத்த விளக்கமும்—அதாவது அரசியல்சக்தியாய் எழுச்சியுறுவதன் ஊடாகவே அய்க்கியப்பட்ட கட்சியைக் கட்டுவதற்கான குறைந்தபட்ச அமைப்பு பலத்தை பெறுவது என்ற விளக்கம்—விளங்கியது.

இவை அனைத்தும் அதாவது மூன்றாவது நான்காவது பிளீன முழக்கங்களும் அவற்றுக்கான விளக்கங்களும் தத்துவப் பணிகளை இரண்டாம் நிலைக்குத் தள்ளி வேலைமுறையில் தன்னியல்பு நிலவுவதற்குக் காரணமாகின. மேலும் தேசிய சூனியவாதத்தால் அமைப்பில் நிலவிய தத்துவ வறட்சி ஊழியர்களை தத்துவார்த்த ரீதியில் தயாரித்து அமைப்பில் இணைப்பதற்குத் தடையாகவும், அமைப்பு புறநிலை இயக்கங்களுக்கு தலைமையளிக்க முடியாத நெருக்கடிக்கு அடிப்படையாகவும் அமைந்தது. இது ஊழியர் கொள்கையில் தன்னியல்பு நிலவுவதற்கும் ஊழியர்களும் கமிட்டிகளும் தொடர்ந்து சுயமாக இயங்கவியலாத நிலைக்கும் காரணமாகியது.

எவ்வாறாயினும் இந்தப் பிளீனத்தில் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திற்கு முடிவு கட்டுவதன் மூலம் தேசிய சூனியவாதத்திற்கு முடிவுகட்டப்பட்டு புரட்சிகர அரசியல் ஆணையில் வைக்கப்படுகிறது; பிற்போக்குவாத தூயபொருளாதாரவாத அல்லது திரிபுவாத, தீவிரவாத அரசியலுக்கு முடிவுகட்டப்படுகிறது. இது இதுவரை இ.பொ. இயக்கத்தில் நிலவிவந்துள்ள தன்னியல்பின் ஆணிவேரையே கெல்லி எறிவதாகும்.

## 8

## ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்துக்கும் தன்னியல்புக்கும் எதிராக த. நா. அ. க.

''கட்சி அமைப்பு வளர்ச்சியில் நிலவும் தேக்க நிலைக்கும், ஊழியர்களிடையே நிலவும் அதிகாரத்துவ, தாராளவாத போக்குகளுக்கும் நமது கடந்த கால வேலை முறையிலும், ஊழியர் கொள்கையிலும் நிலவும் தன்னியல்பு போக்கே காரணமாகும்'' என்றும், ''வேலைமுறையில் தன்னியல்பு என்பது தத்துவப் பணி - நடைமுறைப் பணி, அமைப்புப்பணி — ம.தி. இயக்கப்பணி, அரசியல் இயக்கம் — பிற ம.தி. இயக்கம் ஆகியவற்றுக்கிடையிலும், தத்துவம், அரசியல் ஸ்தாபனம், ம. தி. இயக்கம் ஆகியவற்றுக்கிடையிலுமான தொடர்பை முதன்மை இரண்டாம்பட்சம் என்ற முறையில் வகுத்து சரியாகக் கையாள்வதிலும்; ஊழியர் கொள்கையில் தன்னியல்பு என்பது ஊழியர்களை வென்றெடுத்து அமைப்பாக்குவதில் கட்சியின் வெவ்வேறு மட்ட அமைப்புகளுக்கும் படிப்படியாக வளர்த்தெடுத்து இணைப்பதற்கான முறையை வகுத்துச் செயல்படுத்துவதிலும் அடங்கியிருக்கிறது'' என்றும் அய்ந்தாவது பிளீனத்திற்குப் பிந்திய த நா.அ.க.வின் மூன்றாவது சுற்றறிக்கை (ஏப் 1991) தொகுத்துரைத்தது.

கூடவே ஊழியர் கொள்கையிலான தன்னியல்பைக் களையும் முறையில் கட்சியின் வெவ்வேறு மட்ட அமைப்புகளுக்கும் ஊழியர்களைப் படிப்படியாக வென்றெடுத்து வளர்த்து இணைக்கும் முறையை உள்ளடக்கியவேலைமுறைஅறிக்கை ஒன்றையும், ஆறாவது பிளீனம் வரையிலான வேலைத் திட்டம் ஒன்றையும் த. நா. அ. க. இச் சுற்றறிக்கையில் இணைத்திருந்தது ஆறாவது பிளீனத்தில் நிறைவேற்றப்படவேண்டிய ஆவணங்கள் மீதான உட்கட்சி விவாதத்தை பிரதானப்படுத்தி வேலைத்திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. பாசிச எதிர்ப்பு இயக்கத்தின் செயல்பாடும், பிற ம. தி. அமைப்புகளை மையப்படுத்தும் பணியும் நிறுத்தி வைக்கப்பட்டன. ஊழியர் கொள்கையிலும், வேலை முறையிலும் இருந்த தன்னியல்பைக் களைவதே கட்சியின் முதன்மையான பணியாகியது.

படிப்பகம்

www.padippakam.com



மூன்றாவது பிளீனத்திற்குப்பின் மா-லெ இயக்கத்தின் அக, புற சூழல்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. சமூக ஏகாதிபத்தியம் முற்றிலும் வீழ்ச்சியடைந்து உலக அரசியல் சக்திகளில் மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தது. சோசலிச கட்டுமானப் பிரச்சனைகள் குறித்து மேலும் தெளிவாகப் புரிந்து கொள்ள சோசலிச நாடுகளில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்கள் பற்றிய பருண்மையான ஆய்வுகள் தேவைப்பட்டன. மார்க்சிய-லெனினிய இயக்கத்தின் பல்வேறுபோக்குகளும் தொகுக்கப்பட்டு அய்க்கியத்திற்கான கொள்கையை அவற்றுக்கேற்ப வரைய வேண்டியிருந்தது. இந்திய அரசியல் அரங்கில் 1983ம் ஆண்டு அரசியல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின் ஏற்பட்ட மாற்றங்கள் பரிசீலிக்கப்பட்டு அரசியல் தீர்மானம் புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தது. மேலும் ஊழியர் கொள்கையிலும், வேலை முறையிலும் நிலவிய தன்னியல்பு கண்டறியப்பட்டுள்ள நிலையில் கடந்த கால நமது அமைப்பு பணிகள் குறித்த அனுபவத் தொகுப்பொன்றும் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

இப்பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக ஆறாவது பிளீனத்தை நடத்துவது என்றும் இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆவணங்கள் தயாரிப்பு மற்றும் உட்கட்சி விவாதத்தை ஆறாவது பிளீனம் வரையிலுமான பிரதானப் பணியாக மேற்கொள்வதன் மூலம் வேலைமுறையில் உள்ள தன்னியல்பைக் களைவதற்கான தொடக்கமாகக் கொள்வதென்றும் த. நா. அ. க. திட்டமிட்டது.

தீர்மானித்தபடி ஆவணங்கள் தயாரிப்பதற்கான விவாதத்தை த. நா. அ க. தனது கமிட்டிக்குள் மேற்கொண்டது. இ. பொ. க. (மா-லெ) இயக்க வரலாற்றில் மூவகைப் போக்குகள் இருப்பதையும் நமது அமைப்பு மூன்றாவது போக்கினை சரியான திசையில் முன்னெடுத்துச் சென்றிருப்பதையும் தொகுத்துக் கொண்டது. சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சிக்குப் பின் உலக அரங்கில் மூவுலகக் கோட்பாடு முடிவுக்கு வந்துவிட்டதையும், உலக அரசியல் சக்திகளின் புதிய நிலைமைகளையும் தொகுத்து அதற்கேற்ப வகைப்படுத்தியது. சோசலிச நாடுகளின் வர்க்கப் போராட்ட அனுபவங்களை பருண்மையாக ஆய்வுசெய்து முடிவுக்கு வருவது அவசியம் என்ற முடிவுக்கு வந்த கமிட்டி அப்பணியை பிளீனத்திற்கு பின்பு நிகழ்ச்சிப் போக்கில் விரிந்த ஆய்வுகள், விவாதங்கள் மூலம் மேற்கொள்வதென்றும் முடிவு செய்தது. 1983 அரசியல் தீர்மானம் நிறைவேற்றப் பட்டபின் இந்திய அரசியல் அரங்கில் ஏற்பட்ட நிகழ்வுகள் மாற்றங்கள் குறித்து பரிசீலித்த கமிட்டி சாதி, மத, இனப்பிரச்சினைகள் தொடர்ந்து எரியும் பிரச்சினைகளாக இருந்து வருவதையும், மண்டல், பாபர் மசூதி, பஞ்சாப், காஷ்மீர், அசாம் போன்ற பிரச்சனைகள் வடிவில் அவை தீவிரமாக வெளிப்பட்டு வருவதையும் கவனத்தில் கொண்டது. அரசியல் அரங்கில் சுற்றிச் சுற்றி வரும் இப்பிரச்சினைகள் குறுகிய காலத்தில் எழுந்த தற்காலிக பிரச்சினைகளாக இல்லை என்பதையும், தொடர்ந்து அரசியல்-சமுதாய வாழ்வில் சுடர்விட்டு எரியும் பிரச்சினைகளாக இருந்து வந்துள்ளன என்பதையும், இப்பிரச்சினைகளில் சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை மேற்கொள்ளும் ஆளும் வர்க்க கட்சிகள் தொடர்ந்து 'தேசிய ஒருமைப்பாடு' பற்றி இடைவிடாது கூச்சலிட்டு வருவதையும் கவனத்தில் கொண்டது.

மேலும் இம் மூன்று பிரச்சினைகளுக்கும் வர்க்கப் போராட்டத்துக்கும் உள்ள தொடர்பு அறியப்படாவிட்டால் வர்க்கப் போராட்டத்திற்கு வெற்றிகரமாகத் தலைமை ஏற்கும் அரசியல் தீர்மானம் ஒன்றை உருவாக்கமுடியாது என்பதையும் த. நா. அ.க. உணர்ந்தது.

கடந்த காலத்தில் இப்பிரச்சினைகள் எழுந்தபோதெல்லாம் முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளை எதிர்ப்பது அல்லது விமர்சிப்பது என்ற நிலைப்பாட்டையே கட்சி மேற்கொண்டு வந்திருக்கிறது. உண்மையில் இப்பிரச்சினைகளுக்கும் வர்க்கப் போராட்டத்திற்கும் உள்ள தொடர்பை கட்சி வரலாற்றுப் பூர்வமாக ஆய்வுசெய்து அறிந்து கொண்டிருக்கவில்லை. கட்சித் திட்டமும், அரசியல் தீர்மானமும் காலனிய

www.padippakam.com



காலத்திலிருந்து மட்டுமே சமூக ஆய்வுகளைக் கொண்டிருக்கின்றன. ஆனால் இப்பிரச்சினைகளோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இந்திய வரலாற்றுடன் இணைந்தவை. எனவே இப்பிரச்சினைகளின்பால் கட்சி ஒரு அழுத்தமான செல்வாக்கைச் செலுத்த வேண்டுமானால் (அவ்வாறு செலுத்தாமல் இந்திய அரசியலில் ஒரு முன்னணி படையாகத் திகழமுடியாது) இப்பிரச்சினைகளுக்கும் வர்க்கப் போராட்டத்துக்கும் உள்ள வரலாற்றுப் பூர்வமான தொடர்பை ஆய்வு செய்து கண்டறிவது அவசியம் என்றும் அதன் அடிப்படையில் அரசியல் தீர்மானம் வரையப்பட வேண்டும் என்றும் த. நா. அ.க முடிவுக்கு வந்தது.

இந்திய வரலாறு-வர்க்கப் போராட்டம் பற்றிய ஆய்வு, புதிய கண்ணோட்டத்தையும் முடிவுகளையும் தருவதாக அமைந்தது. இந்திய வரலாற்றில் இன ஒடுக்கு முறையும், சாதி ஒடுக்குமுறையும் இந்துப் பார்ப்பனியத்திலிருந்து பிரிக்க முடியாதது. இந்திய ஆளும் வர்க்கங்களின் இந்திய தேசியத்தில் இருப்பது இந்துப் பார்ப்பனியமே; எனவே புதிய சனநாயகப்புரட்சி என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு-நிலபிரபுத்துவ எதிர்ப்பு மட்டுமல்ல 'இந்திய தேசியம்' என்ற தாகு-முதலாளித்துவ பார்ப்பனிய 'தேசிய' கண்ணோட்டத்தையும் எதிர்த்ததாகும் என்ற முடிவுக்கு த. நா. அ. க. வந்தது. இந்த தரகுமுதலாளித்துவ பார்ப்பனிய தேசியம் என்பது தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்பதன்றி வேறல்ல.

இது தேசியப் பிரச்சினைக்கும், சனநாயகப்புரட்சிக்கும் இடையிலான உறவு குறித்த ஆய்வைத் தூண்டியது. ஆய்வின் முடிவில் சனநாயகப்புரட்சி என்பது தேசிய உருவாக்கத்திலிருந்து பிரிக்க முடியாதது என்ற லெனினியக் கொள்கையை த நா அ.க. சரியாக கிரகித்துக் கொண்டது. மேலும் ஒரு பல்தேசிய இன அரசில் ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளிவர்க்கம் புரட்சிக்குத் தலைமை தாங்கும் சக்தியாக வளர்ந்திருந்தாலன்றி அங்கு ஒன்றுபட்ட கட்சியோ ஒட்டுமொத்தப் புரட்சியோ சாத்தியம் இல்லை என்பதையும்சரியாக கிரகித்துக் கொண்டது.

இந்தியாவில் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக பார்ப்பனியம் உழைக்கும் மக்களையும் அவர்தம் மொழிகளையும் சூத்திரர், சூத்திரபாசை என இழிந்துரைத்து ஒடுக்கி வந்திருக்கிறது. இன்றும் இந்திய தேசிய ஒருமை என்ற பெயரில் சமக்கிருத மயமாக்கப்பட்ட இந்தியின் மூலம் தேசிய மொழிகள்-மக்கள் மொழிகள் ஒடுக்கப்படுகின்றன. தேசிய இன மக்களின் சுய நிர்ணய-சனநாயக உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இந்திய தேசியம் என்ற தரகு பார்ப்பனியம் பல்வேறு தேசிய இனங்களும் தேசங்களாக வளரவிடாமல் ஒடுக்கும் ஒருவகை ஏகாதிபத்தியமாக இருக்கிறது. ஆனால் இந்தியாவில் சனநாயகப்புரட்சி என்பது இத் தேசிய இனங்கள் முழு தேசங்களாக உருவாவதன் ஊடாக மட்டுமே வெற்றிபெற முடியும். அதிலிருந்து பிரிக்க முடியாது. இவ்வாறு இந்திய வரலாற்றில் சனநாயகப் புரட்சியிலிருந்து பிரிக்க முடியாதபடி இரண்டு போக்குகள் உள்ளன. முதலாவது, இந்திய தேசியம் இந்திய தேசிய ஒருமைப்பாடு என்ற பெயரில் உள்ள ஏகாதிபத்திய போக்கு. இது பல்வேறு தேசிய இன மக்களையும் அவர்தம் சனநாயக இயக்கங்களையும் ஒடுக்கி பின்தங்கிய அடிமை நிலையில் வைத்திருக்கும் சனநாயகவிரோத பாசிசப் போக்கு. இரண்டாவது, பல்வேறு மொழி பேசும் மக்களும் முழுமையான தேசிய இனங்களாகவும், தேசங்களாகவும் வளர்ச்சியடைந்து வரும் சனநாயகப் போக்கு. முதல் போக்குடன் அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் தரகு முதலாளித்துவ-நிலபிரபுத்துவ வர்க்கங்களின் நலனும், இரண்டாவது போக்குடன் தொழிலாளிகள் விவசாயிகள் மற்றும் அனைத்து புரட்சிகர வர்க்கங்களின் நலனும் பிணைக்கப்பட்டிருக்கிறது. பாட்டாளிவர்க்கம் இந்த உண்மையைப் புறக்கணித்துவிட்டு அதாவது இரண்டாவது போக்குடன் தன்னை அய்க்கியபடுத்திக் கொள்ளாமல் சனநாயகப் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி முடிக்க முடியாது. இங்கு பல்வேறு தேசிய இனங்களுக்கும் ஒரே கட்சி, ஒட்டுமொத்தப் புரட்சி என்ற இரசியப் புரட்சியின் உதாரணத்தை அப்படியே பயன்படுத்த முடியாது. காரணம், இந்தியாவில்

படிப்பகம்

www.padippakam.com



ஒடுக்கும் தேசிய இனமே இல்லை என்பதால் அதில், வளர்ச்சி பெற்ற புரட்சிக்குத் தலைமை தாங்குகிற பாட்டாளி வர்க்க இயக்கம் தோன்றுவது அதோடு ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்க இயக்கம் ஒன்றுபட்டு ஒரே கட்சியாக ஒட்டு மொத்தப்புரட்சியை நடத்துவது என்ற பிரச்சினைகளுக்கே இடமில்லை. இங்கு ஒவ்வொரு தேசிய இனமும் தத்தம் சொந்த பாட்டாளி வர்க்க கட்சியின் தலைமையிலான தேசிய விடுதலைப்புரட்சியின் மூலமே சனநாயகப் புரட்சியை நிறைவு செய்யமுடியும். இதற்கு மாற்று எதுவும் இல்லை என்பதை த.நா.அ.க. உணர்ந்தது. இது ஏகாதிபத்தியத்திற்கும் நிலபிரபுத்துவத்திற்கும் மட்டுமல்ல, இந்திய தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திற்கும் எதிரானதாகும்.

தேசியப் பிரச்சினையில் கட்சியின் கடந்த கால நிலைகளையும், த.நா.அ.க. பரிசீலனைக்கு உட்படுத்தியது. இந்திய தேசம் என்ற கருத்தோட்டத்தின் அடிப்படையிலேயே கட்சி கடந்த காலத்தில் சனநாயகப் புரட்சிக்கான திட்டத்தை வகுத்துக்கொண்டிருந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலபிரபுத்துவ எதிர்ப்பு இந்திய சனநாயகப் புரட்சி அதன் இலக்காயிருந்தது. ஆனால் தேசிய உருவாக்கத்துடன் இணைக்கப்படாத அதிலிருந்து பிரிந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலபிரபுத்துவ எதிர்ப்பு இந்திய சனநாயகப் புரட்சி என்ற கட்சியின் இந்த நிலைப்பாடு ஏகாதிபத்திய பொருளாதாரவாதமே. கட்சி 1942-43ல்தான் இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருப்பதையும் தேசிய இனங்கள் தேச உருவாக்கம் பற்றிய ஸ்டாலின் கோட்பாடுகள் ஆகியவற்றையும் அறிந்தது. அதன்பின்னும் கட்சியின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. விளைவு கட்சியின் பிளவுக்குப் பின் இ.பொ.க., இ.பொ.க. (மா) ஆகிய இரு கட்சிகளுமே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையே எதிர்க்கும் தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்தின் இந்திய தேசியத்தின் பாதுகாவலர்களாக பிற்போக்கு ஆளும் வர்க்க கட்சிகளாக சீரழிந்தன. மா-லெ கட்சி, ஆளும் வர்க்கங்கள் பற்றி எடுத்த நிலைப்பாடு அது தரகு-பார்ப்பனிய பிற்போக்கில் சீரழியாமல் தடுத்ததெனினும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்து மீட்கவில்லை. இப்பொருளாதாரவாதம் கட்சியை தேசிய சூனியவாதக் கட்சியாக- இதன் காரணமாக தத்துவ வறட்சிக்கும், வறட்டுவாதத்துக்கும், அனுபவவாதத்துக்கும் பலியான கட்சியாக மாற்றிவிட்டது. த.நா.அ.க. வும் இதிலிருந்து தப்பவில்லை. த.நா.அ.க. வின் கடந்த ஆண்டுகளின் வேலைமுறையிலும் ஊழியர் கொள்கையிலும் நிலவிய தன்னியல்புக்கு இவை அடிப்படைக் காரணமாய் அமைந்துவிட்டன. த.நா.அ.க. வின் தேக்க நிலைக்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த மார்க்சிய-லெனினிய புரட்சி இயக்கத்தின் தேக்க நிலைக்கும் கட்சியில் நிலவும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் கண்ணோட்டமே அடிப்படைக் காரணமாக விளங்குகிறது. இப் பொருளாதாரவாதக் கண்ணோட்டத்தைக் களைவதும், தேசிய இன வட்டகை அடிப்படையில் கட்சியைக் கட்டி தேசிய விடுதலைப்புரட்சி மூலம் சனநாயகப்புரட்சியை முன்னெடுத்துச் செல்வதுமே மார்க்சிய-லெனினியப் புரட்சி இயக்கத்தில் நிலவும் தேக்கநிலையை உடைத்து முன்னேற ஒரே வழியாகும் என்றும் த.நா.அ.க. முடிவுக்கு வந்தது. இம்முடிவுகள் அனைத்தும் இந்தியா ஒரு அரைக் காலனி அரைநிலப் பிரபுத்துவ நாடு என்ற இ.பொ.க (மா-லெ) யின் வரையறையை மாற்றி தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என வரையறுக்கும்படி கோரும் முடிவுகளாகும். த.நா.அ.க. வந்தடைந்த முடிவுகள் கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகளிலேயே மாற்றத்தைக் கொண்டு வரக்கூடியவை என்பதால் அவை அறிக்கையாகத் தொகுக்கப்பட்டு உட்கட்சி விவாதத்துக்காக மார்ச் 1992ல் அணிகளுக்கு சுற்றுக்கு விடப்பட்டது. அதைத் தொடர்ந்து மேலும் விளக்கும் முகமாக நான்கு அறிக்கைகள் அடுத்தடுத்து சுற்றுக்கு விடப்பட்டு கடந்த எட்டு மாதங்களாக நடைபெற்ற உட்கட்சி விவாதத்திற்குப்பின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்துக்கும், தேசிய சூனியவாதத்துக்கும் தன்னியல்புக்கும் முடிவுகட்டும் இப்பிளீனம் கூடியிருக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com


# 9

## ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திற்கு எதிரான போராட்டம் புரட்சி இயக்க வரலாற்றில் ஒரு தீர்க்கமான கட்டம்!

இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் தோற்றம் இந்தியப் புரட்சி இயக்கத்தின் தத்துவமாக மார்க்சிய - லெனினியத்தைப் பிரகடனப்படுத்தியது. அதிலிருந்து தோன்றிய இ.பொ.க. (மா-லெ) இந்தியப் பெரு முதலாளிகளை தரகுமுதலாளிகள் என வரையறுத்ததன் மூலம் இந்திய ஆளும் வர்க்கங்களுடன் சமரசமற்ற புரட்சிப்போரை பிரகடனப்படுத்தியது. த.நா.அ.க. வின் மூன்றாவது பிளீனம் இ.பொ. இயக்கத்தின் இடது, வலது திரிபுகளுக்கு முடிவு கட்டியது. அதன் ஆறாவது பிளீனம் இந்தியாவை தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என சரியாக வரையறுப்பதன் மூலம் இ. பொ. இயக்கத்தின் பொதுப்பண்பாயிருக்கும் ஏகாதிபத்திய பொருளாதார வாதத்துக்கும் அதன் விளைவாகத் தோன்றும் தன்னியல்புக்கும்; தேசிய சூனிய வாதத்துக்கும் முடிவு கட்டி ஒரு சரியான மார்க்சிய-லெனினியக் கட்சியைக் கட்டுவதற்குச் சரியான அடிப்படையை நிறுவியிருக்கிறது. இவ்வாறு இந்தியப் பொதுவுடைமை புரட்சியியக்க வரலாற்றின் முன்னேற்றப் படிக்கட்டுகள் அமைந்துள்ளன.

மார்க்சிய - லெனினியத்தை தனது தத்துவமாக பிரகடனப்படுத்திக் கொண்டு தோன்றிய இந்தியப் பொதுவுடமை இயக்கம் ஒரு முழுமையான காலனிநாட்டில் தோன்றியது. அது தோன்றும்போது இங்கு எண்ணற்ற தேசிய இனங்கள் இருப்பினும் அவை விழிப்புற்ற தேசிய இனங்களாக இல்லை. காலனியாதிக்கவாதிகள் தமது நிர்வாக எல்லைகளைக் கூட தேசிய இன வட்டகை அடிப்படையில் அமைத்துக் கொண்டிருக்கவில்லை. சமசுதானங்களும், காலனியாதிக்கவாதிகளின் நிர்வாகமும் தேசிய இன வட்டகை எல்லைகளை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. தேசிய இனங்கள் கூறு போடப்பட்டும் வெவ்வேறு தேசிய இனங்கள் இணைக்கப்பட்டும் நிர்வாக எல்லைகள் அமைக்கப் பட்டிருந்தன. காலனிய காலத்துக்கு முன்பும் இந்தியாவில் பன்னூறு ஆண்டுகளாக இந்த நிலைதான் நீடித்து வந்தது.

மேலும் இங்கு பொதுவுடைமை இயக்கம் தோன்றுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே இந்துமதவாதத்தை அடிப்படையாகக் கொண்டு 'இந்திய தேசிய' இயக்கம்-காங்கிரசு இயக்கம் தோன்றிவிட்டது.

மொழி தேசிய இயக்கங்கள் இன்மையும் 'இந்திய தேசிய' இயக்கம் ஏற்கனவே தோன்றியிருந்ததும் கம்யூனிஸ்ட் கட்சி தனது தோற்றத்திலேயே இந்திய தேசிய நோயால் பீடிக்கப்படுவதற்குக் காரணமாகி விட்டது. மேலும் இந்தியாவிலும் உலக அளவிலும் புரட்சி இயக்கத்தின் முதன்மையான எதிரியாய் ஏகாதிபத்தியம் இருந்த காலகட்டத்தில் கட்சி தோன்றியதால் இயல்பாகவே இந்திய தேசியம் என்பதற்கு மொழிமுதலான இனக்கூறு பொதுப்பண்பு இல்லாத ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்திய தேசியம் என்று அது மார்க்சிய-லெனினியத்துக்கு விரோதமான ஏகாதிபத்திய பொருளாதாரவாத விளக்கமளித்துக் கொண்டது.

தேசிய இனங்களின் தேசிய உணர்வு விழிப்புற்றிராத காலமாக இருந்ததால் கட்சி தோன்றி வளர்ந்தது கூட தேசிய இனப் பிரதேச அடிப்படையில் அமையவில்லை. (ஆனால் இரசியாவில் கட்சி தேசிய இனப் பிரதேச அடிப்படையில் தோன்றி வளர்ந்து பின்னர் இணைந்தன. நிர்வாக பிரதேசங்கள் தேசிய இன அடிப்படையில் அமைந்திருந்தன என்ற அளவுக்கு தேசிய விழிப்-புணர்வு கொண்ட தேசிய இனங்களாக அவை இருந்தன) இங்கு பல பெரும் நகரங்களிலேயே முதலில் கட்சிக்குழுக்கள் தோன்றி பின்னர் இந்திய அளவிலானதாக

படிப்பகம்

www.padippakam.com



இணைந்தன. இவ்வாறு இவை தோற்றத்திலேயே தேசிய இன அடித்தளமற்றவையாகவே இருந்ததும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்திய தேசியம் என்ற பொருளாதாரவாதத்துக்கு ஒரு காரணமாகும்.

1930-40களில் பல்வேறு தேசிய இனங்களும் விழிப்புற்று தேசிய இன அடிப்படையிலான கோரிக்கைகளையும், முஸ்லீம்கள் மத அடிப்படையில் பாகிஸ்தான் கோரிக்கையையும் முன்வைக்கத் தொடங்கிய பின்தான் கட்சி தேசிய இனம், தேசம் பற்றிய மார்க்சிய கருத்தியலை முதன்முறையாக உணர்ந்தது. எனினும் அப்போதும் அது ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்திய தேசியம் என்ற ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் கருத்திலிருந்து விடுபடவில்லை. இதனால் இந்திய தேசிய அய்க்கியத்தைப் பாதுகாப்பதற்கு ஒரு போர்த்தந்திரம் என்ற முறையில் கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பது, மொழிவழி மாநிலக் கோரிக்கைகளுக்கானப் போராட்டத்தை ஆதரிப்பது என்பதுடன் நிறுத்திக் கொண்டது.

நாட்டின் பல பகுதிகளிலும் மொழிவழி மாநில அமைப்புகள் அமைக்கப்பட்ட பின் தேசிய விடுதலைக் கோரிக்கைகள் எழத் தொடங்கியதையடுத்து இ. பொ. க., இ.பொ.க. (மா) ஆகிய இரு கட்சிகளும் இந்திய தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்பது என்ற பெயரில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையே கட்சித்திட்டத்திலிருந்து நீக்கிவிட்டன. முற்றிலும் திரிபுவாத பாராளுமன்றவாத ஆளும் வர்க்கக் கட்சிகளாக அப்பட்டமாக வெளிப்படுத்திக் கொண்டன. இந்நிலையில் தோன்றிய இ.பொ.க. (மா-லெ) இந்தியப் பெருமுதலாளிகளைத் தரகு முதலாளிகள் என்று தீர்மானித்து ஆயுதப் போராட்டப் பாதையை பிரகடனப்படுத்தியதன் மூலம் மார்க்சிய-லெனினியத்தைஉயர்த்திப் பிடித்தது.ஆனால் ம.தி.அமைப்பு இயக்கம் புறக்கணிப்பு, தனிநபர் அழித்தொழிப்பு போன்ற அதன் இடது தீவிரவாத சறுக்கல் அதில் கடுமையான நெருக்கடிகள் தோன்றுவதற்குக் காரணமாகிவிட்டது. மேலும் இடது தீவிரவாதத்திலிருந்து விடுபடுவதற்கானப் போராட்டமே அதில் பிரதானமாகிவிட்டது.

இ.பொ.க. (மா.லெ)க்குள் அதன் இடது தீவிரவாதப் போக்குகளை எதிர்த்து நடந்த போராட்டத்தில் அனைத்து இடது, வலது திரிபுகளையும் களைந்த அ.கோ. நிலைப்பாடுகளுடன் தோன்றியது த.நா.அ.க. எனினும் த.நா.அ.க. வின் அ.கோ. நிலைப்பாடுகளும் புரட்சி இயக்கத்தின் தேவைகளை நிறைவு செய்வன அல்ல என்பதை கடந்த பத்தாண்டுகால அனுபவம் உணர்த்திவிட்டது.

புறநிலையில் எழுந்துவரும் தேசியஇனப் போராட்டங்களும், மத, சாதி பிரச்சினைகளும் த.நா.அ.க.வின் அ. கோ. நிலைப்பாடுகளுக்கு உட்பட்டனவாக இல்லை. காரணம் த.நா.அ.க.வின் அ.கோ. நிலைப்பாடுகளும் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாத எல்லைக்குள் அமைந்து விட்டதுதான் என்பதை நாம் மா-லெ கோட்பாடு மற்றும் வரலாற்றுப்பூர்வமான உண்மைகளை ஆழமாக பரிசீலித்ததன் மூலம் உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தியப் பொதுவுடைமை இயக்கம், அதன் பிரதான பலவீனமாக ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் இருந்தபோதிலும் தனது தத்துவ ஆயுதமாக மார்க்சிய-லெனினியத்தைப் பிரகடனப்படுத்தியது அதன் பலமான அம்சமாகும். இ. பொ. க., இ.பொ.க. (மா) திரிபுவாதத்தில் விழுந்து ஆளும் வர்க்க கட்சிகளாக அப்பட்டமாக வெளிப்படுத்திக் கொண்டபோது அவற்றின் திரிபுவாதத்திற்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டத்தில் இ. பொ. க. (மா-லெ) தோன்றுவதற்கு இந்தப் பலமான அம்சமே காரணமாகும். அதன் பிரதான பலவீனமாக இடது தீவிரவாதம் இருந்த போதிலும் திரிபுவாதத்துக்கு எதிராக புரட்சிகர நிலைப்பாடுகளை அது உயர்த்திப் பிடித்தது. இதன் தொடர்ச்சியாக இ.பொ.க. (மா-லெ)யில் இந்தியப்பொதுவுடைமைஇயக்கத்தின்இடது வலது, திரிபுகளுக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டத்தில் த நா.அ.க. தோன்றியது. இ.பொ.க. (மா-லெ) இயக்கத்தில் நிலவிய

படிப்பகம்

www.padippakam.com



மூவகைப்போக்குகளில் மூன்றாவது போக்கை மிகச் சரியாக முன்னெடுத்துச் செல்வதில் த. நா. அ. க. முன்னின்றது. இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுப்பண்பாக இருக்கும் ஏகாதிபத்திய பொருளாதார வாதமும் தன்னியல்பும் (அதன் குறிப்பான வடிவில்) த.நா.அ.க. விலும் தொடர்ந்தது அதன் பலவீனமெனினும் இடது, வலது திரிபுகளுக்கு எதிரான தத்துவப் போராட்டத்தில் சரியான அ.கோ. நிலைப்பாடுகளை மேற்கொண்டதும், இ.பொ.க.(மா-லெ)யின் மூன்றாவது போக்கை மிகச் சரியாக முன்னெடுத்துச் சென்றதும், அரசியல் மற்றும் தத்துவார்த்தப் பணிகளுக்கான முக்கியத்துவத்தை உணர்ந்திருந்ததும் அதன் பலமான அம்சமாகும். இந்த பலமான அம்சங்களே த நா.அ.க. தனது தன்னியல்பையும் இ.பொ. இயக்கத்தின் பொதுப்பண்பான ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தையும் கண்டறிந்து அதற்கெதிரான தத்துவார்த்தப் போராட்டத்தில் இன்று சரியான நிலைப்பாடுகளை-இந்தியா ஒரு தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்ற வரையறுப்பு, தமிழ்நாடு விடுதலைப்புரட்சி, தமிழ்நாட்டுக்குத் தனி கட்சி என்ற நிலைப்பாடுகளை வந்தடைவதற்கும் காரணமாகும். சுருங்கக்கூறின் இ.பொ.இயக்கம் மார்க்சிய-லெனினியத்தை தனது தத்துவ ஆயுதமாக பிரகடனப் படுத்தியிருந்த சரியான அம்சமே இ. பொ. க., இ.பொ.க. (மா)வின் திரிபுவாத நிலைப்பாடுகளுக்கு எதிராக இ. பொ. க. (மா-லெ) தோன்றுவதற்கும், இ. பொ. க. , (மா-லெ) யின் சரியான அம்சங்களே இ.பொ. இயக்கத்தின் இடது, வலது திரிபுகளுக்கு எதிராக த.நா.அ.க. தோன்றுவதற்கும் அவற்றின் தொடர்ச்சியாக அமைந்த த.நா.அ.க. வின் சரியான அம்சங்களே நாம் இன்றைய சரியான நிலைப்பாடுகளை வந்தடைவதற்கும் காரணமாக அமைந்தன.

எனவே த. நா. அ.க. இன்று இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தைக் கண்டறிந்து சரியான நிலைப்பாடுகளை வந்தடைந்திருப்பது, இ. பொ. இயக்க வரலாற்று வளர்ச்சியில் ஒரு கட்டம்-தீர்க்கமான கட்டம் என்ற வகையிலேயேயாகும். இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தில் நிலவிய இரு அம்சங்களில் (பலம்-பலவீனமான அம்சங்கள்) பலமான அம்சத்தின் தொடர்ச்சியாய் மார்க்சிய-லெனினிய தத்துவப் போராட்டத்தை உயர்த்திப் பிடித்ததாலேயே த. நா. அ. க. இந்தச் சரியான முடிவுக்கு இன்று வரமுடிந்தது. த. நா. அ. க. விற்குள்ளும் பலவீனமான அம்சங்கள் தொடர்ந்து நிலவிய போதிலும் அதில் நிலவிய பலமான அம்சத்தின் வெற்றியே இன்றைய முடிவாகும்.

த. நா. அ. க. இம்முடிவுகளுக்கு வரும் முன்னரே தமிழகத்தில் தமிழக விடுதலை, தமிழ்நாட்டிற்குத் தனிக் கட்சி என்ற நிலைப்பாடுகளை சிலர் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுப் பண்பாயிருக்கும் ஏகாதிபத்திய பொருளாதார வாதத்தைக் கண்டறிந்து அதற்கெதிரான தத்துவார்த்தப் போராட்டத்தில் அவர்கள் இந்த நிலைப்பாடுகளை வந்தடையவில்லை. நக்சல்பாரி உழவர் எழுச்சியை அடுத்து, அனைத்திந்திய அளவில் பொதுவுடைமைப் புரட்சியாளர்களின் ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டபோது அதன் தலைமையை நிராகரித்து தமிழகத்தில் பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் சிலர் 1969ல் தமிழ் நாட்டிற்கு தனிக் கட்சி, தமிழக விடுதலைப் புரட்சி என்ற நிலைப்பாடுகளுடன் ஒரு தற்காலிக மத்திய கமிட்டி அமைத்து தமிழக பொதுவுடைமைக் கட்சி அமைக்கும் தீர்மானத்தை மேற்கொண்டிருக்கிறார்கள் ஆனால் அவர்கள் தொடர்ந்த எவ்விதசெயல் பாடுமின்றி களைந்துவிட்டார்கள். அடுத்து 1980 களின் மத்தியில் இந்நிலைப்பாடுகளை தோழர் தமிழரசன் மேற்கொண்டார். தோழர் தமிழரசன் இ. பொ. க. (மா-லெ) யின் இடது தீவிரவாதப் போக்குகளை முற்றாகக் களையாமல் அதன் தொடர்ச்சியாகவே இந்நிலைப்பாடுகளை மேற்கொண்டு தீவிரநடைமுறைகளில் ஈடுபட்டார். அவர் தனது நிலைப்பாடுகளுக்கு குறிப்பாக தமிழ்நாட்டுக்கு ஏன் தனி ஒரு கட்சி வேண்டும் என்பதற்கு தத்துவார்த்த விளக்கம் ஏதும் அளித்திருப்பதாகத் தெரியவில்லை. அவரைப் பொருத்தவரை தத்துவார்த்தப் பணிகளை புறக்கணித்த இடதுதீவிரவாதி

படிப்பகம்

www.padippakam.com



யாகவே இருந்தார். வேறு சிலரும் இந் நிலைப்பாடுகளை முன்வைத்திருக்கிறார்கள் எனினும் எவரும் அவற்றுக்கு மார்க்சிய-லெனினிய அடிப்படையில் சரியான தத்துவ விளக்கம் அளிப்பவராகவோ அவற்றை செயல்படுத்தும் இயக்க அமைப்பு நடைமுறை கொண்டவராகவோ இல்லை.

## 10

## த. நா. அ. கமிட்டி: அமைப்பின் பலமும் பலவீனமும் தடைகளைக் கடந்து முன்னேறுவோம்!

கடந்த பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு மா. அ.க. வில் நிகழ்ந்த உட்கட்சிப் போராட்டத்தில் உருவான த. நா. அ. க. அதன் இடது சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் பலவற்றைக் களைந்து சரியான மார்க்சிய நிலைப்பாடுகளை முன் வைத்ததுடன் தமிழகத்தில் தொடர்ந்து மக்கள் மத்தியில் ஊன்றி செயல்பட்டு வந்திருக்கிறது. பாசிச அபாயத்திற்கு எதிராக குறிப்பான திட்டம் ஒன்றை வைத்ததன் மூலம் திரிபுவாதம், வரட்டுவாதத்துக்கு எதிராக மார்க்சியத்தை செயல்படுத்துவதிலும் மா-லெ புரட்சிகர அரசியலையும், தத்துவத்தையும் தமிழகத்தில் பரப்புவதிலும் முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. நவீன திரிபுவாதிகளுக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டம் நடத்துவதிலும் மாசேதுங் சிந்தனையைப் பரப்புவதற்கான ஆவணங்கள், நூல்களை அச்சிட்டு வெளியிடுவதிலும் அது முன்னணியாய் இருந்துவந்திருக்கிறது. திரிபுவாதத்திற்கு எதிராகவும், மாவோ சிந்தனைக்கு ஆதரவாகவும் கருத்தரங்குகள், பேரணி மாநாடுகள் என மக்கள் இயக்கங்களையும் அது சிறப்புடன் கட்டமைத்திருக்கிறது.

பல்லாயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டி அரசியல் இயக்கங்களை நடத்துவதில் தமிழகத்தில் முன்னோடியாய் இருந்த மா-லெ அமைப்பு த. நா. அ. க. -வே. பாராளுமன்ற சனநாயத்துக்கு எதிராக சோவியத் சனநாயகம் பற்றிய பரவலான பிரச்சாரத்தை எடுத்துச் சென்றதிலும் பாசிச அபாயத்திற்கு எதிராக பெருமளவுக்குப் பிரச்சாரங்களையும், இயக்கங்களையும் கட்டமைத்ததிலும் தமிழகத்தில் முன்னணியில் இருந்து வந்த மா-லெ அமைப்பு த. நா. அ. க.-வே. அரசியல் இயக்கங்கள் மட்டுமின்றி ம.தி.அமைப்புகள் மூலம் மக்களின் பகுதி, பொருளாதார பிரச்சினைகளுக்கான இயக்கங்களையும் தொடர்ந்து குறிப்பிடத்தக்க அளவுக்கு கட்டமைத்து பிரச்சாரம், கிளர்ச்சிகளையும் போராட்டங்களையும் நடத்தியிருக்கிறது. அரசியல் பொருளாதார பகுதிப் பிரச்சினைகளுக்கான இயக்கங்களில் தோழர்களும் அமைப்புகளும் அடக்குமுறைகளைச் சந்தித்திருக்கிறார்கள். கடந்த பத்தாண்டுகளாக நீடித்துவரும் ஈழப்பிரச்சனையில் ஈழமக்கள் சனநாயகப் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் இந்திய விரிவாக்கத்திற்கு எதிராகவும் தொடர்ந்து பலவகைகளிலும் த. நா. அ.க. செயல்பட்டுவந்துள்ளது.

இவ்வாறு கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக த. நா. அ. க. சித்தாந்தப் பணி, அமைப்பு, அரசியல் பணிகள், ம. தி. இயக்கம், ம. தி. அமைப்பு பணிகள் என அனைத்துத் துறைகளிலும் செய்த பணிகளின் மூலம் தனது செயல்பரப்பை பல மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது.

அதே நேரத்தில் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுப்பண்பாகத் திகழும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதமும், த. நா. அ. க.வின் வேலை முறையிலும், ஊழியர் கொள்கையிலும் நிலவிய தன்னியல்பும் கட்சியின் வளர்ச்சிக்குத் தடையாகி ஒரு தேக்கம் ஏற்படக் காரணமாகிவிட்டன.

த. நா. அ. க. வின் வேலைமுறையிலும் ஊழியர் கொள்கையிலும் நிலவிய தன்னியல்பின் காரணமாக எவ்வித மாற்றமும் இன்றி கட்சிக்குள் இடம்பெற்ற குட்டி முதலாளிய,

படிப்பகம்

www.padippakam.com



உதிரி சக்திகளில் பலர் கட்சியின் தேவைகளுடன் முரண்பட்டு வெளியேறியிருக்கிறார்கள் அல்லது வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

இதில் தலைமைக் கமிட்டியும் விதிவிலக்காக இல்லை. இதுவரை இருந்துவந்த தலைமைக் கமிட்டிகளில் இடம் பெற்ற மொத்த தோழர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் தலைமையிலிருந்து நீங்கினர் அல்லது நீக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் தவிர மற்றவர்கள் அமைப்புத் தொடர்பில் கூட இல்லை. அமைப்பின் தொடக்கத்திலிருந்து இன்றுவரை கட்சிக்கு அரசியல், சித்தாந்தத் தலைமை அளித்து தொடர்ச்சி கொடுப்பவராக ஒரு தோழர் மட்டுமே செயல்பட்டு வருகிறார். இன்றும் நமது கட்சிக் கமிட்டிகள் மேல்கமிட்டிகளின் நேரடி வழிகாட்டுதல் இன்றி சுயமாக இயங்கிடும் முழு ஆற்றலையும் பெற்றுவிடவில்லை.

இவை எல்லாம் நமது அமைப்பின் பலவீனமானஅம்சங்கள் எனினும் கடக்கப்பட முடியாத பலவீனமான அம்சங்களல்ல. மூன்றாவது பிளீன நிலைமைகளுடன் ஒப்பிடும்போது இன்று நாம் பெற்றிருக்கும் பலமான அம்சங்கள் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திற்கும் தன்னியல்புக்கும் முற்றுப்புள்ளி வைத்து தமிழகத்தில் மார்க்சிய-லெனினியக் கட்சியைக் கட்டி தமிழக விடுதலைப் புரட்சியைச் முன்னெடுத்து செல்ல முடியும் என்பதை உறுதிப்படுத்துகின்றன.

முதலாவதாக, மூன்றாவது பிளீன நிலைமைகளிலிருந்து மாறுபட்டவகையில் அனுபவம்பெற்ற, எண்ணிக்கையில் பண்மடங்கு முழுநேர ஊழியர்களை இன்று நமது அமைப்பு கொண்டிருக்கிறது. மேலும் மூன்றாவது பிளீன நிலைமைகளிலிருந்து மாறுபட்ட வகையில், அனுபவம் பெற்ற, எண்ணற்ற பகுதிநேர ஊழியர்களையும் விரிவான கட்சி அமைப்புகளையும் பெற்றிருப்பதுடன் மூன்றாவது பிளீன நிலைமையுடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க அளவுக்கு மக்கள் தளத்தையும் பெற்றுள்ளது. தமிழகத்தில் மக்கள் மத்தியிலும், அரசியல் சக்திகள் மத்தியிலும் மற்றும் பிற புரட்சிகர குழுக்கள் மத்தியிலும் நமது அமைப்பு ஒரு அரசியல் சக்தியாய் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலை பத்தாண்டுகளுக்கு முன் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக புரட்சி இயக்கத்தின் தேக்கத்திற்கான காரணத்தைக் கண்டறிந்து ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்துக்கும் தன்னியல்புக்கும் தேசிய சூனியவாதத்துக்கும் முடிவு கட்டியிருக்கிறோம். இது, இதுவரை பெற்றிராத மாபெரும் தத்துவார்த்த பலமாகும்.

இப்போதிருக்கும் நமது அமைப்பு இந்திய பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் மற்றும் த.நா.அ.க.வின் தன்னியல்பு வேலைமுறை, ஊழியர் கொள்கையினுடாகவே கட்டப்பட்டது என்பதால் அதற்குரிய குறைபாடுகளைக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாதது. எனினும் வலது, இடது திரிபுகளுக்கு எதிரான அ.கோ. நிலைப்பாடுகளின் அடிப்படையில் கட்டப்பட்டது என்பதால் அதற்குரியபலமான அம்சத்தையும் கொண்டிருக்கிறது. மேலும் 1988லிருந்து தொடர்ச்சியாக செயல்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டங்களாலும் அய்ந்தாவது பிளீனத்திற்கு முன்னர் தொடர் கூட்டங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட வேலைமுறைப் பரிசீலனை மற்றும் கிரகிப்பு இயக்கங்களாலும் அய்ந்தாவது பிளீனத்திற்குப் பின்னர் நடைபெற்ற நீண்ட உட்கட்சி விவாத ஏற்பாடுகளாலும் கட்சி அமைப்பிலும் ஊழியர்களிடையிலும் குணாம்ச ரீதியான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதனால் ஊழியர்களின் தத்துவார்த்த புரிதல் மட்டமும் அமைப்புச் செயல்பாடும், செயல்படும் திறனும் 1988ன் நிலைமைகளிலிருந்து பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. அதேநேரத்தில் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தன்னியல்பு வேலைமுறை மற்றும் ஊழியர் கொள்கை விளைவித்த கேடுகளிலிருந்து கட்சி அமைப்பு முற்றிலும் மீண்டுவிட்டது என்றும் சொல்லிவிட முடியாது.

இந்நிலையில்தான் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்துக்கும் தன்னியல்புக்கும் முடிவுகட்டி தமிழக விடுதலைப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் கடமையை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாட்டில் மார்க்சிய-

படிப்பகம்

www.padippakam.com



லெனினியக் கட்சியைக் கட்டும் பணியினை நாம் எதிர் கொண்டிருக்கிறோம்.

இப்பணியினை எவ்வாறு நிறைவேற்றப் போகிறோம்? ஒரு புரட்சிகர கட்சி, அய்க்கிய முன்னணி, மக்கள் படை இம் மூன்றும் ஒரு புரட்சியின் வெற்றிக்கான மூன்று மந்திர ஆயுதங்களாகும். இதில் புரட்சிகரக் கட்சி இன்றி மற்ற இரண்டும் சாத்தியமில்லை. வேறுவகையில் சொன்னால் சித்தாந்தப் போராட்டம், அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம் ஆகியவற்றின் ஊடாகவே ஒரு புரட்சி இயக்கம் வெற்றிபெற முடியும். இதில் சித்தாந்தப் போராட்டத்தின் பங்கு தலைமை யானது, அரசியல் போராட்டம் முக்கிய மானது எனில் ஆயுதப் போராட்டம் தீர்க்க மானது.

இன்று நாம் சித்தாந்தப்போராட்டத்தின் மூலம் மார்க்சிய-லெனினியக் கட்சியை தமிழ கத்தில் கட்டவேண்டும். இதற்கு தமிழகத்தில் ஒரு விரிவான சித்தாந்தத் தளத்தை நிறுவு வது அவசிமாகும். அதன் மூலமே ஒரு புரட்சி கர கட்சியைக் கட்டுவதும், அதன் தலை மையில் அரசியல் படையையும், தொடர்ந்து ஆயுதப் படையையும் கட்டுவது சாத்திய மாகும். நமது பலத்தில் ஊன்றி நின்று நமது பலவீனத்தைக் கடந்து இதை நாம் நிச்சயம் சாதிப்போம்.

தோழர்களே,

இன்று நாம் ஏகாதிபத்திய பொருளாதார வாதத்துக்கும், தேசிய சூனியவாதத்துக்கும் தன்னியல்புக்கும் முடிவுகட்டியிருக்கிறோம். தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியைக் கட்டி தமிழக விடுதலைப் புரட்சியை முன் னெடுத்துச் செல்லும் தீர்மானத்தை மேற் கொண்டிருக்கிறோம். தமிழகப் புரட்சி இயக்க வரலாற்றில் இம்முடிவு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததும் புதிய புரட்சிப் பாதையின் ஒரு சரியான தொடக்கமும் ஆகும்.

இன்று உலகம் முழுவதும் இதுவரை அறியப்படாத தேசிய இனங்கள் கூட தேசிய அரசுரிமைக்காகப் போராடி வருகின் றன. தேசிய அரசுகள் அமைத்து வருகின் றன. ஏகாதிபத்தியவாதிகளாலும், அவர் களுடைய தரகர்களாலும், பிற்போக்காளர் களாலும் அமைக்கப்பட்ட அரசு எல்லைக் கோடுகள் மேலும் மேலும் தகர்க்கப்பட்டு இயல்பானதும் சனநாயகமானதுமான தேசிய அரசு எல்லைக் கோடுகள் வரையப்பட்டு வருகின்றன. அவற்றுகானப் போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன.

ஒரு தேசிய இனத்திற்கு மற்றெல்லா உரிமைகளையும் விட தேசிய அரசுரிமை தான் மிகப்பெரிய சனநாயக உரிமையாகும். தேசிய அரசுரிமை இல்லாத தேசிய இன மக்களின் வாழ்க்கை அடிமைத்தனமும் அவலமும் நிறைந்த தென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. இந்த உண்மையைப் புறக்கணித்துவிட்டு அந்த தேசிய இனத்தின் பாட்டாளிவர்க்கம் சனநாயகப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லமுடியாது. இத் தகைய நிலையில் தேசிய விடுதலையின் அங்கமாக சனநாயகப் புரட்சி இயக்கத்தைக் கட்டமைப்பதன் மூலமே அந்த தேசத்தை சோசலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் இட்டுச் செல்லமுடியும். பாட்டாளிவர்க்கம் இதில் தவறிழைத்தால் அம்மக்கள் பூர்சுவா தேசிய வாதத்துக்கோ, தேசிய ஒடுக்குமுறைக்கோ பலியாகி சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகும்.

எனவே ஏகாதிபத்தியவாதிகள், அவர் களின் தரகர்கள், பிற்போக்காளர்கள் ஆகி யோரால் ஒடுக்கப்பட்டு வரும் தேசிய இனங் களின் தேசிய விடுதலைப் போராட்டங் களுக்குத் தலைமை ஏற்று சனநாயகப் புரட்சியை வெற்றி பெறச் செய்வதன் மூலம் பாட்டாளி வர்க்கம் சோசலிசத்தையும் பாட்டாளிவர்க்க சர்வதேசியத்தையும் பலப் படுத்த வேண்டும். அதன் மூலம் உலக ஏகாதிபத்தியம் துடைத்தெறியப்படுவதைத் துரிதப்படுத்த வேண்டும்.

தமிழ் தேசிய இனம் அரசுரிமை பறிக்கப் பட்ட ஒரு அடிமை தேசிய இனம். தமிழ்ப் பாட்டாளி வர்க்கம் தமிழ் தேசிய இனத்தின்-தமிழகத்தின் விடுதலைப் புரட்சிக்குத் தலைமை ஏற்பதன் வாயிலாகவே இங்கு சனநாயகப்புரட்சியை வெற்றியடையச் செய்யமுடியும். இது தமிழ் மக்களின்

படிப்பகம்

www.padippakam.com



வளமார்ந்த எதிர்காலத்திற்கு மட்டும் அல்ல, பாட்டாளிவர்க்க சர்வ தேசியத்திற்கும் அவசியமாகும்.

தேசியக் கடமையை நிறைவு செய்யாதவர்கள் சர்வதேசியவாதிகளாக இருக்க முடியாது. நிச்சயமாக ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகளும், தேசிய சூனியவாதிகளும் சர்வதேசியவாதிகளாக இருக்கமுடியாது.

நமது பிளீனத்தின் முடிவுகள் நம்மை தேசிய சூனியவாதத்திலிருந்தும், ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்தும் விடுவிக்கின்றன. தேசியக் கடமைகளை நிறைவேற்றும் பாட்டாளிவர்க்க சர்வதேசியவாதிகளாக உயரச் செய்கின்றன.

நமது தேசிய சர்வதேசியக் கடமைகளை நிறைவு செய்ய தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சியைக் கட்டுவோம். தமிழக விடுதலைப் புரட்சியை முன்னெடுப்போம்! □

**அடுத்த இதழ்களில்**

**‘பாட்டாளி வர்க்கத்தின் தேசியக் கொள்கை’**

**‘இந்தியாவில் சனநாயகப் புரட்சியும், தேசியப் பிரச்சினையும்’**

**ஆகிய கட்டுரைகள் இடம்பெறும்**

படிப்பகம்

www.padippakam.com

# கட்சித் தீர்மானம்

## தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சி

முதல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது

படிப்பகம்

www.padippakam.com



# 1

## உலக அரசியல் சக்திகளின் இன்றைய நிலை குறித்த மதிப்பீடு

1.1 மாபெரும் லெனின், ஸ்டாலின் ஆகியோரால் கட்டமைக்கப்பட்டு பின்னர் திரிபுவாதிகளால் சமூக ஏகாதிபத்தியமாக சீரழிக்கப்பட்ட சோவியத் யூனியனில் முற்றாக முதலாளித்துவம் மீட்டமைக்கப்பட்டு விட்டது. அது இனியும் பெயரளவில் கூட ஒரு சோசலிச நாடாக இல்லை என்பது மட்டுமின்றி பல்வேறு நாடுகளாகச் சிதறுண்டு போய்விட்டது. சிதறுண்ட நாடுகள் தமக்குள் காமன்வெல்த் என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டிருப்பினும், இராணுவ பலத்தில் இன்னும் பழைய தளவாடங்களுடன் நீடிப்பினும் அது இனியும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குப் போட்டியான மேலாதிக்க வல்லரசுகளில் ஒன்றாக இல்லை. இந்நிலை அந்நாடு பல்வேறு நாடுகளாக சிதறுண்டு போவதற்கு முன்பாகவே யெல்ட்சின் கும்பல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கு முன்பாகவே ஏற்பட்டுவிட்டது. வளைகுடா யுத்தத்தில் திரிபுவாதிகளின் சோவியத் யூனியன், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைவிரல் அசைவுக்கு ஏற்ப செயல்பட்டதே இதைத் தெளிவுபடுத்தியது.

1.2 இரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சி அமெரிக்க ஏகாதிபத்தியமே உலகின் வலிமைவாய்ந்த ஒரே மேலாதிக்க வல்லரசு என்ற நிலையை உருவாக்கி இருக்கிறது. அது தனது உலக மேலாதிக்கப் பேரவாவை தங்குதடையற்ற முறையில் வெளியிட வாய்ப்பளித்திருக்கிறது. புதிய உலக ஒழுங்கமைப்பு என்ற அதன் உலக மேலாதிக்கத் திட்டத்தை-அவாவை வெளியிட்டிருக்கிறது. வளைகுடா யுத்தத்திலிருந்து அத்திட்டத்தை நிறைவேற்ற தொடங்கியிருக்கிறது. அரசியல், பொருளாதாரம், இராணுவம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் உலக நாடுகளைச் சுரண்டவும் அடக்கி ஒடுக்கவும் அது வெறிகொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

1.3 எனினும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வெறி அதன் பலவீனத்தின் வெளிப்பாடும் ஆகும். அதன் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கடும் நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. அதே நேரத்தில் அதன் மேலாதிக்க நிலைக்குப் போட்டியாக சப்பானும், அய்ரோப்பிய சமூகமும் குறிப்பாக ஜெர்மனியும் வளர்ந்து கொண்டுள்ளன. இது அமெரிக்காவின் மேலாதிக்கக் கனவுகள் தடங்கலின்றி நிம்மதியாக நிறைவேற்றப்பட முடியாது என்ற கவலையை அதற்கு அளித்திருக்கிறது.

1.4 சிதறுண்ட இரசியா, ஒரு காமன்வெல்த் ஏற்பாட்டைச் செய்துகொண்டு தனது ராணுவ வலிமையை ஓரளவு தக்க வைத்துக் கொண்டிருப்பதன் மூலம் தன்னைப் பற்றிய அரசியல், இராணுவ ரீதியான பிரமை முற்றிலும் கலைந்துவிடாமல் இருப்பதற்கான முயற்சியில் இருக்கிறது. கனடா, ஆஸ்திரேலியா, சீனா மற்றும் கிழக்கு அய்ரோப்பிய நாடுகள் போன்ற மற்ற ஏகாதிபத்திய-முதலாளித்துவ நாடுகள் மேலாதிக்க வல்லரசாகவோ அதற்காக முயலுகின்ற நிலையிலோ இல்லை.

1.5 அமெரிக்க மேலாதிக்க வல்லரசும் அதனுடன் மேலாதிக்க நிலைக்குப் போட்டியிடும் அய்ரோப்பிய சமூகம் குறிப்பாக செர்மன் மற்றும் சப்பான் ஏகாதிபத்தியங்களும் தமக்குள் போட்டிகளும், முரண்பாடுகளும் கொண்டவையே எனினும் ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான மூன்றாம் உலக நாடுகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதிலும் அடக்கி ஒடுக்குவதிலும் தமக்குள் ஒன்றுக் கொன்று துணை புரிகின்றனவாகவே-அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கரங்களைப் பலப்படுத்து கின்றனவாகவே செயல்படும் என்பதை வளைகுடா யுத்தம் நிரூபித்திருக்கிறது.

1.6 சோவியத் யூனியனின் முழுமையான வீழ்ச்சி உலகில் ஒரு சமாதான யுகத்தைத்

படிப்பகம்

www.padippakam.com



தோற்றுவித்துவிட்டது என்பது போலவும், பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான சகாப்தம் தோன்றியிருப்பது போலவும் ஏகாதிபத்தியவாதிகள் பசப்பி வருகிறார்கள். உண்மையில் அமெரிக்க மேலாதிக்கமும், ஏகாதிபத்தியவாதிகளும் தமது ஏகாதிபத்திய, மேலாதிக்க முயற்சிகளை பேச்சுவார்த்தைகள் மூலம் மூடிமறைப்பதற்கான தந்திரமே இது. அமெரிக்க ஏகாதிபத்தியம் அய்க்கிய நாடுகள் அமைப்பைத் தனது சொந்தக் கைக்கருவியாகப் பயன்படுத்திக் கொண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் என்ற முகாந்திரத்திலும் தனது அதிரடி மேலாதிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை உலகறியும்.

1.7 ஏகாதிபத்தியங்களின் இந்தப் பேச்சுவார்த்தை நாடகங்கள் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் தீர்ந்துவிட்டது போலவும், யுத்த வாய்ப்புகள் மறைந்துவிட்டது போலவும் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. உண்மையில் மேலாதிக்கத்திற்குப் போட்டியிடும் ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான போட்டி சமாதானத்தின் மூலம் தீர்க்கப்படக்கூடியதல்ல. ஏகாதிபத்தியங்கள் இருக்கும்வரை யுத்தங்கள் தவிர்க்கப்பட முடியாது என்பதால் யுத்த அபாயங்கள் நீடிப்பதை ஏகாதிபத்தியவாதிகள் மறைத்துவிட முடியாது.

1.8 மூன்றாம் உலக நாடுகளில் இந்தியா போன்றவை பிராந்திய (துணை) ஏகாதிபத்தியங்களாக உள்ளன. மற்ற பிராந்திய நாடுகளை ஒடுக்கி கட்டுப்படுத்துவதற்கான கருவியாக ஏகாதிபத்தியங்கள் இத்தகைய பிராந்திய (துணை) ஏகாதிபத்தியங்களுக்கு ஆதரவளிக்கின்றன. அவற்றின் நடவடிக்கைகள் ஏகாதிபத்தியங்களுக்கு ஆதரவாகவும் சிறிய தேசங்களுக்கும், மக்களுக்கும் எதிராகவும் இருக்கும்வரை அவை இப்பிராந்திய (துணை) ஏகாதிபத்தியங்களின் நடவடிக்கைகளில் தலையிடாமையைப் பின்பற்றுகின்றன. அதே நேரத்தில் இத் துணை ஏகாதிபத்தியங்கள் தெற்காசியக் கூட்டமைப்பு போன்ற பிராந்தியக்கூட்டமைப்புகளில் தமது மேலாதிக்க நோக்கங்களுக்காகப் பங்கேற்றுள்ளன. இக்கூட்டமைப்பின் உறுப்பினர் நாடுகள் தமது நாடுகளில் மக்களின் தேசிய விடுதலை மற்றும் சனநாயக எழுச்சிகளையும், போராட்டங்களையும் ஒடுக்கவும், ஏகாதிபத்தியத்துடன் தமது பேரத்தை உறுதிப் படுத்திக்கொள்ளவும் தமக்குள் உதவிக்கொள்ள விரும்புகின்றன. துணை ஏகாதிபத்தியங்கள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நிலையை மேற்கொள்ளும் பலம் அற்றவை எனினும் அத்தகைய வாய்ப்புகளோ நிலைமைகளோ ஏற்படும்போது ஏகாதிபத்தியங்கள் கூட்டாக அதை ஒடுக்கவும் நசுக்கவும் தயங்கப் போவதில்லை.

1.9 பிராந்திய நாடுகள், பிராந்திய (துணை) ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்க நடவடிக்கைகளில் வெறுப்பை வெளிப்படுத்திக்கொள்கின்றன. எனினும் தம் சொந்த ஆளும் வர்க்க நலன்களின் காரணமாக அக்கூட்டமைப்புகளில் அங்கம் வகிக்கவும் விரும்புகின்றன.

1.10 இவ்வாறு இன்று உலக அரசியல் சக்திகளின் நிலை எழுபது-எண்பதாம் ஆண்டுகளின் நிலையிலிருந்து பெருமளவுக்கு மாறுபட்டிருக்கிறது. எழுபது - எண்பதுகளில் முதலாவது, இரண்டாவது உலகைச் சேர்ந்தவையாய் இருந்த நாடுகள் தற்போது மேலாதிக்க வல்லரசு, மேலாதிக்கத்திற்காகப் போட்டியிடும் வல்லரசுகள், மற்றும் பிற முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகள் எனப் பிரிந்துள்ளன. மூன்றாம் உலகைச் சேர்ந்ததாய் இருந்த சீனம் இன்று தன்னை முதலாளித்துவ நாடுகளுடன் இணைத்துக் கொண்டு விட்டது. மேலாதிக்க வல்லரசாய் இருந்த இரசிய சமூக ஏகாதிபத்தியம் இன்று அமெரிக்காவுடன் மேலாதிக்கத்திற்காகப் போட்டியிடும் வல்லரசுகளான அய்ரோப்பிய சமூகம் - குறிப்பாக செர்மன் மற்றும் சப்பான் வல்லரசுகளுக்கும் பின்தங்கி இருக்கிறது. மேலாதிக்க வல்லரசுகளில் ஒன்றாக இருந்த அமெரிக்கா இன்று உலகின் ஒரே மேலாதிக்க வல்லரசாக முன்னிற்கிறது. மூன்றாம் உலக நாடுகளில் பிராந்திய (துணை) ஏகாதிபத்தியங்கள் மற்றும் பிற பிராந்திய நாடுகள் என வேறுபாடு உள்ளன.

படிப்பகம்

www.padippakam.com



எனினும் இந்நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் பெரும்பாலும் ஏகாதிபத்திய சார்பு கொண்டவையாகவும், உள்நாட்டில் தேசிய,சனநாயக எழுச்சிகளை மூர்க்கத்தனமாக ஒடுக்கும் பிற்போக்குக் கும்பலாகவும் இருக்கின்றன என்பதில் வேறுபாடு எதுவும் இல்லை.

1.11 இன்று ஆசியா, ஆப்பிரிக்கா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் உலகெங்கும் இனவெறி எதிர்ப்பு மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களும், ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான போராட்டங்களும் சிறிதும், பெரிதுமாய் நடந்து வருகின்றன. ஆனால் இன்று உலகில் எந்த அரசும் இப்போராட்டங்கள், இயக்கங்கள்பால் உண்மையான பரிவு கொண்டவையாக அல்லது உதவுகின்றவையாக இல்லை.

1.12 இன்று உலகம் முழுவதும் பாட்டாளி வர்க்க இயக்கம் பலவீனமாக இருக்கிறது. எனினும் அது உலகம் முழுவதும் நடக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு மேலாதிக்க எதிர்ப்பு போராட்டங்களையும் நடவடிக்கைகளையும் தேசிய விடுதலை இயக்கங்களையும் உறுதியாக ஆதரிப்பதற்கும் எல்லாவித ஆக்கிரமிப்புகளையும் எதிர்ப்பதற்கும் தடையல்ல. மேலாதிக்க வல்லரசு, ஏகாதிபத்தியங்கள் மற்றும் பிராந்திய (துணை) ஏகாதிபத்திய நாடுகளின் எல்லாவித மேலாதிக்க, ஏகாதிபத்திய நடவடிக்கைகளையும் அவை உறுதியுடன் அம்பலப்படுத்தவும், எதிர்க்கவும் வேண்டும். அவர்களுக்குள் ஏற்படும் முரண்பாடுகளை எதிரிகளைப் பிரித்தறிவதன் மூலம் மேலாதிக்கம் ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கு எதிராகவும்; இனவெறி எதிர்ப்பு தேசிய விடுதலை இயக்கங்கள் மற்றும் உலகமெங்கும் உள்ள மக்களின் புரட்சிகர போராட்டங்களுக்கு ஆதரவாகவும் பயன்படுத்திக் கொள்ளத் தவறக்கூடாது.

1.13 நாடுகள் சுதந்திரத்தை விரும்புகின்றன; தேசங்கள் விடுதலையை விரும்புகின்றன; மக்கள் புரட்சியை விரும்புகிறார்கள். உலகெங்கும் உள்ள புரட்சியாளர்கள் நாடுகளின் சுதந்திரத்திற்கும், தேசங்களின் விடுதலைக்கும் மக்களின் புரட்சிகர எழுச்சிக்கும் எப்போதும் ஆதரவாளர்கள்-தலைமை தாங்குபவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

## 2

## சோசலிச சமுதாயம் குறித்த விரிவான ஆய்வின் தேவை

2.1 திரிபுவாதம் என்பது முதலாளித்துவ சித்தாந்தமே என அடையாளம் காட்டி குருச்சேவ் திரிபுவாதத்தையும், லியூ-டெங் திரிபுவாதத்தையும் எதிர்த்துப் போராடினார் மாவோ. குருச்சேவ் திரிபுவாதம் இரசியாவை ஒரு சமூக ஏகாதிபத்தியமாக சீரழித்துவிட்டதையும் அம்பலப்படுத்தினார்.

2.2 மாவோ கூறியதை ஏற்காத நவீன புரட்டல்வாதிகள் வெட்கப்படும்படி இன்று இரசியாவில் அப்பட்டமான முதலாளித்துவம் அரங்கேற்றப்பட்டு விட்டது. சோசலிசம் அதிகாரப்பூர்வமாக அகற்றப்பட்டு, கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டுவிட்டது. மாவோ மறைவுக்குப் பின் ஆட்சியைக் கைப்பற்றிய டெங் கும்பல் சீனத்திலும் முதலாளித்துவத்தை மீட்டமைத்துவிட்டது.

2.3 சோசலிச சமுதாயத்தில் தொடர்ந்து வர்க்கங்களும், வர்க்கப் போராட்டங்களும் நிலவுகின்றன. சோசலிசப் பாதைக்கும் முதலாளித்துவப் பாதைக்கும் இடையிலான போராட்டம் நிலவுகிறது. முதலாளித்துவ மீட்சிக்கான அபாயம் நிலவுகிறது என்பதை எடுத்துரைத்த மாவோ பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் வர்க்கப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதன் வாயிலாக-புரட்சியைத் தொடர்வதன் வாயிலாக சோசலிசத்தை படிப்படியாகக் கம்யூனிசத்திற்கு வளர்க்கமுடியும் என்றும் இப்போராட்டத்தில் இறுதிவெற்றி யாருக்கு என்பது இறுதியாகத் தீர்மானிக்கப்பட நெடுங்காலம் ஆகும் என்றும் எடுத்துரைத்தார்.

படிப்பகம்

www.padippakam.com



2.4 சீனத்திலும், இரசியாவிலும் முதலாளித்துவத்தை பகிரங்கமாக மீட்டமைத்த புரட்டல்வாதக் கும்பல்கள் முதலில் சோசலிச சமுதாயத்தில் வர்க்கங்களும், வர்க்கப் போராட்டமும் நிலவுவதையும், ~~தொடர்ந்து~~ பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் புரட்சியை தொடர்ந்து நடத்துவதன் தேவையையும் மறுப்பதிலிருந்தே தொடங்கினர். எனவே சோசலிச சமுதாயத்தில் வர்க்கப் போராட்டம் பற்றிய மாவோவின் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்வது ஒரு சமுதாயம் தொடர்ந்து சோசலிசமாக நிலவுவதற்கு முதல் நிபந்தனையாகும்.

2.5 குருச்சேவ் கும்பல் ரசியாவைக் கைப்பற்றியதையடுத்து சோசலிச முகாம் இல்லை என்ற நிலை உருவாகியது; டெங் கும்பல் சீனாவை கைப்பற்றியதையடுத்து சோசலிச நாடுகள் இல்லை என்ற நிலை உருவாகியிருக்கிறது.

2.6 இது சோசலிசத்திற்குப் பெரும் பின்னடைவுக் காலமாகும். இது உலகம் முழுவதும் போராடும் உழைக்கும் மக்களுக்கும் தேசங்களுக்கும், நாடுகளுக்கும் பேரிழப்பாகும்.

2.7 சோசலிசத்தின் தோல்வி ஏகாதிபத்தியவாதிகளுக்கு பெரும் மகிழ்ச்சியை உருவாக்கியிருக்கிறது. அவர்கள் சோசலிசமும், மார்க்சியமும், காலாவதியாகி விட்டது; அதன் தோல்வி நிருபிக்கப்பட்டு விட்டது; சோசலிசமும் கம்யூனிசமும் கற்பனையே; முதலாளித்துவமும் சந்தைப் பொருளாதாரமுமே மனிதகுலத்தின் முன் உள்ள ஒரே வழி என்று பலவாறாக கூக்குரல் இட்டு வருகிறார்கள்.

2.8 எனினும் முதலாளித்துவமும், சந்தைப் பொருளாதாரமும், மீட்டமைக்கப்பட்ட அடுத்த மணி நேரத்திலேயே கடும் நெருக்கடிகளையும் எதிர்ப்பையும் சந்தித்துக் கொண்டிருப்பதைப் பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. முதலாளித்துவமல்ல கம்யூனிசமே மனிதகுலத்திற்கு முன்னுள்ள ஒரே தீர்வு என்பதை மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டிக் கொண்டிருக்கின்றன.

2.9. சோசலிசத்தின் தோல்வி குறித்து முதலாளித்துவவாதிகள் என்னதான் கூக்குரல் இட்டாலும் அது தற்காலிகமானதே. விஞ்ஞான சோசலிச சமுதாயம் தோன்றி முழுதாக ஒரு நூற்றாண்டுகூட முடியவில்லை. இதற்கு முந்திய சமுதாய அமைப்புகளோடு ஒப்பிடும்போது இது தோன்றி குறுகிய காலமே ஆகிறது. எந்த ஒரு சமுதாய அமைப்பும் இவ்வளவு குறுகிய காலத்தில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டதோ, முதல் முறையிலேயே நிலை நிறுத்திக் கொண்டதோ இல்லை.

2.10 சோசலிச சமுதாய அமைப்பு மிகக் குறுகிய காலமே நிலவி வந்திருக்கிறது என்றபோதிலும், அது தற்காலிக தோல்வியைச் சந்தித்திருக்கிற போதிலும் அது உலகுக்கு அளித்த சாதனைகளும் படிப்பினைகளும் எல்லையற்றவையாகும். முதலாளித்துவம் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசமாகச் சென்ற ஒரு சகாப்தத்தில் நிலப்பிரபுத்துவத்தை முற்றாக வீழ்த்தி சனநாயக கடமைகளை பெரும்பாலான நாடுகளில் சோசலிசமே சாதித்திருக்கிறது. ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உழைக்கும் மக்களின், ஒடுக்கப்பட்ட மக்களின், நாடுகளின், தேசங்களின் உற்ற நண்பனாகத் திகழ்ந்திருக்கிறது. மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி ஒரு உயரிய சமுதாய நெறியை உருவாக்கியிருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக சோசலிச சமுதாயக் கட்டமைவு குறித்த பல்வேறு படிப்பினைகளை அதுவிட்டுச் சென்றிருக்கிறது.

2.11 தோழர் மாவோ சோசலிச சமுதாயம் குறித்த பல்வேறு கோட்பாடுகளையும் பிரச்சினைகளையும் தொகுத்தளித்திருக்கிறார். எனினும் உலகில் நிலவிய சோசலிச சமுதாய அமைப்புகளின் அனுபவங்கள் -அச்சமுதாயங்களில் நிகழ்ந்த வர்க்கப் போராட்டங்களும்; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் தொடர்ந்து வர்க்கப் போராட்டத்தை நடத்துவதில் உள்ள பிரச்சனைகளும் மேலும் பருண்மையான ஆய்வுகள் மூலம் தொகுக்கப்பட வேண்டும். இரசிய அனுபவங்களை திறந்த மனதுடன் மாவோ விவாதித்தது போல், சீன அனுபவமும் பிற நாடுகளின் அனுபவமும், இரசிய அனுபவமும் கூட விவாதித்து படிப்பினைகள் தொகுக்கப்பட வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



2.12 உலகில் நடைபெற இருக்கும் எல்லா பாட்டாளி வர்க்கப் புரட்சிகளும் சோசலிசக் கட்டுமானம் பற்றிய பிரச்சினையை எதிர் கொள்ளவிருக்கின்றன. எனவே சோசலிச சமுதாயங்களின் அனுபவங்கள் விரிவான ஆய்வுக்கும், விவாதத்துக்கும் உட்படுத்தப் பட்டு அவற்றின் பல்வேறு அம்சங்கள் குறித் தும் அனுபவங்கள் தொகுக்கப்பட வேண்டும். எதிர்கால சோசலிச புரட்சிகளின் வெற்றிக்கு இது அவசியமாகும்.

## 3

## இந்திய தேசம் என்கிற தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியம்

3.1 இந்தியாவில் சனநாயகப் புரட்சியி லிருந்து பிரிக்க முடியாத மிகத் தெளிவான தும், அடிப்படையானதும், எதிரெதிரானது மான இரு அரசியல் போக்குகள் நிலவு கின்றன. முதலாவது, இந்திய தேசியம் என்ற போர்வையில் உள்ள இந்திய ஆளும் வர்க்கங்களின் தரகு - பார்ப்பனிய ஏகாதி பத்திய போக்கு. இது தரகு முதலாளித்துவ பொருளாதாரத்தையும் இந்துப் பார்ப்பனியத் தையும் அடிப்படையாகக் கொண்டுள்ள சன நாயக விரோத பாசிசப் போக்கு ஆகும். இரண்டாவது போக்கு இதற்கு எதிரானது. அது இந்தியாவில் உள்ள வேறுபட்ட மொழி, கலாச்சாரம், வரலாறு கொண்ட பல்வேறு தேசிய இனங்களும் முழுமையான நவீன தேசங்களாக வளர்ந்து வரும் சனநாயகப் போக்கு ஆகும். மிகப் பெரும்பான்மையான தேசிய இன உழைக்கும் மக்களின் நலனை உள்ளடக்கியுள்ள இந்த அரசியல் போக்கு தேசிய பொருளாதாரம், தேசிய அரசுரிமை ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. முதலாவது போக்கை எதிர்த்து இந்த இரண்டாவது போக்குடன் தன்னை இணைத்துக் கொள்ளாமல், இந்தி யாவில் உள்ள எந்த தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கமும் தனது சன நாயகப் புரட்சிக் கடமையை நிறைவேற்ற முடியாது.

3.2 ஆனால் இந்திய ஆளும் வர்க்கங்கள் இந்தியாவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினுடையவும் சுயநிர்ணய உரிமையை - தேசிய அரசுரிமையைப் பறித்து அவை முழுமையான நவீன தேசங்களாக வளரவிடாமல் ஒடுக்கி வருகின்றன. அவற் றின் தேசிய உரிமைகள் அனைத்தையும் பறித்து நசுக்கி வருகின்றன. மேலும் அண்டை அரசுகளையும் மிரட்டிப் பணிய வைத்து தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வரு கின்றன.

3.3 இந்தப் பிற்போக்கான ஏகாதிபத்திய வாதம் இந்திய தேசியம் என்ற போர்வையில் இந்திய ஆளும் வர்க்கங்களால் மூடி மறைக்கப்பட்டு வருகிறது. இந்திய மக்களின் பொதுமொழியாக எதுவும் இல்லாத நிலை யில், இந்தியா ஒரு தேசமோ, இந்திய மக்கள் ஒரு தேசிய இனமோ அல்ல எனினும் அவர்கள் இத்தகைய முயற்சியில் ஈடு பட்டிருக்கிறார்கள்.

3.4 இந்திய ஆளும் வர்க்கங்கள் இந்தியா ஒரு தேசமே என்பதற்கு ஆதாரமாக இந்தியா முழுவதும் மக்கள் ஒரே கலாச்சாரத்தால் பிணைக்கப் பட்டிருக்கிறார்கள் என்றும் இந்த கலாச்சார ஒருமைப்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான வரலாறு கொண்டது என்றும் கூறுகிறார்கள்.

3.5 அவர்கள் கூறும் ஒரே கலாச்சாரம், கலாச்சார ஒருமைப்பாடு என்பது இந்தியா முழுவதும் பரவியிருக்கும் இந்துமதக் 'கலாச் சாரம் என்பதன்றி வேறல்ல. இந்துமதக் கலாச்சாரம் அல்லது கலாச்சார மரபு என்பது பார்ப்பன சாதியை தலைமையிடமாகக் கொண்ட சாதியமுறை சமூக அமைப்பைத் தவிர வெறொன்றுமில்லை. இந்தியாவில் கால் முதல் தலை வரை இச்சாதிய சமூக அமைப்பு பரவியுள்ளது. அதைப் போலவே இச்சாதிய சமூக அமைப்பிற்குத் தெய்வீகத் தன்மையும், புனிதத்தன்மையும் வழங்கும் வேதங்களும், உபநிடதங்களும். தர்மசாத் திரங்களும், இதிகாசங்களும், புராணங் களும், கீதையும் இந்தியா முழுவதும் பரவியுள்

படிப்பகம்

www.padippakam.com



என. இந்திய மக்களைப் பிணித்துள்ள இந்துப் பார்ப்பனிய பண்பாட்டின் ஆதாரங்களாக இவை இருக்கின்றன. எத்தனை ஆன்மீகச் சாயம் பூசப்பட்டாலும் இவற்றின் பார்ப்பனிய ஆதிக்கத்தன்மையை மறைத்து விட முடியாது.

3.6 மேலும் இந்தியாவை ஒரே தேசமாகக் காட்ட அவர்கள் அதற்கென்று பொதுமொழி ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவின் பொதுமொழியாக மாற்ற விரும்பும் மொழி உலக வழக்கில்லாத சமக்கிருத மொழியே ஆகும். இது உலக வழக்கில்லாத மொழியேயானாலும் இந்துமத இலக்கிய மொழியாகவும், இந்துமதத்தில் உயர் இடத்தில் வைக்கப் பட்டிருக்கும் பார்ப்பனப் புரோகித சாதியின் பொதுமொழியாகவும் இருக்கிறது.

3.7 உலக வழக்கில்லாத ஒரு மொழியை உடனடியாகப் பொதுமொழியாக்கும் சாத்தியமில்லை என்பதால் அம்மொழியின் எழுத்துக்களையும், எண்களையும் பெருமளவு சொற்களையும் கொண்டு ஆரியவர்த்தத்தில் மேல்தட்டு சாதி-வர்க்கத்தவர் மொழியாக உருவாக்கப்பட்ட சமக்கிருதமயமாக்கப்பட்ட இந்தி மொழியை இந்தியாவின் பொதுமொழி என்று அறிவித்திருக்கிறார்கள். சமக்கிருத மொழியை தேவ மொழி என்று கூறி அதை இந்திய தேசிய மொழிகளில் ஒன்றாக அறிவித்திருப்பதுடன் அதன் வளர்ச்சிக்காக தனிச் சலுகையுடன் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில இந்தியை மேலும் மேலும் சமக்கிருத சொற்களால் வளப்படுத்தவும் இந்திய மக்கள் அம்மொழியை முழுமையாக ஏற்றுக்கொள்ளும்படி திணிக்கவும் அம்மொழிக்கும் தனிச் சலுகை கொடுத்து பெருமுயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள்.

3.8 வெள்ளை ஏகாதிபத்தியம் இந்தியாவைக் காலனியாக்கியபோது நாடு முழுவதும் நிர்வாக மொழியாக ஆங்கிலத்தைத் திணித்தது. தற்போது ஆங்கிலத்தின் இடத்தை முழுமையாக இந்திமொழி பிடிக்கவும், பின்னர் படிப்படியாக சமக்கிருதம் கைப்பற்றவும் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறார்கள்.

3.9 பார்ப்பன சாதித் தலைமையிலான சாதியமுறை சமூக அமைப்பும் பார்ப்பனிய செல்வாக்கு பெற்ற சமக்கிருத-இந்திமொழி ஆதிக்கமும் 'இந்திய தேசியத்தின்' இந்துப் பார்ப்பனிய சாராம்சத்தை வெளிப்படுத்தும் உண்மைகளாக இருக்கின்றன.

3.10 இந்திய தேசியத்தின் இந்துப் பார்ப்பனிய சாராம்சத்தைப் பாதுகாப்பதில் இந்திய ஆளும் வர்க்கமான தரகுப் பெருமுதலாளிவர்க்கம் தொடர்ந்து மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது. 'தேவ' மொழியும் 'தேவ' மொழியின் செல்வாக்குட்பட்ட இந்தி மொழியும் இந்திய அரசின் தனிச்சலுகைக்குரிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருப்பதும் பார்ப்பனியத்தின் புனிதத்தைப் பாதுகாக்கும், இந்துமத இலக்கியங்களான வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலானவற்றினதும் இந்துமத நிறுவனங்களினதும் புனிதத்தை அரசே இடைவிடாது எல்லா வழிகளிலும் பரப்பிப் பாதுகாத்து வருவதும் இதற்கு உதாரணங்களாகும்.

3.11 இந்திய தரகுப் பெருமுதலாளிகள் தொடர்ந்து பார்ப்பனியத்தைப் பேணுவதன் மூலம் இந்தியாவில் உள்ள பல்தேசிய இனங்களையும் இந்திய தேசியம் என்ற போர்வையில் ஒரே அரசு எல்லைக்குள் அடக்கி வைத்து தமது விரிந்த சந்தையைப் பாதுகாத்துக் கொள்கிறார்கள். மேலும் பார்ப்பனியம் தேசிய இன மக்களை சாதியரீதியில் பிளவுபடுத்துவதால் அவர்கள் வர்க்க உணர்வோ தேசிய இன உணர்வோ பெறாமல் தடுக்கப்பட்டு தொடர்ந்து பின்தங்கிய நிலையில் வைக்கப்படுகிறார்கள், தேசிய மற்றும் சனநாயக இயக்கங்களில் அணிதிரளாமல் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். இது தரகுப் பெருமுதலாளிகளின் சுரண்டலும் கொள்ளையும் இந்தியா முழுவதும் பாதுகாப்பான முறையில் தொடர வழிவகை செய்கிறது.

3.12 இவ்வாறு இந்துமதத்தின் மூலம் இந்தியா முழுவதும் உள்ள சாதியமுறை சமூக அமைப்பில் தமது சாதிய ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ள பார்ப்பன சக்திகளும், தமது விரிந்த சந்தையைப் பாதுகாத்துக் கொள்ள

படிப்பகம்

www.padippakam.com

தரகுப் பெரு முதலாளிய சக்திகளும் இந்திய தேசியம் என்ற போர்வையில் பல்வேறு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையையும் அரசுரிமையையும் பறித்துஅவற்றின் மொழி, கலை, இலக்கிய கலாச்சாரத்தைக் கூட்டாக ஒடுக்கி வருவது ஒரு பிற்போக்கான ஏகாதிபத்தியவாதமே அன்றி தேசியவாதம் அல்ல.

3.13 தரகுமுதலாளித்துவ, பார்ப்பனிய சக்திகளின் இந்த ஏகாதிபத்திய ஒடுக்குமுறை பல்வேறு தேசிய இன மக்களையும் பின்தங்கிய, அரைநிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் தொடர்ந்து வைத்திருப்பதிலேயே பாதுகாப்பு கொண்டிருக்கிறது,எனவே இவை எல்லா தேசிய இனங்களிலும் நிலப்பிரபுத்துவ சக்திகளுடன் பிரிக்க முடியாத கூட்டு கொண்டிருக்கின்றன. மேலும் பார்ப்பனிய சாதியைத் தலைமையாகக் கொண்ட பலபடித்தான சாதியாதிக்கச் சமூக அமைப்பு- அதாவது பார்ப்பனிய சமூக அமைப்பு- இந்தியாவில் முதலாளியத்திற்கு முந்திய பின்தங்கிய நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுகளில் குறிப்பான தன்மையைக் கொண்டிருக்கிறது. நிலப்பிரபுத்துவ சக்திகள் சாதியாதிக்க முறையில் உழவர்களின் உழைப்பை இலவசமாய் உறிஞ்சிட இது வகை செய்கிறது. இவ்வாறு நிலப்பிரபுத்துவ ஆதிக்கமும், பார்ப்பனிய சாதி ஆதிக்கமும் பிரிக்க முடியாததாயிருக்கிறது.

3.14 இந்தியா ஒரு அரைக்காலனி நாடு என்று இ. பொ. க. (மா-லெ) வரையறுத்திருக்கிறது. இவ்வரையறுப்பு இந்தியாவின் பெயரளவிலான அரசியல் சுதந்திரம் மற்றும் ஏகாதிபத்திய சார்பை தெளிவுபடுத்துகிறது. ஆயினும் அது இந்திய தேசியம் என்ற போர்வையில் பல்வேறு தேசிய இனங்களின் அரசுரிமையையும் ஒடுக்கி ஒரு ஏகாதிபத்தியத் தன்மை பெற்றிருப்பதையும் அதன் இந்துப் பார்ப்பனியத் தன்மையையும் வெளிப்படுத்துவதில்லை. எனவே இந்தியாவை தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்று வரையறுப்பதே சரியானதாகும். இதில் தரகு என்பது அரைக்காலனி என்பதன் ஏகாதிபத்திய சார்பு மற்றும் பெயரளவிலான சுதந்திரம் என்ற வரையறைகளை உள்ளடக்கி இருப்பதுடன் தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்பது தரகு முதலாளித்துவ பார்ப்பனிய சக்திகள் பல்வேறு தேசிய இனங்களின் அரசுரிமையை மறுத்து ஏகாதிபத்திய ஒடுக்குமுறையைச் செலுத்தி வருவதையும் வெளிப்படுத்துகிறது. மேலும் இந்தியா ஒரு அரைக்காலனி அரைநிலப்பிரபுத்துவ நாடு என்ற வரையறுப்பு-ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்திய தேசியம் என்கிற நாட்டின் பல்தேசிய இனப் பண்பை மறுக்கும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் என்பதால் தவறான வரையறுப்பாகும்.

3.15 இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்கள் இருக்கின்றன என்று ஏற்றுக்கொள்வதும், அவற்றின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்வதும் மட்டுமே இந்த ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திற்கு முடிவுகட்டிவிடுவதில்லை. இதற்கு முடிவுகட்டுவதற்கு அரைக்காலனி - அரைநிலப்பிரபுத்துவம் என்ற வரையறை தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் என்ற வரையறையாக மாற்றப்படுவது அவசியமாகும்.

## 4

## இந்தியாவில் சனநாயகப்புரட்சியும் தேசிய விடுதலையும்

4.1 இந்தியாவில் சனநாயகப்புரட்சிக் கட்டத்தில் இருக்கும் பல்வேறு தேசிய இனங்களும் தமக்கென தனித்தனியான மக்களையும் மொழியையும் பிரதேசத்தையும் கலாச்சாரத்தையும் வரலாற்றையும் பெற்றுள்ளன. மேலும் அவை நவீன தேசங்களாக உருவாகும் நிகழ்ச்சிப் போக்கில் இருக்கின்றன. இந்நிகழ்ச்சிப் போக்கின் வெற்றி அத்தேசிய இனங்களில் நடைபெறும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சனநாயகப்புரட்சியின் வெற்றியோடு இணைந்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



4.2 இத்தேசிய இனங்கள் அனைத்தும் இந்திய தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்தால் அரசுரிமை மறுக்கப்பட்ட அடிமை தேசிய இனங்கள் என்பதால் இவற்றில் நடைபெறும் ஏகாதிபத்திய எதிர்ப்பு-நில பிரபுத்துவ எதிர்ப்பு சனநாயகப் புரட்சி, இந்திய தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலையடைவதற்கான தேசிய விடுதலையுடன் இணைக்கப்படும்போது மட்டுமே வெற்றிபெற முடியும்.

4.3 இத்தகைய தேசிய விடுதலைப்புரட்சி இயக்கங்களுக்கு ஒவ்வொரு தேசிய இனத்திலும் இருக்கும் ஏகாதிபத்திய மூலதன வரவால் கொழுக்கவிரும்பும் தரகுப் பெரு முதலாளி வர்க்கமும், பார்ப்பனிய சக்திகளும், பின்தங்கிய உற்பத்தி உறவுகளில் உயிர் வாழும் நிலப்பிரபுத்துவ சக்திகளும் எதிராக இருக்கின்றன. தேசிய முதலாளித்துவ சக்திகளோ இத்தகைய தேசிய விடுதலைப் புரட்சி இயக்கங்களைக் கட்டமைக்கும் விருப்பமோ சக்தியோ இன்றி உள்ளன. அவை மக்களின் தேசிய விருப்பங்களைப் பயன்படுத்தி இந்திய தேசியம் என்னும் தரகுப்-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திற்குள் தமது நிலையை உறுதிப் படுத்திக் கொள்ளும் முயற்சிகளைக் கொண்டுள்ளன.

4.4 எனவே ஒவ்வொரு தேசிய இனத்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்திய எதிர்ப்புத்திட்டத்துடன் தேசிய விடுதலை மற்றும் சனநாயகப்புரட்சியை கட்டமைத்து வழிநடத்தும் வரலாற்றுக் கடமை அவ்வத் தேசிய இனங்களிலிருக்கும் பாட்டாளி வர்க்கத்திடமே விடப்பட்டுள்ளது.

4.5 எனவே ஒவ்வொரு தேசிய இனத்திலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்புரத்துவ எதிர்ப்பு, தரகு-பார்ப்பனிய ஏகாபதிபத்திய எதிர்ப்பு தேசிய விடுதலைப் புரட்சியுடன் இணைந்த சனநாயகப் புரட்சியை குறைந்த பட்ச திட்டமாகவும், சோசலிசம், கம்யூனிசத்தை அதிகபட்ச திட்டமாகவும் கொண்டு பாட்டாளி வர்க்கக் கட்சிகள் கட்டப்பட்டு தேசிய விடுதலை இயக்கங்கள் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்.

4.6 புரட்சிக்கு முந்திய இரசியாவும், சீனாவும் சனநாயகப் புரட்சிக் கட்டத்தில் இருந்த பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நாடுகளாக இருந்தபோதிலும் அந்நாடுகளின் பாட்டாளி வர்க்கக் கட்சிகள்தேசிய விடுதலைப் புரட்சி குறித்து இத்தகைய முடிவுகளை முன் வைக்கவில்லை என்பதும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன் நிறுத்திக் கொண்டன என்பதும் உண்மையே. அந்நாடுகளில் பாட்டாளி வர்க்கக் கட்சிகள் தேசிய இனப் பிரச்சினையில் கையாண்ட அதே அணுகு முறைகளை இந்தியாவில் நாம் பின்பற்ற முடியாது என்பதற்குக் காரணம் இந்நாட்டின் பருண்மையான நிலைமைகள் அந்நாடுகளின் நிலைமைகளிலிருந்து மாறுபட்டவை என்பதேயாகும்.

4.7 புரட்சிக்கு முந்திய இரசிய, சீன நாடுகளில் இருந்த தேசிய இனங்களில் ஒடுக்கும் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் என்ற வேறுபாடு இருந்தது. ஆனால் இந்தியாவில் அனைத்து தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு அடிமைப் படுத்தப்பட்ட ஒடுக்கப்படும் தேசிய இனங்களாகவே இருக்கின்றன. இங்கு தேசிய இனங்களை ஒடுக்கி வருவது இந்திய தேசியம் என்ற போர்வையில் உள்ள இந்திய தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியமே - இது ஒரு தேசிய இனம் அல்ல-என்பது முதலாவது வேறுபாடாகும். அடுத்து, அந்நாடுகளில் ஒடுக்கும் தேசிய இனங்களில் பாட்டாளி வர்க்கக் கட்சி பலம் வாய்ந்ததாகவும் புரட்சியைத் தலைமை தாங்கி வழி நடத்துவதாகவும் இருந்ததுடன் பல்வேறு ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வேலைத்திட்டத்தினை முன்வைத்து ஒரே கட்சியில் பல்தேசிய இனப் பாட்டாளி வர்க்க முன்னணிப் படையினரும் இணைய முன்னோடியாய் இருந்தன. இத்தகைய நிலை இந்தியாவில் இல்லை என்பது இரண்டாவது வேறுபாடாகும்.

4.8 ஒரு பின்தங்கிய பல்தேசிய இன நாட்டில் ஒடுக்கும் தேசிய இனத்தில் உள்ள பாட்டாளி வர்க்கக் கட்சியின் பலம் மற்றும் நடத்தையைப் பொருத்தே ஒரே கட்சி, ஒட்டு மொத்தப் புரட்சியா அல்லது தனிக் கட்சி, தேசிய விடுதலைப் புரட்சியா என்பது

படிப்பகம்

www.padippakam.com



தீர்மானிக்கப்படுகிறது. ஏனெனில் ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் பலமாக புரட்சிக்குத் தலைமை தாங்குவதாக இருக்கும்போது அதன் வெற்றி பிற ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய விடுதலைக்கும் வழிவகுத்து விடுகிறது. இது ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் பாட்டாளிவர்க்கக் கட்சிகள் தமது தேசிய, சனநாயகக் கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உதவி துரிதப்படுத்துவதாக அமைவதால் அவை ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கம் அளிக்கும் சுயநிர்ணய உரிமை பற்றிய உறுதிமொழியை ஏற்று ஒரே கட்சி, ஒட்டுமொத்தப் புரட்சியில் இணைவது சாத்தியமும் சரியும் ஆகிறது. ஒடுக்கும் தேசிய இனப் பாட்டாளி வர்க்க இயக்கம் தலைமைதாங்கும் பலமான நிலையில இல்லாதபோது அல்லது ஒடுக்கும் தேசிய இனமே இல்லாத நிலையில் இத்தகைய சாத்தியப்பாடுகள் எவையும் இல்லை. மேலும் ஒரு ஒடுக்கப்படும் தேசிய இனப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றி மட்டுமே பிற ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் தேசிய விடுதலைக்கும் வழி வகுப்பதாக இருக்க முடியாது என்பதால் இத்தகைய நிலையில் ஒரே கட்சி, ஒட்டுமொத்தப் புரட்சி என்பது சாத்தியமற்றதும், தவறானதும் ஆகும்.

4.9 இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லாததால் (அதில் பலமான பாட்டாளி வர்க்க இயக்கம் இருக்கிறதா என்ற பரிசீலனைக்கே இடமில்லை) இங்கு ஒரே கட்சி, ஒட்டு மொத்தப்புரட்சி என்ற பிரச்சனைக்கே இடமில்லை. இத்தகைய சிந்தனைகள் இந்தியாவில் தேசிய விடுதலையையும் சனநாயகப் புரட்சியையும் நிறைவேற்ற உதவுவதற்கு பதில் ஊறுவிளைவிக்கவே செய்யும். இங்குள்ள ஒரே வழி ஒவ்வொரு தேசிய இனப்பாட்டாளி வர்க்கமும் தமது சொந்தக் கட்சியைக் கட்டி தேசிய விடுதலையுடன் இணைந்த வடிவில் சனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதன்றி வேறில்லை.

4.10 அதே நேரத்தில் இங்கு எல்லா தேசிய இனங்களையும் ஒடுக்கும் ஒரு பெரிய தேசிய இனம் இல்லை எனினும் ஒடுக்கப்படும் பெரிய தேசிய இனங்களால் ஒடுக்கப்படும் சில சிறிய தேசிய இனங்கள் இருக்கின்றன. (உ.ம் மேற்கு வங்கத்தில் கூர்க்கா, அசாமில்போடோ போன்றவை) இத்தகைய பகுதிகளில் ஒடுக்கப்படும் பெரிய தேசிய இனத்தில், அதனால் ஒடுக்கப்படும் சிறிய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் பலமான பாட்டாளி வர்க்கக் கட்சிகள் இருக்குமாயின் அவ்விரு தேசிய இனப் பாட்டாளிகளுக்கும் ஒரே கட்சி ஒட்டுமொத்தப்புரட்சி என்பது சாத்தியமாவதும், சரியானதுமாகும்.

4.11 இந்தியாவில் ஏகாதிபத்தியமும், நில பிரபுத்துவமும், தரகு -பார்ப்பனிய ஏகாதிபத்தியமும் முற்றாக வீழ்த்தப்பட்ட பின் அது இன்றைய எல்லைகளுடன் பல்வேறு தேசிய குடியரசுகளின் ஒன்றியமாக நீடிக்குமா அல்லது தேசிய குடியரசுகளின் பல்வேறு ஒன்றியங்களாக மாறுமா அல்லது பல்வேறு தேசிய குடியரசுகளாக இருக்குமா என்பன போன்றவை எல்லாம் அவை தமது தேசிய விடுதலைப் புரட்சியை நிறைவேற்றிக் கொண்டபின் அவற்றின் சுயவிருப்பில் தீர்மானிக்கக்கூடியவையாகும். அவ்வாறில்லாத அரசு எல்லைகள் குறித்த எந்த வேலைத்திட்டமும் ஏகாதிபத்தியவாதமே ஆகும்.

## 5

## இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் ஏகாதிபத்திய பொருளாதாரவாதம்

5.1 இந்தியப் பொதுவுடைமை இயக்கம் இந்திய தேசம் என்பதன் உண்மைப் பொருளை தொடக்கம் முதலே உணர்ந்து கொண்டிருக்கவில்லை. இந்துப் பார்ப்பனியத்தை அடிப்படையாகக் கொண்டு இந்திய தேசம் என்ற கருத்தை காங்கிரசுக் கட்சி உருவாக்கிக் கொண்டது. இதற்கு மாறாக ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ

படிப்பகம்

www.padippakam.com



எதிர்ப்பு அடிப்படையில் இந்திய தேசம் என்ற கருத்தை இந்தியப் பொதுவுடைமை இயக்கம் கொண்டிருந்தது.

5.2 நவீன தேசங்கள் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சனநாயக எழுச்சிகளிலேயே உருவாயின. ஏகாதிபத்திய சகாப்தத்தில் இவ் எதிர்ப்பு ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகவும் மாறியது. இவ் எழுச்சிகளை முதலாளித்துவ வர்க்கம் தலைமை ஏற்று நடத்த இயலாத நிலையில் அல்லது சமரசமாகச் சென்றுவிடும் நிலையில் முதலாளித்துவ சனநாயக எழுச்சிகளை மேற்கொண்டு சோசலிசப் புரட்சிக்கு வழியமைக்கும் கடமை பாட்டாளி வர்க்கத்தை எதிர்கொண்டது.

5.3 தேசிய எழுச்சி என்பது வெறும் நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு அல்லது நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பது மட்டுமல்ல இது வெறும் பொருளாதார அம்சம் மட்டுமே. மொழிமுதலான தேசிய இன பொதுப்பண்புகளைக் கொண்ட பிரதேச மக்களுடன் இந்த பொருளாதார அம்சம் இணைக்கப்படும்போது மட்டுமே தேசமும், தேசிய எழுச்சிகளும் சாத்தியமாகும். மொழி முதலான இனக்கூறுப் பொதுப் பண்புகளை மறுத்து பொருளாதார அம்சங்களை மட்டும் கொண்டு அல்லது பொருளாதார அம்சங்களுடன் மத ஒருமைப்பாடு போன்ற பொது அம்சங்களை இணைத்து நவீன தேசங்களோ தேசிய எழுச்சிகளோ நிகழ முடியாது.

5.4 மொழி முதலான இனக்கூறுப் பொதுப் பண்புகளைக் கைவிட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு என்ற பொருளாதார அம்சத்தை மட்டும் சார்ந்து நின்று இந்திய தேசியம் என்ற கருத்தை இந்தியப் பொதுவுடைமை இயக்கம் உருவாக்கிக் கொண்டது. ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் ஆகும். காரணம், இது இந்தியாவில் பல்வேறு தேசிய இனங்களும் முழுமையான அரசுரிமை பெற்ற நவீன தேசங்களாக மாறும் நிகழ்ச்சிப் போக்கில் இருக்கின்றன என்பதை, அரசுரிமை பெற்ற நவீன தேசங்கள் சுதந்திரமாக ஒன்றிணைந்தால் கூட அது சுதந்திரமான தேசியக் குடியரசுகளின் ஒன்றியமாகத்தான் இருக்கமுடியுமே தவிர இந்திய தேசியமாக இருக்கமுடியாது என்பதையும் நிராகரித்துவிடுவதால் இது இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் அரசுரிமையை மறுக்கும் ஏகாதிபத்திய வாதமேயாகும். இது ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலபிரப்புத்துவ எதிர்ப்பு என்ற பொருளாதார ஒரு மைப்பாட்டின் அடிப்படையில் முன்வைக்கப் படுவதால் ஏகாதிபத்திய பொருளாதாரவாதமாகும்.

5.5 1942-43 இந்தியப் பொதுவுடைமை இயக்கம் தேசம், தேசிய இனம்பற்றிய மார்க்சியக் கருத்துக்களை முதன்முதலாக அறிந்து கொண்டபின்கூட ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்து விடுபடவில்லை. அது கட்சித்திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை இணைத்துக் கொண்டபோதிலும் இந்திய தேசிய ஒருமைப் பாடு என்ற கண்ணோட்டத்துடனேயே தனது தீர்மானங்களையும் நடைமுறைகளையும் வகுத்துக் கொண்டது.

5.6 காரணம், இந்தியாவில் தேசிய சனநாயகப் பிரச்சினைகளை பருண்மையாக ஆய்வு செய்ததன் மூலமாக அன்றி இரசியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டத்தைப் பின்பற்றியே இ.பொ.க. தனது கட்சித்திட்டதில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானத்தை இணைத்துக் கொண்டது. அதாவது சனநாயகப் புரட்சிக்கும், தேசிய உருவாக்கத்திற்கும் இடையிலான உறவைப் புரிந்து கொண்டு சனநாயகப் புரட்சிக்கு வெற்றிகரமாக தலைமையளிக்கும் தீர்வு என்ற முறையில் அல்ல, 'இந்திய தேசிய' ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்கான போர்த்தந்திரம் என்ற முறையிலேயே இணைத்துக் கொண்டது.

5.7 இ.பொ.க., இ.பொ.க (மா) என இரு கட்சிகளாக இ..பொ. இயக்கம் பிளவு பட்டபின் இரு கட்சிகளுமே இந்திய தேசிய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பது என்ற பெயரில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய தீர்மானத்தைக் கட்சித் திட்டத்திலிருந்து நீக்கிவிட்டன. அவற்றின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சனநாயகம்என்பதெல்லாம் 'இந்திய

படிப்பகம்

www.padippakam.com



தேசிய' ஒருமைப்பாடு என்ற நிபந்தனைக் குட்பட்டதே என இதன் மூலம் அவை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தின. இது அக்கட்சிகளை முற்றிலும் 'இந்திய தேசிய' காவலர்களாக அதாவது தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்தின் காவலர்களாக, முற்றிலும் சீரழிந்த திரிபுவாத பாராளுமன்றவாதக் கட்சிகளாக மாற்றியது.

5.8. இக்கட்சிகளின் திரிபுவாத, பாராளுமன்றவாத போக்குகளை எதிர்த்து உருவான இ.பொ.க. (மா-லெ) தனது கட்சித்திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்ற தீர்மானத்தை மீண்டும் இணைத்துக் கொண்டது. இ. பொ. க., இ.பொ. க. (மா) ஆகிய இரு கட்சிகளும் இந்தியப் பெருமுதலாளிகளைத் தேசிய முதலாளிகள் என்று வரையறுத்ததற்கு மாறாக தரகு முதலாளிகள் என்று சரியாக வரையறுத்தது, பாராளுமன்றப் பாதையை நிராகரித்து ஆயுதப் போராட்டப் பாதையை உயர்த்திப்பிடித்தது. இதன்மூலம் அது இந்திய ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான, சமரசப்படுத்த முடியாத கட்சியாகத் தன்னை நிறுத்திக் கொண்டது.

5.9 அதே நேரத்தில் இந்தியா ஒரு அரைக்காலனி - அரைநிலப்பிரபுத்துவ நாடு என்ற கட்சியின் வரையறுப்பு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இந்திய தேசியம் என்கிற ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திற்கு முடிவுகட்டக்கூடிய வரையறுப்பாக இல்லை. கட்சித் திட்டத்தில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை இணைத்துக் கொண்டதுகூட 1942-53 கால கட்சித் திட்டத்திலிருந்ததை மீட்டமைத்துக் கொண்டதே தவிர இந்தியாவின் தேசிய இனப்பிரச்சனை குறித்த பருண்மையான ஆய்விலிருந்து பெறப்பட்ட முடிவல்ல. எனவே கட்சி ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்து மீளாத கட்சியாகவே இருந்தது. கட்சித் திட்டம் காலனியகால ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டம் என்றும், அரசியல் தீர்மானங்கள் இந்திய அரசியல் நிலைமைகளை தேசிய நிலைமைகள் என்றுமே வர்ணித்தன.

5.10 ஏகாதிபத்திய பொருளாதாரவாதம் கட்சியை எந்த தேசிய இனத்துடனும் அதன் தேசிய, சனநாயக இயக்கங்களுடனும் அதன் வரலாற்றுடனும் ஒட்டாத, அதனால் மிகப்பெரும்பான்மையான தேசிய இன உழைக்கும் மக்களிடமிருந்து தனிமைப்பட்ட தேசிய சூனியவாதக் கட்சியாக்கியது. இ. பொ. க., இ. பொ. க. (மா) இந்திய தேசிய பாதுகாவலர்களாகி தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியக் கட்சிகளாக சீரழிந்து விட்ட பின்னர் தோன்றிய இ. பொ. க. (மா-லெ) தனது இடது தீவிரவாதத்தால்— ம. தி. அமைப்பு, இயக்கம் மறுப்பு, தனிநபர் அழித்தொழிப்பு போன்றவற்றால்— முற்றிலும் மக்களிடமிருந்து தனிமைப்பட்டதுடன் பல்வேறு குழுக்களாகவும் சிதறுண்டது. அதன் தேசிய சூனியவாதம் கட்சி மக்களிடமிருந்து தனிமைப்படுவதற்கு காரணமானது மட்டுமின்றி புரட்சிகர அறிவுத்துறையினர் தேசிய சூனியவாத - ஏகாதிபத்திய வாத தத்துவப் போக்குகளுக்குப் பலியாகவும் காரணமாகியது.

5.11 ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்தின் விளைவான தேசிய சூனியவாதம் கட்சியில் தத்துவ வறட்சி, வறட்டுவாதம் வரலாறு பற்றிய அறியாமை, அனுபவவாதம் ஆகியவற்றுக்கும் காரணமாகியதுடன் இயக்கத்தின் தன்னியல்பான வேலைமுறைக்கும் காரணமாகியது. இ. பொ. க., இ. பொ. க. (மா) மற்றும் இ. பொ. க. (மா - லெ)யின் எந்தப் பிரிவும் தன்னியல்பான வேலைமுறைக்கு விதிவிலக்கு அல்ல.

5.12 ஒரு புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு உணர்வுப் பூர்வமாக மக்களைத் தயாரிக்காத எந்த வேலைமுறையும் தன்னியல்பான வேலைமுறையே. இ. பொ. க., இ. பொ. க. (மா) ஆகிய இரண்டும் திரிபுவாத பாராளுமன்றவாத அரசியலுக்கு பொருளாதாரப் போராட்டங்கள் மூலம் மக்களைத் திரட்டுவதையே தமது வாழ்நாள் வேலைமுறையாகக் கொண்டுள்ளன. இதற்கு மாறாக பாராளுமன்றவாதத்தை நிராகரித்திருக்கும் இ. பொ. க. (மா - லெ)யின் பிரிவுகள் எந்த தேசிய இனத்தின் தேசிய இயக்கத்துடனும்

படிப்பகம்

www.padippakam.com



ஒட்டாத, ஏகாதிபத்திய எதிர்ப்பு - நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு புதிய சனநாயகப் புரட்சி என்ற தேசிய சூனியவாத அரசியலுக்கு - தூய பொருளாதாரவாத அரசியலுக்கு தீவிர வாத நடவடிக்கைகள் மூலம் மக்களைக் கவரு வது அல்லது பொருளாதார, பகுதிக் கோரிக்கைகளுக்கான போராட்டங்கள் மூலம் மக்களைத் திரட்டுவது என்ற வேலை முறையைக் கொண்டிருக்கின்றன. தேசிய சூனியவாத அரசியல் மக்களை புரட்சிகர மான முறையில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வழிநடத்தும் அரசியல் அல்ல என்பதால் இ. பொ. க., இ.பொ.க. (மா) போலவே இ.பொ.க. (மா - லெ)யின் வேலைமுறையும் புரட்சிகர அரசியலுக்கு மக்களை உணர்வுப்பூர்வமாக அணிதிரட்டு வதற்கானதாக இல்லை. இவ்வாறு இ. பொ. க., இ. பொ. க. (மா)., இ. பொ. க. (மா - லெ)யின் பிரிவுகள் ஆகிய அனைத்து அமைப்புகளும் தமக்குள் திரிபு வாதம் தீவிரவாதம் என்பதில் வேறுபாடு கொண்டிருந்தபோதிலும் தன்னியல்பு வேலைமுறையில் வேறுபாடு கொண்டவை யாக இல்லை.

5.13 இந்தியாவில் பாட்டாளிவர்க்கப் புரட்சி இயக்கத்தின் தோல்விக்கும், தேக்கத் திற்கும் அடிப்படைக் காரணமாய் இருப்பது ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு வேலைமுறை ஆகியவையே. இவற்றுக்கு முடிவுகட்டு வதன் மூலமே இந்தியாவில் பாட்டாளி வர்க்க புரட்சி இயக்கத்தின் வெற்றிக்கு உறுதி ஏற்படுத்த முடியும். இது இந்தியா ஒரு தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்திய நாடு என்று சரியாக வரையறுப்பதன் மூலமே சாத்தியமாகும். ஏனெனில் இந்த வரை யறுப்பு மட்டுமே ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு சனநாயகப் புரட்சியை தேசிய விடுதலையுடன் இணைந்த வடிவில் பாட்டாளி வர்க்கம் தலைமை ஏற்று நடத்த வழிகாட்டுகிறது.

5.14 இந்தியப் பொதுவுடைமை இயக் கத்தின் தோற்றம் இந்தியாவில் புரட்சி இயக்கத்தின் தத்துவமாக மார்க்சிய - லெனினியத்தைப் பிரகடனப்படுத்தியது. அந்தத் தத்துவமே இ. பொ. இயக்கம் பிளவு பட்டபின் இ. பொ.க.வும். இ. பொ. க. (மா)வும் அப்பட்டமான திரிபுவாதிகளாக, ஆளும் வர்க்கக் கட்சிகளாக மாறியபோது அவற்றிலிருந்து ஆயுதப் போராட்டத்தைப் பிரகடனப்படுத்திக் கொண்டு இ.பொ.க. (மா - லெ) தோன்றக் காரணமாகியது. இக் கட்சி இந்திய பெருமுதலாளிகள் பற்றிய சரியான வரையறுப்பை நல்கியது. அதன் தொடர்ச்சியாக இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தில் நிலவும் அனைத்து இடது, வலது திரிபுகளுக்கும் முடிவுகட்டுவதுடன், இந்தியாவை ‘தரகு - பார்ப்பனிய ஏகாதி பத்தியம்’ என்று சரியாக வரையறுப்பதன் மூலம் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத் துக்கும் முடிவுகட்டி ஒவ்வொரு தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கமும் தமது சொந்த தேசிய இனத்தின் விடுதலையுடன் இணைந்த சனநாயகப் புரட்சி திட்டத்துடன் புரட்சி இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் கடமையை இன்று எதிர்கொண்டுள்ளன.

## 6

## தமிழ்நாடு மார்க்சிய - லெனினியக் கட்சியின் தலைமையில் தமிழக விடுதலைப் புரட்சி

6.1 ஒரு தேசிய இனத்திற்கு மற்றெல்லா உரிமைகளையும் விட தேசிய அரசுரிமை தான் மிகப்பெரிய சனநாயக உரிமையாகும். தேசிய அரசுரிமை இல்லாத தேசிய மக்களின் வாழ்க்கை அடிமைத்தனமும் அவலமும் நிறைந்ததென்பதைச் சொல்ல வேண்டிய தில்லை. இந்த உண்மையைப் புறக்கணித்து விட்டு ஒரு தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் சனநாயகப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியாது. இத்தகைய நிலை

படிப்பகம்

www.padippakam.com



யில் தேசிய விடுதலையின் அங்கமாக சனநாயகப் புரட்சி இயக்கத்தை கட்டமைப்பதன் மூலமே அந்த தேசத்தை சோசலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் இட்டுச் செல்ல முடியும். பாட்டாளி வர்க்கம் இதில் தவறிழைத்தால் அம் மக்கள் பூர்சுவா தேசிய வாதத்திற்கோ தேசிய ஒடுக்குமுறைக்கோ பலியாகி சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாததாகும்.

6.2 தமிழ்நாட்டில் இதுவரை இருந்து வந்துள்ள பொதுவுடைமைக் கட்சி அமைப்புகளெல்லாம் இந்தியப்பொதுவுடைமை இயக்கத்தின் கிளைகளாகவே ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் கட்சிகளாகவே இருந்து வந்துள்ளன. ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் கட்சிகளால் ஒரு தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கத்திற்கு புரட்சிகர தலைமையளித்து புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லமுடியாது என்பது வரலாற்று ரீதியிலும் தத்துவார்த்த ரீதியிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

6.3 தமிழ்நாடு, இந்திய தரகு - பார்ப்பனிய ஏகாதிபத்தியத்தால் அரசுரிமை பறிக்கப்பட்டுள்ள-சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டுள்ள ஒரு அடிமை தேசம். எனவே இங்குஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, சனநாயகப் புரட்சியை தமிழ்நாடு தேச விடுதலையுடன் இணைந்த வடிவத்தில் மட்டுமே வெற்றிகரமாக நடத்திமுடிக்க முடியும். இக்கடமையை ஏகாதிபத்திய பொருளாதாரவாதக் கட்சிகளால் நிறைவேற்ற முடியாது.

6.4 எனவே ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், இந்திய தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக்கு எதிராக தமிழ் தேசிய விடுதலையுடன் இணைந்த புதிய சனநாயகப் புரட்சியை குறைந்தபட்ச திட்டமாகவும், சோசலிசம், கம்யூனிசத்தை அதிகபட்ச திட்டமாகவும் கொண்ட தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியை தமிழகப் பாட்டாளி வர்க்கம் கட்ட வேண்டும். இது தமிழ் மக்களின் வளமார்ந்த எதிர்காலத்திற்கு மட்டுமல்ல. பட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்கும் அவசியமாகும்.

6.5 ஏகாதிபத்திய பொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்திலேயே தமிழக பாட்டாளிவர்க்கத்தின் முன்னணிப்படையாக தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியைக் கட்ட முடியும்.

6.6 இப்போராட்டத்தின்போது இனவாதம், சாதிவாதம், சட்டவாதம் போன்ற சந்தர்ப்பவாதப் போக்குகளுக்கு எதிராக விழிப்புடன் இருக்க வேண்டும். சனநாயகப் புரட்சியை முன்னிறுத்தி தேசிய விடுதலையைக் கைவிடுவது தேசிய சூனியவாதம் என்றால்; தேசிய விடுதலையை முன்னிறுத்தி சனநாயகப் புரட்சியைக் கைவிடுவது இனவாதம் ஆகும். இது வரலாற்றில் பிற்போக்கு சக்திகளின் சித்தாந்தமாக வெளிப்படுகிறது. தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு அங்கமான சாதி ஒடுக்குமுறை மற்றும் சாதி வேற்றுமைகளுக்கு எதிரான போராட்டத்தை தேசிய விடுதலைக்கு எதிராக நிறுத்துவதில் அல்லது அதிலிருந்து பிரிப்பதில் சாதிவாதம் வெளிப்படுகிறது. அதே நேரத்தில் சுயநிர்ணய உரிமை என்ற முழக்கத்தை முன்னிலைப்படுத்தி தேசிய விடுதலையைக் கைவிடுகிறது சட்டவாதம்.

6.7 தமிழகத்தில் இன்று இயங்கும் பல்வேறு மா-லெ குழுக்களும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்துக்குப் பலியான தேசிய சூனியவாத அமைப்புகளே. அவை தேசிய இனப்பிரச்சினையில் எடுக்கும் சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளால் அவற்றின் தேசிய சூனியவாதம் மறைந்துவிடவில்லை. போல்சுவிக் குழுவின் ஈழ விடுதலை ஆதரிப்பு, முன்னோடி குழுவின் சுதந்திரத் தமிழ்நாடு முழக்கம், மா. அ. க. வின் அவ்வப்போதைய தமிழ், தமிழ் இனத்தின் மீதான பாசப்பொழிவு ஆகிய இவை எல்லாம் சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளே அன்றி அவற்றை தேசிய சூனியவாதத்திலிருந்து மீட்கும் நிலைப்பாடுகளல்ல. எந்த தேசிய இனத்துடனும் இணைக்கப்படாத இ. பொ. க. (மா-லெ)யின் இந்திய புதிய சனநாயகத் திட்டத்தை வைத்திருக்கும்வரை இவர்களுடைய எந்த நிலைப்பாடும் இவர்களை ஏகாதிபத்தியப் பொருளா

படிப்பகம்

www.padippakam.com



தாரவாதத்திலிருந்தும், தேசிய சூனியவாதத்திலிருந்தும் மீட்க முடியாது.

6.8 ஏகாதிபத்திய பொருளாதாரவாதமும், தேசிய சூனியவாதமும் போர்க்குணமிக்க மக்கள் அமைப்புகள், இயக்கங்கள் குறித்தவிமர்சகர்களே;அதிகமாகப் போனால் போர்க்குணமிக்க பொருளாதாரவாத போராட்டக்காரர்களே அல்லது சில தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடுகிறவர்களே இ.பொ.க. (மா-லெ) பிரிவுகள் என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன. அவை போர்க்குணம் மிக்க புரட்சிகர மக்கள் அமைப்புகள், அரசியல் இயக்கங்களுக்கு தலைமையளிக்கும் சக்தியின்றி இருக்கின்றன.இ.பொ.க. (மா-லெ) அவற்றுக்குத் தலைமை தாங்கும் அமைப்புகளாக வளர்வதற்கு இச்சித்தாந்தங்கள்தான் தடையாக இருக்கின்றன. இ. பொ. க. (மா-லெ)யாக இருக்கும்வரை பட்டாளிவர்க்கம் இச்சித்தாந்தங்களிலிருந்து விடுபடுவதோ போர்க்குணமிக்க போராட்டங்கள், அமைப்புகள் பாலான விமர்சகர்கள் என்பதற்குமேல் தலைமை தாங்கும் சக்தி என்ற நிலைக்கு உயர்வதோ சாத்தியமில்லை.

6.9 தமிழ்நாட்டில் தமிழக விடுதலைக்காக முதன்முதலில் குரல் எழுப்பியவர் (1938) பெரியார். அவர் பார்ப்பனியத்துக்கு எதிராகவும் குரல் எழுப்பினார். ஆனால் அவர் மார்க்சிய-லெனினியத்தை ஏற்றுக் கொண்டவர் இல்லை. ஒரு சனநாயகப் புரட்சியாளராகவோ, தேசிய விடுதலைப் போராளியாகவோ செயல்பட்டவரும் அல்ல. ஒரு சமூக சீர்திருத்தவாதி என்ற நிலைக்குமேல் அவருடைய அரசியல், சமூக செயல்பாடுகள் அமையவில்லை.

6.10 அவர்வழிவந்த திராவிட இயக்கப் பிரிவுகள் எவையும் சனநாயகப்புரட்சி இயக்கங்களாகவோ தேசிய விடுதலை இயக்கங்களாகவோ அமையவில்லை. அவை அனைத்தும் பகுத்தறிவு இயக்கங்களாகவோ இட ஒதுக்கீடுக்கான இயக்கங்களாகவோ அல்லது சட்டமன்ற பாராளுமன்றவாத சீரழிவுக்கட்சிகளாகவோ அமைந்துள்ளன.

6.11 தமிழக தேசிய விடுதலை, தமிழக சனநாயகப்புரட்சி என்ற இலட்சியங்களை தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் அடையவேண்டும் என்ற இலக்குடன் அமைப்பு ரீதியான இயக்க நடவடிக்கைகளை முதன்முதலில் தமிழகத்தில் மேற்கொண்டவர் தோழர் தமிழரசன். அவர் இ. பொ. க. (மா-லெ) இயக்கத்தின் சாரு மஜூம்தாரின் இடது தீவிரவாத நிலைப்பாடுகளிலிருந்து மீளாமலே இந்நிலைப்பாடுகளை மேற்கொண்டார். மேலும் இ. பொ. க. (மா-லெ)யின் ஏகாதிபத்தியப் பொருளாதாரவாதத்துக்கு எதிரான தத்துவார்த்தப் போராட்டத்தில் இந்நிலைப்பாடுகளை அவர் வந்தடையவில்லை. எனவே தத்துவப் பணிகளை புறக்கணித்த இடது தீவிரவாதமே அவருடைய நடவடிக்கைகளாக அமைந்துவிட்டன. இத்தகைய நடவடிக்கைகளால் தமிழகத்தில் ஒரு புரட்சிகர தேசிய,சனநாயக இயக்கத்தை கட்டமைக்க முடியாது.

6.12 மேலும் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு விடுதலையில் ஆர்வம்கொண்ட பல சிறு சிறு அமைப்புகளும் தனிநபர்களும் இருந்தபோதிலும் அவர்களுடைய நிலைப்பாடுகள் மார்க்சிய-லெனினிய தத்துவார்த்த விளக்கத்தின் அடிப்படையில் வந்தடையப் பெற்றவையாகவோ, அவர்கள் விடுதலைக்கான அமைப்பு, இயக்க நடைமுறை கொண்டவர்களாக்வோ இல்லை.

6.13 இந்நிலையில் தமிழகத்தில் ஒரு சக்தி வாய்ந்த தேசிய மற்றும் சனநாயக இயக்கத்தைக் கட்டமைத்து தேசிய விடுதலைப் புரட்சியை எதிர்கால சோசலிச, கம்யூனிச இலட்சியங்களுடன் இணைத்து முன்னெடுத்துச் செல்லும் கடமையை தமிழக பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படையாக கட்டப்படவிருக்கும் தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சி எதிர்கொண்டிருக்கிறது.

6.14 தமிழ்நாட்டில் கட்டப்படும் இக்கட்சி மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையைத் தத்துவ ஆயுதமாகக் கொண்டிருக்கும். அது கட்டமைக்கும் தேசிய விடுதலைப்புரட்சி பாட்டாளிவர்க்க சர்வ

படிப்பகம்

www.padippakam.com



தேசியத்தை வளப்படுத்துவதாகவும் உலக சோசலிசப் புரட்சியின் அங்கமாகவும் இருக்கும். இம் மாபெரும் கடமைக்காக அது தமிழகப் பாட்டாளி வர்க்கத் தலைமையில் தமிழ் மக்களை-தொழிலாளிகள், விவசாயிகள் மற்றும் அனைத்து புரட்சிகர சக்திகளை-தேசிய விடுதலைப் புரட்சிக்கு அணி திரட்ட வேண்டும்.

6.15 தரகு-பார்ப்பனிய சக்திகள் பின்தங்கிய சாதிய, தொல்குல உணர்வில் இருக்கும் மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு பார்ப்பனிய இந்துமத உணர் ஊட்டி அவர்களைத் தமது இந்திய தேசிய ஏகாதிபத்திய நோக்கங்களுக்கு அணிதிரட்டும் முயற்சிகளை இடைவிடாது மேற்கொண்டு வருகின்றன. இதற்கு மாறாக பாட்டாளி வர்க்கம் மிகப் பின்தங்கிய சாதிய, தொல்குல உணர்வில் இருக்கும் மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு தேசிய (இன), வர்க்க உணர்வூட்டி தேசிய விடுதலைப் புரட்சிக்கு அணிதிரட்ட வேண்டும்.

6.16 தமிழ்நாடு தேசிய விடுதலைப் புரட்சிக்கு ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் மட்டுமன்றி தரகு-பார்ப்பனிய இந்திய ஏகாதிபத்தியமும் வீழ்த்தப்பட வேண்டும். இம்மாபெரும் கடமையை இந்தியாவில் இருக்கும் பிற தேசிய இனப்பாட்டாளி வர்க்க கட்சிகளும் எதிர்கொண்டுள்ளன. எனவே, சாத்தியமான அளவில் பிற தேசிய இன பாட்டாளிவர்க்கக் கட்சிகள், சனநாயக இயக்கங்களுடன் நெருங்கிய உறவையும், சாத்தியமான கூட்டுநடவடிக்கை, கூட்டமைப்புகளையும் கட்சி மற்றும் ம.தி.அமைப்புகள் மூலம் உருவாக்க வேண்டும். இது தேசிய விடுதலைப்புரட்சியின் வெற்றியைத் துரிதப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் அவசியமாகும். மேலும் உலக ஏகாதிபத்தியத்திற்கு எதிராக சர்வதேச பாட்டாளிவர்க்கத்துடனும், குறிப்பாக இந்திய விரிவாதிக்க நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் நாடுகளின் பாட்டாளிவர்க்க மற்றும் சனநாயக இயக்கங்களுடனும் நெருக்கமான உறவுகளைப் பேணுவதும் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் தேசிய, சர்வதேசிய இலட்சியங்களுக்கு அவசியமாகும்.

6.17 ஒரு புரட்சியின் வெற்றிக்கு புரட்சிகர கட்சி, அய்க்கிய முன்னணி, மக்கள்படை, ஆகிய மூன்று மந்திராயுதங்களும் அவசியமாகும். அதாவது சித்தாந்தப் போராட்டம், அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம் ஆகியவற்றின் ஊடாகவே எந்த ஒரு புரட்சிகர இயக்கமும் வெற்றிபெற முடியும். ஒரு புரட்சிகர கட்சி இன்றி ஒரு புரட்சிகர அய்க்கிய முன்னணியோ மக்கள் படையோ சாத்தியமில்லை. சித்தாந்தப் போராட்டத்தின் தலைமையிடம் இன்றி அரசியல், ஆயுதப் போராட்டங்களை வெற்றிகரமாக நடத்த முடியாது. இதில் அரசியல் போராட்டம் முக்கியமானதும் ஆயுதப்போராட்டம் தீர்மானகரமானதும் ஆகும்.

6.18 புரட்சிகர மார்க்சிய-லெனினியக் கட்சி சித்தாந்தப் போராட்டத்தின் மூலமே கட்டப்படுகிறது. இதற்கு முதலில் ஒரு சித்தாந்த தளத்தை நிறுவுவது அவசியமாகும். அதன் மூலமே ஒரு புரட்சிகர கட்சியையும், தொடர்ந்து அதன் தலைமையில் ஒரு அரசியல் படையையும், ஆயுதப் படையையும் கட்டி புரட்சியை வெற்றிக்கு இட்டுச்செல்லமுடியும்.

6.19 மார்க்சிய-லெனினிய - மாசேதுங் சிந்தனையை தமிழகத்தின் பருண்மையான நிலைகளுக்கு பொருத்துவோம். நமது தேசிய, சர்வதேசியக் கடமைகளை நிறைவு செய்வோம். தேசியக் கடமைகளை நிறைவு செய்யாதவர்கள் சர்வதேசியவாதிகளாக இருக்க முடியாது. நிச்சயமாக ஏகாதிபத்திய பொருளாதாரவாதிகளும், தேசிய சூனியவாதிகளும் சர்வதேசியவாதிகளாக இருக்க முடியாது. தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியைக் கட்டுவோம்! தமிழக விடுதலைப் புரட்சியை முன்னெடுத்துச் செல்ல உறுதிகொள்வோம்! ❑

படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாடு மார்க்சிய லெனினியக் கட்சியின் தோற்றம்:

# அதன் வரலாற்று முக்கியத்துவம் குறித்து

## மாநாட்டில் பொதுச்செயலர் உரை

தோழர்களே,

இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின், குறிப்பாக இ பொ.க. (மா-லெ) யின் ஏகாதிபத்தியபொருளாதாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு வேலைமுறை ஆகியவற்றுக்கு முடிவு கட்டும் முகமாக கடந்த நான்கு நாட்களாக எழுச்சியுடன் நடைபெற்று வரும் இ.பொ.க. (மா-லெ), த.நா.அ.க. வின் ஆறாவது பிளீனமும், தமிழ்நாடு மா-லெ கட்சியின் முதல் மாநாடும் தற்போது முடிவுறும் தருவாயில் இருக்கிறது. இந்நிலையில் இ.பொ.க. (மா-லெ), த.நா.அ.க.வின் வரலாற்றுத் தொடர்ச்சியாய் உருவாகியிருக்கும் தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் குறித்து நாம் எண்ணிப் பார்ப்பது பொருத்தமாயிருக்கும். முதலாவதாக, நமது கட்சி அமைப்பில் தொடர்ந்து நிலவி வந்த தேக்க நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒரு குணாம்ச ரீதியான வளர்ச்சிக்கு வழிவகுத்திருக்கிறது; இரண்டாவதாக, இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தில் குறிப்பாக மா-லெ இயக்கத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருக்கிறது மூன்றாவதாக, அரசியல் அரங்கில் அரசியல் சக்திகளின் தீர்மானகரமான அணி சேர்க்கைக்கு வழிவகுத்திருக்கிறது என்ற வகையில் த.நா.மா.லெ. கட்சியின் உதயம் வரலாற்று முக்கியத்துவம் உடையதாகும்.

1980களின் தொடக்கத்தில் இ.பொ.க. (மா-லெ)யின் ஒரு குழுவாகத் தோன்றிய த.நா.அ.க.வின் கடந்த பனிரெண்டு ஆண்டுகாலப் பணிகள் குறைத்து மதிப்பிடுவதற்குரியன அல்ல. அவற்றுக்காக நாம் இந்த நேரத்தில் பெருமைப்படுகிறோம். விரல்விட்டு எண்ணத்தக்க ஊழியர்களைக் கொண்டு உருவான இவ்வமைப்பு பல மாவட்டங்களுக்கு விரிவான ஊழியர்களுடன், மக்கள் தளத்துடன் குறிப்பிடத்தக்க அரசியல் சக்தியாய் வளர்ந்திருப்பது நமது பனிரெண்டு ஆண்டுகால கடும் உழைப்பின் பயனேயாகும். நாம் மார்க்சிய-லெனினிய இயக்கத்தில் தமிழகத்தில் வேறு எந்தக் குழுவையும்விட கூடுதலான அரசியல் இயக்கங்களை நடத்தியிருக்கிறோம்; மக்களைத் திரட்டியிருக்கிறோம்; சித்தாந்த அரங்கிலும் செயல்பட்டிருக்கிறோம் அடக்கு முறைகளைச் சந்தித்திருக்கிறோம். எனினும் இவைகள் அனைத்தும் ஒப்பீட்டு அளவிலானவையே. இவை எல்லாம் கடந்த ஆண்டுகளில் தொடர்ந்து அமைப்பின் வளர்ச்சியில் நிலவி வந்த தேக்கத்திற்கு மாற்றாக முடியாது.

நமது அமைப்பின் தொடர்ந்த தேக்க நிலைக்குக் காரணம் நாம் பின்பற்றிய ஊழியர் கொள்கையிலும், வேலைமுறையிலும் நிலவிய தன்னியல்பே என்று நாம் தொகுத்துக் கொண்டிருக்கிறோம். இத்தன்னியல்புக்கு அடிப்படைக் காரணம் இந்தியப் பொதுவுடைமை இயக்கத்தின் பொதுப்பண்பாக இருக்கும் ஏகாதிபத்திய பொருளாதாரவாதமும் அதன் துணை விளைவுகளான தேசிய சூனியவாதமும் தன்னியல்பு வேலைமுறையுமே என்றும் நாம் தொகுத்துக் கொண்டிருக்கிறோம். ஏகாதிபத்திய பொருளாதாரவாதமும், தேசிய சூனியவாதமும் விளைவித்த தத்துவ வறட்சியும்,

படிப்பகம்

www.padippakam.com



இ.பொ.க. (மா-லெ)யின் இடது தீவிரவாத போக்குகளும் புரட்சிகர இயக்கத்தை முற்றிலும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்திவிட்டதுடன், பல்வேறு குழுக்களாகச் சிதறுண்டு போகக் காரணமாகி விட்டதையும் நாம் தொகுத்துக் கொண்டிருக்கிறோம்.

நமது தன்னியல்பு ஊழியர் கொள்கையும், வேலைமுறையும் நமது கட்சி அமைப்பு சிறந்த, திறன் வாய்ந்த அமைப்பாளர்களையும், பிரச்சாரகர்களையும், கிளர்ச்சியாளர்களை யும் கொண்ட அமைப்பாகக் கட்டப்படுவதற்குத் தடையாக இருந்து வந்திருக்கிறது. இத் தடையை அகற்றுவதற்காக நாம் மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் நமது அமைப்பி லும் நிலவிய, இ.பொ.இயக்கத்தின் பொதுப்பண்பாக இருக்கும் ஏகாதிபத்திய பொருளா தாரவாதம், தேசிய சூனியவாதம், தன்னியல்பு வேலைமுறை ஆகியவற்றால் முழுப் பயனளிக்கத் தவறிவிட்டன. கட்சி அமைப்புகள் இறுதிவரை சுயமாக இயங்கும் திறன் பெறுவது ஒரு பிரச்சனையாக நீடித்ததற்கு இவையே அடிப்படைக் காரணமாக இருந்து வந்துள்ளது. இந்த மாநாடு இதற்கு இன்று ஒரு முடிவுகட்டியிருக்கிறது. தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் தோற்றம் நமது கட்சி அமைப்பு ஏகாதிபத்திய பொருளா தாரவாதம் மற்றும் அதன் துணை விளைவுகளான தேசிய சூனியவாதம், தன்னியல்பு ஆகியவற்றைக் களைந்துவிட்டதன் விளைவே. இது நமது அமைப்பு திறன் பெற்ற கம்யூனிஸ்ட் அமைப்பாளர்கள், பிரச்சாரகர்கள், கிளர்ச்சியாளர்களைக் கொண்ட அமைப் பாக வளர்ச்சியடைவதற்கானப் பாதையைத் திறந்து விட்டுள்ள-நமது அமைப்பின் வளர்ச்சி யில் ஒரு குணாம்ச ரீதியான மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய ஒரு வரலாற்று முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும்.

அடுத்து இ.பொ.க. (மா-லெ) தோன்றி தற்போது சற்றேறத்தாழ இருபத்தி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. மனிதகுல வரலாற்றில் இந்த ஆண்டுகள் ஒரு பொருட்டல்ல. எனினும் ஒரு கட்சியின் வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க காலம் என்பதை மறுத்துவிட முடியாது. இந்த இருபத்தி இரண்டு ஆண்டுகளில் கட்சி தோன்றிய முதல் ஓரிரண்டு ஆண்டுகளிலேயே மக்களிடமிருந்து தனிமைப்பட்டு பல்வேறு குழுக்களாக சிதறியபின் மீண்டும் ஒன்று சேர்வதற்கான பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பி னும் இன்றுவரை இ.பொ.க. (மா - லெ) ஒரே கட்சி என்ற நிலை ஏற்படவில்லை. மாறாக, சில குழுக்கள் ஒன்றிணைவது மீண்டும் பிளவுபடுவது, குழுக்களாகவே நீடிப்பது என்பதுதான் இன்றுவரை இருந்து வருகிறது. தொடக்கத்திலிருந்தே பிளவுபட்டிருக்கும் மா-லெ குழுக்களிடையே நிலவி வந்த மூவகை போக்குகள் குறித்து நாம் ஏற்கனவே தொகுத்துரைத்திருக்கிறோம். ஆனால் இந்த இருபத்தி இரண்டு ஆண்டுகளில் இப் போக்குகள் ஒரு தேக்கத்திற்கு வந்து இன்று ஒரு புதிய திருப்பத்தை எட்டியிருக்கிறது என்பதை நாம் தெளிவாகப் பார்க்க முடியும். தோழர் சாருமஜும்தாரின் தீவிரவாதத்தின் தொடர்ச்சியாய் நீடிக்கும் ம.யு. குழு போன்றவை தமக்குள்ளேயே கூட ஒற்றுமையைப் பாதுகாத்துக்கொள்ள முடியாததாய் மேலும் மேலும் பிளவுகளைச் சந்தித்து வருகின்றன. ம.தி. பாதையைப் பின்பற்றிய தோழர்கள் நாகி, சந்திரபுல்லா வழிவந்த குழுக்களும் மீண்டும் மீண்டும் ஒன்றுபடுவதும், பிளவுபடுவதையுமே தமது நிகழ்வுப் போக்காகக் கொண்டுள்ளன. அரசியல் முழக்கங்களுடனான வேலைத்திட்டம் எவையும் பெற்றிராத இவ்வமைப்புகள் பிளவுகள், பின்னடைவுகளிலிருந்து மீளமுடியாத தேக்கத்தில் சிக்கிக் கொண்டுள்ளன. அதே நேரத்தில் அரசியல் அரங்கில் ஒரு சக்தியாய் எழுச்சியுறும் நோக்குடன் அரசியல் முழக்கங்களுடன் முன் வந்த வி.மி. குழு, இ.பொ.க., இ.பொ.க. (மா) வரிசையில் மற்று மொரு திருத்தல்வாதக் கட்சியாய் சீரழிந்துள்ளது. அரசியல் முழக்கங்களுடன் ஒரு வேலைத் திட்டத்தை முன்வைத்து செயல்பட்ட த. நா. அ. க. தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத் திற்கு எதிராக சனநாயகப் புரட்சியுடன் இணைந்த தேசிய விடுதலைக்கு பாட்டாளிவர்க்கக் கட்சி தலைமை தாங்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளது. இவை எல்லாம் இ.பொ.க. (மா-லெ) குழுக்கள் இனியும் பழைய முறையிலேயே நீடிக்க முடியாது என்பதைக் காட்டுவன

படிப்பகம்

www.padippakam.com

வாகும் வெறும் புரட்சிகர வாய்ச் சொற்களுடன் கூடிய தீவிரவாத அல்லது பொருளாதாரவாத நடைமுறைகளுடன் தொடர்ந்து பிளவு பின்னடைவு தேக்க நிலையிலேயே நீடிப்பதா அல்லது தேக்கநிலையிலிருந்து மீளும் முயற்சியில் 'இந்திய தேசியத்தை' பாதுகாக்கும் மற்றுமொரு திரிபுவாதக் கட்சியாக அல்லது தேசிய விடுதலைப் புரட்சிக்குத் தலைமையேற்கும் புரட்சிகர கட்சியாக மாறுவதா என்பதை ஒவ்வொரு குழுவுமே தீர்மானிக்க வேண்டிய கால கட்டம் வந்துவிட்டது. உண்மையில் அவை தமது புரட்சிகர சாராம்சத்தைப் பாதுகாத்து புரட்சிக்குத் தலைமை ஏற்கும் ஒரு பலம் வாய்ந்த அரசியல் சக்தியாய் எழுச்சியுற வேண்டுமானால் ஏகாதிபத்திய பொருளாதாரவாதத்திலிருந்தும், தேசிய சூனியவாதத்திலிருந்தும் விடுபட்டு தேசிய விடுதலைப் புரட்சிக்குத் தலைமை ஏற்கும் தீர்மானத்தை மேற்கொள்வது ஒன்றே வழியாகும். இதை ஒவ்வொரு இ.பொ.க. (மா-லெ) குழுவும் உணர்ந்து கொள்ள வேண்டிய கால கட்டம் வந்து விட்டது என்பதை உணர்த்தும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியே இ.பொ.க. (மா.லெ) த.நா.அ.கு. தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியாக உருவாகியிருக்கும் நிகழ்ச்சியாகும்.

அடுத்து, தமிழ்நாடு மா-லெ கட்சியின் தோற்றம் அரசியல் அரங்கில் ஒரு தீர்மானகரமான பங்காற்றக்கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததென்பதையும் நாம் குறிப்பிட வேண்டும். அரசியல் அரங்கில் இன்று இந்திய தேசியம் என்கிற தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்திய ஆதரவு சக்திகள் வெளிப்படையாகவும் வெவ்வேறு முகங்களிலும் செயல்பட்டு வருகின்றன. அவற்றுக்கு எதிரிடையானவை எனக்காட்டிக் கொள்ளும் பல்வேறு சக்திகளும் கூட வெவ்வேறு வகைகளில் செயல்பட்டு வருகின்றன. தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான மக்கள் சக்தியை அவை தம் தலைமையில் அணிதிரட்டிக் கொண்டுள்ளன. இவை தரகு-பார்ப்பனியத்திற்கு எதிரானவையாகக் காட்டிக் கொள்கின்ற போதிலும், அதற்கு எதிராக குறிப்பிட்ட அளவுக்கு செயல்படுகின்றவையே எனினும் ஏதேனும் ஒருவகையில் இறுதியில் அதனுடன் சமரசம் செய்து கொள்கின்றவையாகவே இருக்கின்றன சாதிவாத, சட்டவாத, இனநலவாத மற்றும் பல்வேறு சீர்திருத்தவாத கோரிக்கைகளுடன் செயல்படும் பல்வேறு அமைப்புகள் இத்தகையனவாக இருக்கின்றன. இ பொ.க. (மா-லெ) குழுக்கள் கூட இத்தகையனவே. இந்நிலையில் தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக பாட்டாளிவர்க்கத் தலைமையிலான தேசிய விடுதலையை முன்வைத்து யுத்தப் பிரகடனம் செய்து ஒரு அமைப்பு தோன்றுவது பல்வேறு அரசியல் சக்திகளையும், ஒன்று தரகு-பார்ப்பனியத்திற்கு ஆதரவு அல்லது தேசியவிடுதலைக்கு ஆதரவு என்ற நிலையை மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்துவதாகும். இவ்விரு முகாம்களுக்கிடையே அவை வேறு நிலைப்பாடுகளை மேற்கொள்ளமுடியாது என்ற நிலையை ஏற்படுத்துவதாகும். தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் தோற்றம் தமிழக அரசியல் அரங்கில் இத்தகைய தீர்க்கமான அணிவகுப்புக்கு வழிவகுக்கக் கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தோழர்களே, தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின் தோற்றம் நமது அமைப்பிலும், இ.பொ.க. (மா-லெ) இயக்க வரலாற்றிலும், தமிழக அரசியல் அரங்கிலும் ஏற்படுத்தவிருக்கும் மாற்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நாம் குறிப்பிடும் போது ஒரு பரவச நிலையிலிருந்து நமது பலவீனங்களை மறந்து கூறிவிடவில்லை-அது நமது கடினமான, இடைவிடாத உழைப்பைச் சார்ந்தே இருக்கிறது என்பதையும்; நமது அமைப்பின் கடந்தகால பலவீனமான அம்சங்களின் எச்சங்களைப் படிப்படியாகக் களைந்து அமைப்பை பலப்படுத்துவதைச் சார்ந்தே இருக்கிறது என்பதையும்; பலம்வாய்ந்த கட்சி, அதற்கான சித்தாந்தத் தளம், சக்திவாய்ந்த தேசிய இயக்கம் - தேசிய விடுதலை இயக்கம் ஆகியவற்றைக் கட்டமைப்பதைச் சார்ந்தே இருக்கிறது என்பதையும் நாம் நன்கறிவோம் என்பதை இங்கு நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன். □

(பொதுச் செயலரின் மாநாட்டு உரையிலிருந்து ஒரு பகுதி)

படிப்பகம்

www.padippakam.com






தி.பி. 2023, நளித் திங்கள் 27-30ல் (1992 டிசம்பர் 12-15)
த.நா.அ.க.வின் ஆறாவது பிளீனமும், த.நா.மா.லெ.க.வின்
முதல் மாநாடும் வெற்றிகரமாக நடைபெற்றது.

படிப்பகம்